



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:259 | 04-04-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி





## இன்றைய பஞ்சாங்கம்

04.04.2026 பங்குனி 21
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.10

திதி:
இன்று காலை 10.09 வரை துவிதியை பின்பு திரிதியை.

நட்சத்திரம்:
இன்று இரவு 9.21 வரை சுவாதி பின்பு விசாகம்.

யோகம் :
இன்று பிற்பகல் 2.09 வரை ஹர்ஷனம் பின்பு வஜ்ரம்.

கரணம்
இன்று காலை 10.08 வரை கரசை பின்பு இரவு 11.00 வரை வணிசை பின்பு பத்திரை

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 06.09 வரை சித்த யோகம் பின்பு இரவு 9.21 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று இரவு 9.21 வரை உத்திரட்டாதி பின்பு ரேவதி.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
காலை 9.00 – 10.30.

எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# பாஜக காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் வெளியீடு

## மயிலாப்பூரில் தமிழிசை, சாத்தூரில் நயினார் போட்டி



**சென்னை, ஏப்.4:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, நயினார் நாகேந்திரன் சாத்தூரிலும், தமிழிசை சவுந்தர்ராஜன் மயிலாப்பூரிலும், எல்.முருகன் அவிநாசி (தனி) தொகுதியிலும், வானதி சீனிவாசன் கோவை தெற்கிலும் போட்டியிடுகின்றனர். அண்ணாமலை தேர்தலில் போட்டியிடவில்லை.

தமிழகத்தில் வரும் 23-ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில், 4 முனைப் போட்டி நிலவும் சூழலில் அதிமுக தலைமையிலான பாஜக, பாமக, அமமுக, தாமக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதில், பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. கடந்த முறை 20 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக இம்முறை 27 தொகுதிகளில் களம் காண்கிறது.

தமிழக பாஜக வேட்பாளர்கள் விவரம்:

1. ஆவடி - ராஜசிம்ம மஹிந்திரா என்ற அஸ்வின் குமார்
2. மயிலாப்பூர் - தமிழிசை சவுந்தர்ராஜன்
3. தளி - நாகேஷ் குமார்
4. திருவண்ணாமலை - ஏழுமலை
5. ராசிபுரம் (தனி) - பிரேம்குமார்
6. மொடக்குறிச்சி - கிருத்திகா சிவகுமார்
7. உதகமண்டலம் - போஜராஜன்
8. அவிநாசி (தனி) - எல்.முருகன்
9. திருப்பூர் தெற்கு - தங்கராஜ்
10. கோவை வடக்கு - வானதி சீனிவாசன்
11. திருவாரூர் - கோவி. சந்துரு
12. தஞ்சாவூர் - முருகானந்தம்
13. கந்தர்வக்கோட்டை (தனி) - உதயகுமார்
14. புதுக்கோட்டை - ராமச்சந்திரன்
15. அறந்தாங்கி - கவிதா ஸ்ரீகாந்த்
16. திருப்பத்தூர் - திருமாறன்
17. மானாமதுரை (தனி) - பால கணபதி
18. மதுரை தெற்கு - ராம ஸ்ரீநிவாசன்
19. சாத்தூர் - நயினார் நாகேந்திரன்
20. ராமநாதபுரம் - நாகேந்திரன்
21. திருச்செந்தூர் - ராதாகிருஷ்ணன்
22. வாசுதேவநல்லூர் (தனி) - ஆனந்தன் ஐயாசாமி
23. ராதாபுரம் - பாலகிருஷ்ணன்
24. நாகர்கோவில் - காந்தி
25. குளச்சல் - சிவக்குமார்
26. பத்மநாபபுரம் - ரமேஷ்
27. விளவங்கோடு - விஜயதரணி

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீபெரும்புதூரில் செல்வப்பெருந்தகை போட்டி



**சென்னை, ஏப்.4:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் மாநில தலைவரான செல்வப்பெருந்தகை ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் அகில இந்திய அமைப்பு பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் வெளியிட்டுள்ளார். அதன்படி, பொன்னேரி (தனி) தொகுதியில் துரை சந்திரசேகர், வேளச்சேரியில் ஆசன் மவுலானா, ஸ்ரீபெரும்புதூரில் (தனி) செல்வப்பெருந்தகை ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

சோளிங்கரில் ஏ.எம். முனிரத்தினம், ஊத்தங்கரையில் (தனி) குப்புசாமி, கிருஷ்ணகிரியில் செல்ல குமார், பென்னாகரத்தில் ஜி.கே.எம். தமிழ் குமரன், ஆத்தூரில் (தனி) எஸ்.கே. அர்த்தனாரி, ஈரோடு(கிழக்கு) தொகுதியில் கோபிநாத் பழனியப்பன், உதகமண்டலத்தில் பி. ராமச்சந்திரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கவுண்டம்பாளையத்தில் சூர்ய பிரகாஷ், சிங்காநல்லூரில் ஸ்ரீநிதி நாயுடு, துறையூரில் (தனி) விச்சு லெனின் பிரசாத், கடலூரில் சந்திரசேகரன், மைலாடுதுறையில் ஜமால் யூனுஸ் முகம்மது ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

அறந்தாங்கியில் டி. ராமச்சந்திரன், காரைக்குடியில் எஸ். மாங்குடி, உசிலம்பட்டியில் டி. சரவணகுமார், சிவகாசியில் கணேசன் அசோகன், திருவாடானையில் ராம கருமாணிக்கம், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஊர்வசி அமிர்தராஜ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

சங்கரன்கோவில் (தனி) தொகுதியில் சங்கை கணேசன், அம்பாசமுத்திரத்தில் வி.பி. துரை, நாங்குநேரியில் ரூபி மனோகரன், கொளச்சல் தொகுதியில் தங்கை கத்பெர்ட், விளவங்கோடு தொகுதியில் டி.டி. பிரவீண், கிள்ளியூரில் ராஜேஷ் குமார் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

### செல்வப்பெருந்தகை ராஜினாமா

திருவள்ளூரில் செய்தியாளர்களிடம் பேசிய செல்வப்பெருந்தகை, "என்னுடைய பணி முழுக்க முழுக்கத் தேர்தல் முடிவு வந்த பிறகு ஸ்ரீபெரும்புதூர் தொகுதி மக்களுக்கு மட்டும்தான். அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. தேர்தல் முடிவுகள் வந்த பிறகு எங்களுடைய அகில இந்திய தலைமையிடம் பேசி, நான் தொகுதி வேலையும் தமிழ்நாட்டு வேலையும் மட்டும்தான் பார்க்கப் போகிறேன்.

முன்னதாக தனது ராஜினாமா கடிதத்தை கட்சித் தலைமையில் செல்வப்பெருந்தகை கொடுத்திருப்பதாக தகவல்கள் வருகின்றன.

## ஓய்வின்றி உழைக்கும் கழகத்தின் செயல்வீரர்களுக்குப் பாராட்டுகள்!



**சென்னை, ஏப்.4:**

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

வெற்றி ஒன்றே இலக்கு! ஓய்வின்றி உழைக்கும் கழகத்தின் செயல்வீரர்களுக்குப் பாராட்டுகள்!

நேற்றிரவு கோவையில் முதற்கட்டப் பரப்புரைப் பயணத்தை நிறைவுசெய்துவிட்டு, சென்னைக்குத் திரும்பினேன்.

இன்று காலை, தமிழ்நாடு முழுவதும் களப்பணியாற்றி மக்களின் நம்பிக்கையை வாக்குகளாக உறுதிசெய்து வரும், கழகச் செயல்வீரர்களுடன் உரையாடி, ஊக்கப்படுத்தினேன்.

மாலை, பாளைங்கோட்டையில் இரண்டாம்கட்டப் பரப்புரைப் பயணத்தைத் தொடரப் புறப்படுகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுச்சேரியில் 'ரோடு ஷோ' நடத்திய பிரதமர் மோடி

**புதுச்சேரி, ஏப்.4:**

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி புதுச்சேரியில் ஒரு கி.மீ. தொலைவுக்கு உச்சக்கட்ட பாதுகாப்புடன் பிரதமர் மோடி ரோடு ஷோ நடத்தினார். இருபுறமும் கட்சியினர், மக்கள் பூக்கள் தூவி வரவேற்றனர்.



புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ், பாஜக கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. வரும் 2026-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணியில் என்ஆர்.காங்கிரஸ் 16, பாஜ 10, அதிமுக 2, லஜக 2 என 30 தொகுதிகளில் போட்டியிட உடன்பாடு ஏற்பட்டு, பிரச்சாரமும் உடனடியாக தொடங்கப்பட்டது.

தேர்தல் பிரச்சாரம் தொடங்கிய நிலையில் கடந்த 30-ம் தேதி எனது வாக்குச் சாவடி, வலிமையான வாக்குச் சாவடி என்ற தலைப்பின் கீழ் கடந்த 30-ம் தேதி தொண்டர்களோடு பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

இதைத்தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் பாஜ சார்பில் நடந்த ரோடு ஷோவில் பங்கேற்க பிரதமர் மோடி இன்று மாலை 4 மணியளவில் சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் புதுச்சேரிக்கு வந்தார். புதுச்சேரி விமான நிலையத்தில் பிரதமரை முதல்வர் ரங்கசாமி, வேட்பாளர்கள் வரவேற்றனர்.

தொடர்ந்து அங்கிருந்து கார் மூலம் கிழக்கு கடற்கரை சாலை, முத்தியால்பேட்டை வழியாக ரோடு ஷோ தொடங்கும் அஜந்தா சந்திப்புக்கு பிரதமர் வந்தார். அங்கு 4.30 மணிக்கு ரோடு ஷோ தொடங்கியது. ரோடு ஷோ வாகனத்தில் பிரதமரின் ஒருபக்கத்தில் முதல்வர் ரங்கசாமி, மறுபக்கம் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பின்னே பாஜ மாநில தலைவர் ராமலிங்கம் ஆகியோர் இருந்தனர். அண்ணா சாலை வழியாக என்டிஏ வேட்பாளர்களுக்கும் ஆதரவு திரட்டும் வகையில் பிரதமர் மோடி கை அசைத்தபடி வாகனத்தில் வந்தார்.

வழி நெடுகிலும் மக்கள் பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். மலர்களை தூவி, "பாரத் மாதா கீ ஜே" என கோஷம் எழுப்பியபடி அவரை வரவேற்றனர். 5.10 மணிக்கு நேருவீதி சந்திப்பில் ரோடு ஷோ நிறைவடைந்தது. சுமார் ஒரு கி.மீ நடந்த ஷோவையொட்டி அஜந்தா சிக்னல் முதல் நேரு வீதி வரை அண்ணா சாலை விழாகோலம் பூண்டது. பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு கொடுக்க பாஜவினர் விரிவான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

மாடிகளில் இருந்து மலர் தூவினர். ஆங்காங்கே சிலம்பாட்டம், ஒயிலாட்டம் என பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது. அந்த கலைஞர்களுக்கு பிரதமர் வணக்கம் தெரிவித்தார்.

மத்திய - மாநில நலத்திட்டங்களில் பயனடைந்த பயனாளிகளும் ஆங்காங்கே பிரதமரை வரவேற்று நன்றி தெரிவித்தனர். தாங்கள் பயனடந்த மத்திய அரசின் எண்களை அவர்கள் பேனர்களாக பிடித்து காண்பித்தனர்.

ரோடு ஷோவின்போது தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு பிரதமர் மோடி திறந்த வேனில் நின்றபடி பொதுமக்களிடம் ஆதரவு திரட்டினார். ரோடு ஷோ முழுக்க மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா வாகனத்தை பின்தொடர்ந்து நடந்தே வந்தார்.

திரும்பவும் 'ரோடு ஷோ' வாகனத்தில் புறப்பட்ட முதல்வர்:

ரோடு ஷோ நிறைவடைந்த காமராஜர் சிலை பகுதியில் சாலையில் துணியால் தடுப்பும், ஓய்வறையும் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தது. பிரதமர் வந்த ரோடு ஷோ வேன் அங்கு வந்து நின்றவுடன் முதல்வர் ரங்கசாமியுடன் பிரதமர் கைகுலுக்கி தனது மகிழ்வை வெளிப்படுத்தினார். முதலில் அவரை இறங்க சொல்லி பிறகு மோடி இறங்கினார்.

பின்னர் சிறிது நேரத்துக்கு பிறகு பிரதமர் காரில் புறப்பட்டார். அங்கு முதல்வர் ரங்கசாமி, மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, அமைச்சர் நமச்சிவாயம், மாநிலத்தலைவர் ராமலிங்கம் ஆகியோர் நின்றனர். நெடுநேரமாகியும் தனது கார் வராததால் ரோடு ஷோ வாகனமும் அஜந்தா சிக்னல் நோக்கி செல்ல திரும்பியது. இதையடுத்து முதல்வர், மத்திய அமைச்சர், அமைச்சர், மாநிலத்தலைவர் ஆகியோர் வாகனத்தில் ஏறி சென்றனர்.

இருபுறமும் நின்ற மக்கள், கட்சியினர் கை அசைக்க அவர்களை பார்த்து முதல்வர் கையசைத்தபடி தனது கார் நோக்கிச் சென்றார். பின்னர் விமான நிலையத்தில் பிரதமரை முதல்வர் வழியனுப்பி வைத்தார். அதன்பின்னர் பிரதமர் மோடி சென்னைக்கு புறப்பட்டு சென்றார்.








# திருக்குறள் குறள்-579

**ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண்
ணோடிப்பொறுத்தாற்றும் பண்பே தலை**



தண்டித்தற்குரிய தன்மை
உடையவரிடத்திலும்
கண்ணோட்டம் செய்து
(அவர் செய்த குற்றத்தைப்)
பொருத்துக் காக்கும்
பண்பே சிறந்தது.

## சிந்திக்க ஒரு நொடி



உதவி என்றழைத்தால்
எல்லாம் உள்ளவரை
விட எதுவுமே
இல்லாதவர்கள்
தான்
முதலில் ஓடி
வருவார்கள்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## பசுமலை பௌர்ணமி கிரிவலம்



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் மேல் ஒலக்கூர் குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்கர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப்பெருமான் மகிமை நிறைந்ததும் சித்தர்களும் ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் கோகிரி சுப்பரமணியசுவாமிகள் திருக்கோவில் பங்குனி மாதம் புதன்கிழமை பிரதி மாத பௌர்ணமி கிரிவலம் வரும் பக்தர்கள் ஏராளமானோர் நேர்த்திகடன் செலுத்தி முருகன் அருளை தரிசித்தனர். இரவு வாண வேடிக்கை சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இரவை பகல்போல் வண்ணமயமாக்கியதை ஆச்சரியத்துடன் பொதுமக்கள் பார்த்தனர். வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. கோவில் நிர்வாகம் சார்பில் ஆதின பரம்பரை அறங்காவலர்கள் சுப்பரமணியசோமயா ஜுலு ராம் குமார் சோமயாஜுலு. **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## கோவில்பட்டியில் சிறப்பு மகளிர் தினம் பட்டி மன்ற விழா!




கோவில்பட்டி சகாராவை தாண்டாத ஒட்டகம் கல்வி பயிற்சி நிறுவனமும் மற்றும் இலக்கியச் சாரலும் இணைந்து மகளிர் தின விழாவை முன்னிட்டு அதிர்ஷ்டசாலிகள் அன்றைய பெண்களா? இன்றைய பெண்களா? என்ற பட்டிமன்றம் கோவில்பட்டி விஸ்வாஸ் மற்றும் சிவதாம் கல்வி அறக்கட்டளை தியான கூடத்தில் நடந்நது. கிருஷ்ணன் அவர்கள் வரேவேற்புரை வழங்கினார். ஞான ஒளி மலர் இந்திராணி அவர்கள் தொடக்க உரை வழங்கினார். முனைவர் பிரபு அவர்கள் வாழ்த்துரை வழங்க நல்லாசிரியர் ஜான் கணேசன் நடுவராகவும் அன்றைய பெண்களே? என்று தேசிய நல்லாசிரியர் விநாயக சுந்தரி, வானொலி புகழ் சுப்புலட்சுமி, எழுத்தாளர் இராஜலட்சுமி அவர்களும் இன்றைய பெண்களே? என்று முனைவர் முருகசரஸ்வதி, முனைவர் செல்வம், முனைவர் பவானி அவர்களும் சிறப்பாக வாதிட்டனர். இன்றைய பெண்களே என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இசை.எப். எம் கோ.சுரேஷ்குமார் நன்றியுரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக தில்லைராஜன் யசோதை, பேச்சியம்மாள், நாகராஜன், கிராம நிர்வாக அதிகாரி முருகானந் , ஆர். எஸ்.ராஜேஷ், கம்பன் கழக தலைவர் துரைப்பாண்டி, விளாத்திகுளம் பாரதி மன்றத் தலைவர் முத்துப்பாண்டி, கவிஞர் நல்லாசிரியர் வரகவி முருகேசன் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள். இலக்கியச் சாரல் நிறுவனர் தினகரன் அடுத்து நடைபெறும "உணவும் வாழ்வும்" என்ற நேரடி விளக்க பயிற்சியின் நோக்கம் பற்றிய செய்தியை அறிவித்து அனைவரும் கலந்து கொண்டு பயன் பெற அழைப்பு விடுத்து கூட்டத்தை நிறைவு செய்தார்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் கோவில்பட்டி கோ. சுரேஷ்குமார்.**

## பெங்களூரில் புனித வெள்ளி மதிய வேளை சிறப்பு பூஜை



புனித வெள்ளி மதிய வேளை சிறப்பு பூஜை மற்றும் வழிபாடு நேற்று பெங்களூரில் புகழ் பெற்ற சிவாஜி நகர் புனித ஆரோக்ய மாதா ஆலயத்தில் அனுசரிக்கப்பட்டது. முன்னதாக சிலுவை பாதை நிகழ்வு பக்தர்கள் சூழ பங்குத் தந்தை வழியாக அனுசரிக்கப் பட்டது. மனு குலத்திற்காக இயேசு கிறிஸ்த்து தன்னையே பலியாக்கிக் கொண்ட நிகழ்வு நினைவு கூறப் பட்டது.! ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடி வந்து வழிபட்டனர்.

## ‘நெல் தூற்றி’ விவசாயிகளிடம் வாக்குகளை சேகரித்த அ.தி.மு.க., வேட்பாளர் முக்கூர்சுப்பிரமணியன் !

**செய்யாறு, ஏப் 04:**



செய்யாறு சட்டமன்றத் தொகுதி அ.தி.மு.க., வேட்பாளர் முக்கூர் சுப்பிரமணியன், கிராமங்களுக்குச் சென்று ’நெல் தூற்றி’ விவசாயிகளிடம் வாக்குகளை சேகரித்தார். செய்யாறு சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட வெம்பாக்கம் அடுத்த சுமங்கலி, கானகம், திருப்பனாமூர், வெங்கட்ராயன் பேட்டை உள்ளிட்ட கிராமங்களில் அ.தி.மு.க., வேட்பாளர் முக்கூர் சுப்பிரமணியன் விவசாயிகளிடம் சென்று ’நெல் தூற்றி’ இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். முன்னதாக வேட்பாளருக்கு காரிய பெருமாள் கோவிலில் பூரண கும்ப மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் கிராம மக்கள் வேட்பாளருக்கு ஆரத்தி எடுத்து வரவேற்பு அளித்தனர். அ.தி.மு.க., சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள தேர்தல் வாக்குறுதிகளை குறித்து கிராம மக்களுக்கு வேட்பாளர் விவரித்தார். வெம்பாக்கம் மேற்கு செயலாளர் வயலூர் ராமநாதன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். நிகழ்ச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஒன்றிய செயலாளர்கள் திருமூலன் ( எ ) பையா குட்டி , அரங்கநாதன், சீ.துரை, மாவட்ட மாவட்ட பொருளாளர் ஆலத்தூர் சுப்பராயன் உட்பட பலர் கலந்து கொண்டனர். நெல் தூற்றி விவசாயிகளிடம் ஓட்டு சேகரித்த முக்கூர் சுப்பிரமணியனை விவசாயிகளும், பொதுமக்களும் ஆச்சரியத்துடன் பார்த்து வியந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடலோரப் பள்ளியில் பிரிவு உபச்சார விழா

**பாம்பன், ஏப்.04**



பாம்பன் சின்னப்பாலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயிலும் ஆறாம், ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது.

பள்ளி தலைமையாசிரியை செல்லம்மாள் தலைமை வகித்தார். ஆறாம் வகுப்பு மாணவி ஷாலினி வரவேற்றுப் பேசினார் ஆசிரியர் ஜெ.ஜே. லியோன் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து, கேக் வெட்டி, மாணவர்களுக்கு பகிரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நிறைவாக, ஏழாம் வகுப்பு மாணவி ரிஸ்விதா நன்றி கூறினார். நிகழ்விற்கான ஏற்பாடுகளை வகுப்பு ஆசிரியர்கள் பிரிஸ்கிலா, மிக்கேல் ராணி செய்து இருந்தனர்.

நிகழ்வில் ஆசிரியர்கள் நிஷா, ஞானசௌந்தரி, சந்திரமதி, லாரன்ஸ் எமல்டா, அமுதவள்ளி, நான்சி, நாகேஸ்வரி கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## ஸ்ரீ ராம நவமி உற்சவம் கருட சேவை அலங்காரம் சிறப்பு வழிபாடு



**சேலம், ஏப்.04:**

சேலம் மாவட்டம் ஆத்தூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு ஸ்ரீராம நவமி உற்சவம் 8-ஆம் நாள் சீதா ராமர் கருட சேவை அலங்காரத்திலும் வண்ணமலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, மயிலிறகு மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் ஸ்ரீராம நவமி பூஜையில் கலந்து கொண்டு சீதா ராமரையும் வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஸ்ரீ ராமர் சீதாதேவி திருக்கல்யாணம் உற்சவம்



**சென்னை, ஏப்04:**

திருவள்ளூர்ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ ராமநவமி 7-ஆம் நாள் சீதாதேவி, ஸ்ரீ ராமர் திருக்கல்யாணம் உற்சவம் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, மாலை மாற்றம் வைபவம், பூ பந்து விளையாட்டு, தேங்காய் உருட்டுவது, தலம்பராலு, சீர்வரிசை தட்டுகள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன்,தீபா ராதனையும், மங்களஹாரத்தி மிக சிறப்பாக நடைபெற்றது. ஆர்யவைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும்பூஜையில் கலந்து கொண்டு ஸ்ரீ ராமர் சீதா தேவியையும் வணங்கி அருள் பெற்றனர். பக்தர்களுக்கு பிரசாதங்கள் தீர்த்தம், ஜடாரி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பங்குனி உத்திர திருவிழா



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (01.04.2026) புதன்கிழமை பங்குனி உத்திரத்தை முன்னிட்டு காலை அலமேலு மங்கை தாயாருக்கு சிறப்பு திருமஞ்சனம், மதியம் 12 மணியளவில் தீப ஆராதனை, அதனைத் தொடர்ந்து ததி ஆராதனம் மற்றும் மாலை 7 மணியளவில் அலமேலு மங்கை தாயாருக்கு சிறப்பு சந்தனக்காப்பு அலங்காரம், தாயார் உள்புறப்பாடு, இரவு 8 மணியளவில் தீப ஆராதனை ஆகிய நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், தர்ம பரிபாலன கமிட்டி, அலமேலு மங்கை தாயார் மாதர் சங்கம் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர். செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

## பங்குனி மாதம் பௌர்ணமி சிறப்பு வழிபாடு


**திருவண்ணாமலை, ஏப்.04:**



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் கல்பூண்டி கிராமத்தில் பங்குனி மாதம் பௌர்ணமியை முன்னிட்டு ஸ்ரீல ஸ்ரீ சந்துரு சாமி அவர்களால் ஸ்ரீ வெக்காளி அம்மன் சக்தி பீடத்தில் வெக்காளியம்மனுக்கு பாலாபிஷேகம், அதர்வண பத்ரகாளி ஹோமம், எலுமிச்சம் பழம் மாலைகளால் அலங்கரித்து, வண்ண மலர்களால் அலங்கரித்து வேத மந்திரங்கள் ஒலிக்க பங்குனி உத்திரம் முன்னிட்டு முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், பிரசாதம்,நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு வெக்காளியம்மனையும், முருகப்பெருமானையும் வேண்டி அருள் பெற்றனர். பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஸ்ரீராமநவமி 7 -ஆம் நாள் உற்சவம் அகல்யா சாப விமோசனம் அலங்காரத்தில்



கடலூர் மாவட்டம் புவனகிரியின் கண் ஸ்ரீ வைஷ்ணவ ஆர்ய வைஸ்ய பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கும் _ பாண்டுரங்க சுவாமி சன்னதியில் விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ஆம் தேதி 27.3.2026 முதல் பங்குனி மாதம் 22 ஆம் தேதி 5.4.2026 முடிய உற்சவம் நடைபெறும். தினமும் காலை 11 மணி அளவில் திருமஞ்சனம் மற்றும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன், அகல்யா சாப விமோசனம் அலங்காரத்துடன், உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் அகல்யா சாப விமோசனம் உற்சவத்தில் கலந்து கொண்டு _ பாண்டுரங்க சுவாமியை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. உபயம். புவனகிரி ஆர்ய வைஸ்ய ஸ்ரீ வைஷ்ணவர்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு அண்ணாமலை வாழ்த்து



இது குறித்து 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். தி.மு.க.வின் ஊழல் மற்றும் துரோகத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்தின் சகோதர, சகோதரிகள் அனைவரும் பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிப்பார்கள்.

வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 210 இடங்களை வெல்ல வேண்டும் என்ற நோக்கத்தில், ஒரு தொண்டனாக, நமது பா.ஜ.க. மற்றும் பிற தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்கள் அனைவருடனும் தோளோடு தோள் நின்று பிரச்சாரம் செய்வேன்" என்று தெரிவித்துள்ளார்.

### நாம் தமிழர் கட்சி வேட்பாளர் திடீர் மாற்றம்

பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகு திக்கு நாம் தமிழர் கட்சியின் வேட்பாள ராக ஏற்கனவே அக்கட்சியின் மாநில மகளிர் பாசறையின் துணைச் செயலாளர் ஜான்சிராணி கடந்த சில மாதங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டிருந்தார். இதனால் அவர் பெரம்பலூர் தொகுதியில் தேர்தல் பிரசாரத்தை தீவிரமாக மேற்கொண்டு வந்தார்.

மேலும் ஜான்சிராணி கடந்த 30-ந்தேதி தனது வேட்பு மனுவை கட்சியினருடன் வந்து பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் அனி தாவிடம் தாக்கல் செய்தார். இந்நிலையில் நேற்று திடீரென்று பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ஜான்சிராணி மாற்றம் செய்யப்பட்டு, அக்கட்சியின் மாநில மகளிர் பாசறையின் ஒருங்கிணைப்பாளர் சுகன்யா(வயது 37) என்பவர் புதிய வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இது கட்சியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.இதையடுத்து சுகன்யா தனது வேட்பு மனுவை நேற்று மாலை 3 மணிக்கு முன்னதாக பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் அனிதாவிடம் தாக்கல் செய்தார். பின்னர் அவர் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள சென்றார். தி.மு.க. பெண் வேட்பாளர்களை மக்கள் ஆதரித்தால் சந்தோஷம் தான் என்று ஜான்சிராணி கருத்து தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனால் ஜான்சிராணி மாற்றம் செய்யப்பட்டு பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி நாம் தமிழர் கட்சிக்கு புதிய வேட்பாளராக சுகன்யா அறிவிக்கப்பட்ட தாக அக்கட்சி வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

### சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. தாக்கத்தை ஏற்படுத்தாது: சபரீசன் பேட்டி




சென்னை வில்லிவாக்கம் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கார்த்திக் மோகன் இந்த தொகுதிக்குட்பட்ட நல் வாழ்வு சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று கலந்துரையாடினார். இந்த கூட்டத்தில் அமைச்சர் சேகர்பாபு, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் மகள் செந்தாமரை, அவரது கணவர் சபரீசனும் கலந்துகொண்டனர்.கூட்டம் முடிந்தவுடன் சபரீசனிடம் நிருபர்கள் பேட்டி கண்டனர்.அப்போது அவர் கூறியதாவது:-

நாங்கள் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். எனவே மிகுந்த நம்பிக்கையுடன் தேர்தல் களத்தை சந்திக்கி றோம். தமிழகம் முழுவதும் தி.மு.க. கூட்டணிக்கு மக்கள் ஆத ரவு சிறப்பாக இருக்கிறது. மீண்டும் தி.மு.க. ஆட்சிதான் அமையும். 100 சதவீதம் தனிப்பெரும்பான்மையுடன் தி.மு.க. ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இந்த தேர்தலில் த.வெ.க. எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத் தாது. 2 தொகுதிகளில் போட்டியிடுவது என்பது அந்த தலைவரின் தன்னம்பிக்கையின்மையை காட்டுகிறது. இவ்வாறு அவர் கூறினார். இந்த தேர்தலில் சபரீசன் நேரடி அரசியல் களத்தில் குதித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'சென்னை எப்போதுமே தி.மு.க.வின் கோட்டைதான் - சென்னை மக்கள் எங்கள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு மீண்டும் ஆதரவு கொடுப்பார்கள்': உதயநிதி ஸ்டாலின்



தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23-ந்தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4-ந்தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட உள்ளன. சட்டசபை தேர்தலில் 4 முனை போட்டி நிலவி வருகிறது. அதன்படி தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, த.வெ.க., நாம் தமிழர் என 4 முனை போட்டி நிலவுகிறது.

தி.மு.க. கூட்டணியில் 70 தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், 164 தொகுதிகளில் தி.மு.க. நேரடியாக போட்டியிடுகிறது. மொத்தம் 175 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். இதில் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் 2-வது முறையாக போட்டியிடுகிறார்.

இந்நிலையில் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கத்தில் உள்ள அலுவலகத்தில் இன்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். தொடர்ந்து, இன்றைய தினம் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். இதற்கிடையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோது உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது;-

"சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி கடந்த முறை என்னை பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தார்கள். கொரோனா காலத்திலும், மழைக் காலத்திலும், வருடத்தின் அனைத்து நாட்களிலும் எனது தொகுதி மக்களுடன் நான் இருந்திருக்கிறேன். இந்த முறையும் பெரிய வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற வைப்பார்கள் என நம்புகிறேன்.

சென்னை எப்போதுமே தி.மு.க.வின் கோட்டைதான். சென்னைக்கு நிறைய திட்டங்களை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு நிறைவேற்றியிருக்கிறது. வடசென்னை வளர்ச்சி திட்டம், சாலை மேம்பாட்டுப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், புதிய மேம்பாலங்கள் என சென்னை மக்களுக்காக நிறைய திட்டங்களை செய்திருக்கிறோம். நிச்சயமாக சென்னை மக்கள் எங்கள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு மீண்டும் ஆதரவு கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## "பாஜகவுடன் நிறைய 'பி' டீம் இருக்கிறார்கள்; கவனமாக வாக்களியுங்கள்" - கனிமொழி



"புதிதாக அரசியல் கட்சி தொடங்கி இருக்கக்கூடியவர்கள் திமுகவை மட்டும்தான் எதிர்த்து பேசுவார்கள். ஒன்றிய அரசை எதிர்த்துப் பேச மாட்டார்கள். பாஜகவுடன் நிறைய பி டீம் இருக்கிறார்கள். கவனமாக வாக்களியுங்கள்" என தவெக தலைவர் விஜய்யை, திமுக எம்பி கனிமொழி விமர்சித்துள்ளார்.

மானாமதுரை திமுக வேட்பாளர் தமிழரசி ரவிக்குமாருக்கு ஆதரவு தெரிவித்து திமுக எம்பி கனிமொழி பரப்புரை செய்தார். அப்போது பேசிய அவர், "இந்த தேர்தலில் நாம் கவனமாக வாக்களிக்க வேண்டும். பாஜகவுடன் நிறைய பி டீம் இருக்கிறார்கள். அவர்கள் நம்மைதான் விமர்சிப்பார்கள். பாஜக என்ன செய்தாலும் அதை எதிர்த்து கேள்வி கேட்க மாட்டார்களா. நம்முடைய பகைவர்கள் என்ற பெருமையை தேடிக்கொள்ள நினைக்கிறார்கள்.

புதிதாக அரசியல் கட்சி தொடங்கி இருக்கக்கூடியவர்கள் திமுகவை மட்டும்தான் எதிர்த்து பேசுவார்கள். ஒன்றிய அரசு எது செய்தாலும் அதை எதிர்த்து பேச மாட்டார்கள். அதேபோல அதிமுகவையும் எதிர்த்துக் கேள்வி கேட்க மாட்டார்கள்.

திமுகவை திரும்பத் திரும்ப சாடி, நம்மைப் பற்றி பேசி பெருமையை தேடிக் கொள்ளலாம் என நினைக்கக் கூடியவர்களை நம்பி யாரும் ஏமாந்து விடாதீர்கள். அது உங்களுடைய வாக்குகளை வீணாக்கக்கூடிய செயல்.

வரவிருக்கும் தேர்தலில் பாஜகவை இந்த தொகுதியில் முறியடிப்போம் பாஜகவுக்கு ஒரு பிடி மண் கூட தமிழகத்தில் இருந்து கிடைக்காது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 10 பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத தேமுதிகவுக்கு 10 சீட் : நடிகை விந்தியா

பத்து பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத தேமுதிகவுக்கு திமுக பத்து சீட் கொடுத்துள்ளது. மானம், ரோஷம் உள்ள திமுகவினர் இம்முறை அதிமுகவுக்கு வாக்களிப்பார்கள் என்று நடிகை விந்தியா ஆவேசமாகப் பேசினார்.

தாம்பரம் தொகுதி அதிமுக வேட்பாளர் ராஜேந்திரனை ஆதரித்து நடிகை விந்தியா, கிழக்கு தாம்பரத்தில் நேற்று மாலை பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது: திமுகவில் தாம்பரம் தொகுதியில் ராஜாவுக்கு சீட் தராததால் அவரது ஆதரவாளர்கள் கேட்டதற்கு, "இரண்டு மூன்று முறை இருந்துட்டாரு இல்ல அதன் பிறகு என்ன" எனக் கேட்டு கேவலப்படுத்தி தனது சொந்தக் கட்சிக்காரர்களையே அவமானப்படுத்தியுள்ளார் டி.ஆர்.பாலு.

பத்து பைசாவுக்கு கூட பிரயோஜனம் இல்லாத தேமுதிகவுக்கு பத்து சீட்டை திமுக கொடுத்துள்ளது. திமுகவில் மானம், ரோஷம் உள்ளவர்கள் இந்த முறை அதிமுகவுக்கு வாக்களிப்பார்கள். ஐந்து வருட திமுக ஆட்சியில் திமுக காரர்களே கடுப்பாகியுள்ளனர். தமிழக பெண்களின் பாதுகாப்பிற்காக அதிமுகவிற்கு வாக்கு அளிக்குமாறு கேட்கிறோம்.

கொடூரமான திமுக ஆட்சி தேவையா? திமுகவை நம்பாதீர்கள். உங்களை காப்பாற்றக்கூடிய நல்ல வாய்ப்பு தான் இந்த தேர்தல். அதிமுக ஆட்சி வந்தால் மட்டுமே பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியும். தமிழகமும், தமிழக மக்களுக்கும் தலைநிமிர்ந்து ஒரு நிமிடம் யோசித்தால் திமுக இருக்காது. இந்த தேர்தலில் பல இடங்களில் அதிமுக கூட்டணியிடம் திமுக கூட்டணி தோல்வியடையும். இவ்வாறு அவர் பேசினார். இதேபோல் சோழிங்நல்லூர் தொகுதியில் போட்டியிடும் கே.பி. கந்தனை ஆதரித்துஜல்லடியன்பேட்டையில் நடிகை விந்தியா, பிரச்சாரம் மேற்கொண்டார்.

## அண்ணாமலைக்கு 'சீட்' மறுப்பு ஏன்? - நயினார் நாகேந்திரன் பதில்



அண்ணாமலை பெயர் பாஜக வேட்பாளர் பட்டியலில் இடம்பெறாதது குறித்த கேள்விக்கு, 'இது அகில இந்திய தலைமை எடுத்த முடிவு' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் பதிலளித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, நயினார் நாகேந்திரன் சாத்தூரிலும், தமிழிசை சவுந்தர்ராஜன் மயிலாப்பூரிலும், எல்.முருகன் அவிநாசி (தனி) தொகுதியிலும், வானதி சீனிவாசன் கோவை தெற்கிலும் போட்டியிடுகின்றனர். அண்ணாமலை தேர்தலில் போட்டியிடவில்லை.

இந்நிலையில், செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறும்போது, "பாஜகவின் அகில இந்திய தலைமை 27 தொகுதிக்கான வேட்பாளர்களை அறிவித்திருக்கிறது. தேசிய ஜனநாயக கூட்டணியில் போட்டியிட்டு 27 தொகுதிகளில் சட்டப்பேரவை தலைவர்களை பெறுவோம். மீண்டும் எல்.எல்.ஏக்களுக்கும், இணை அமைச்சருக்கும் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அகில இந்திய தலைமை சொல்வதை நாங்கள் செய்வோம்" என்றார்.

அப்போது, 'தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை பெயர் பாஜக வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவதாக சொன்னீர்கள், ஆனால் பெயர் இடம்பெறவிலையே' என செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, 'இது அகில இந்திய தலைமை எடுத்த முடிவு' என பதிலளித்துளார்.

இதனிடையே அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில், "2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டப்பேரவைத்தேர்தல்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ள, பாஜகவைச் சேர்ந்த வெற்றி வேட்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

பிரதமர் மோடியின் தொலைநோக்குமிக்க தலைமையின் கீழ், இந்தியா வலிமையுடனும், ஒரு தெளிவான நோக்கத்துடனும் முன்னேறி வருகிறது. தேசம் இவ்வாறு முன்னேறிக் கொண்டிருக்கும் வேளையில், சுயநலம் மட்டுமே கொண்ட திமுக அரசால் தமிழ்நாடு பின்தள்ளப்பட்டுள்ளது.

வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் என்டிஏ கூட்டணி 210 இடங்களை வெல்ல வேண்டும் என்ற இலக்குடன், நமது வெற்றி வேட்பாளர்களான பாஜக மற்றும் பிற என்டிஏ வேட்பாளர்கள் அனைவருக்கும் தோளோடு தோள் நின்று நான் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்வேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## "மோடிக்கு வெள்ளைக் குடை பிடித்த வேந்தர் ஸ்டாலின்" - பழனிசாமி தாக்கு



பிரதமர் மோடியை எதிர்த்துப் பேசிவிட்டு, பிறகு மோடி தமிழகம் வரும்போது வெள்ளைக் குடை பிடித்த வேந்தர் இரட்டை வேடம் போடும் ஸ்டாலின் என தருமபுரி பிரச்சாரத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசினார்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள 5 சட்டப்பேரவைத் தொகுதிகளில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் போட்டியிடும் பாலக்கோடு-கே.பி.அன்பழகன் (அதிமுக), பென்னாகரம்-செல்வம் (பாமக), தருமபுரி-சவுமியா அன்புமணி (பாமக), பாப்பிரெட்டிப்பட்டி-மரகதம் (அதிமுக), அரூர் (தனி)-சம்பத்குமார் (அதிமுக) ஆகியோரை ஆதரித்து அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பிரச்சாரம் செய்தார்.

தருமபுரி வள்ளலார் திடலில் நடந்த பிரச்சார கூட்டத்தில் பழனிசாமி பேசியதாவது: திமுக ஆட்சியில் இன்று பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் தான் ஏற்பட்டுள்ளது. திமுக-வின் நல்லாட்சியை பொறுத்துக் கொள்ள முடியாமல் தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என பழனிசாமி தமிழக அரசின் மீது குறை கூறுகிறார் என முதல்வர் ஸ்டாலின் சொல்கிறார். நாங்கள் குறை சொல்லவில்லை. உங்களின் புள்ளி விவரங்கள் தான் சொல்கிறது.

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக உங்கள் ஆட்சியில் 26 ஆயிரத்து 651 வழக்குகள் பதிவாகி இருப்பதை உங்கள் புள்ளி விவரம் தான் தெரிவிக்கிறது. ஆனால், தமிழகத்தில் பாலியல் சீண்டல்களே இல்லை என ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்யை ஸ்டாலின் பேசி வருகிறார். குழந்தைகள் முதல் பாட்டிகள் வரை இந்த ஆட்சியில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த அரசு தமிழகத்துக்கு தேவையா?

பழனிசாமி பாஜக-வுக்கு அடிமை என்கிறார் ஸ்டாலின். தமிழகத்துக்கு நன்மை எனில் ஆதரவும், எதிரான திட்டம் எனில் எதிர்ப்பும் தெரிவிப்பது தான் எங்கள் நிலைப்பாடு.

திமுக போன்று கூஜா தூக்கும் கட்சியல்ல அதிமுக. பிரதமர் மோடியை எதிர்த்துப் பேசிவிட்டு, பிறகு மோடி தமிழகம் வரும்போது வெள்ளைக் குடை பிடித்த வேந்தர் இரட்டை வேடம் போடும் ஸ்டாலின்.

நீட் தேர்வுக்கு விலக்கு பெற்றுத் தருவோம் என்று 2021 தேர்தலுக்கு முன்பு கூறிய ஸ்டாலினும், அவரது கூட்டணி கட்சியினரும் பெற்றுக் கொடுத்தார்களா? 39 எம்.பி-க்கள் இருந்தும் தமிழக பிரச்சினைகளை தீர்க்க நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கும் திராணி திமுக-வுக்கு இருக்கிறதா? தில்லு, திராணி, தெம்பு என எதுவும் இல்லாத கட்சி திமுக.

## சட்டமன்ற தேர்தல் பாதுகாப்பு தொடர்பாக தமிழக உயர் அதிகாரிகள் ஆலோசனை

சென்னை, ஏப்.4:

தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ம் தேதி நடைபெறுகிறது. இதையொட்டி வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது. இதுவரை தமிழகத்தில் 1,332 பேர் வேட்புமனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். அவர்களில் ஆண்கள் 1,025, பெண்கள் 306, மூன்றாம் பாலினத்தவர் 1 (வில்லிவாக்கம் தொகுதி) ஆகும். இனி 4 மற்றும் 6-ந்தேதியன்று மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய முடியும். 7-ந்தேதி வேட்பு மனு பரிசீலனை நடைபெறும். 9-ந்தேதி வேட்புமனுவை திரும்பப் பெற வாய்ப்பு அளிக்கப்பட்டு, வேட்பாளரின் இறுதி பெயர் பட்டியல் தயார் செய்யப்படும்.

இந்தநிலையில் சட்டமன்ற தேர்தல் பாதுகாப்பு தொடர்பாக தலைமைச்செயலாளர் முருகானந்தம், உள்துறை செயலாளர் தீரஜ்குமார், புதிய டிஜிபி சந்தீப் ராய் ஆலோசனை மேற்கொண்டுள்ளனர். பிரதமர் வருகை, அரசியல் கட்சி தலைவர்களின் பரப்புரைக்கான பாதுகாப்பு குறித்தும், வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நாளன்று பாதுகாப்பு அளிப்பது குறித்தும் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. ஏப்ரல் 6,13-ல் தேர்தல் பாதுகாப்புக்காக 250 கம்பெனி சிஆர்பிஎப் வீரர்கள் வர உள்ளனர்.

## பூந்தமல்லி தவெக வேட்பாளருக்கு நிபந்தனை முன்ஜாமின்

சென்னை, ஏப்.4:

திருவள்ளூர் தெற்கு மாவட்ட தவெக செயலாளராக இருப்பவர் பிரகாசம் என்கிற குட்டி. தவெக வேட்பாளர் பட்டியலை அந்த கட்சியின் தலைவர் விஜய் வெளியிட்ட போது பிரகாசம் என்கிற குட்டி பூந்தமல்லி தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இந்நிலையில் கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு திருவள்ளூரில் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் தவெக மாநில பொதுச் செயலாளர் ஆனந்த் கலந்துகொண்டார். திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளர் பிரகாசம் என்கிற குட்டி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அப்போது மகளிர் அணி நிர்வாகி ஒருவரை பிரகாசம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக புகார் எழுந்தது. இதுகுறித்து த.வெ.க தலைமைக்கு அந்த பெண் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுப்பதாக கூறி நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இதையடுத்து, கடந்த வாரம் திருவள்ளூர் மாவட்ட எஸ்பி அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட பெண் தனதுகணவருடன்வருகைதந்துபாலியல் சீண்டல் அளித்த தவெக வேட்பாளர் பிரகாசம் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் கொடுத்திருந்தார். அவர் புகாரின் அடிப்படையில் திருவள்ளூர் நகர் போலீசார் குட்டி என்ற பிரகாசம் மீது 6 பிரிவின் கீழ் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில், தனக்கு முன் ஜாமின் கோரி சென்னை ஐகோர்ட்டில் தவெக வேட்பாளர் பிரகாசம் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாஅரித்த சென்னை ஐகோர்ட்டு, பிரகாசத்திற்கு நிபந்தனை முன் ஜாமின் வழங்கி உத்தரவிட்டது.

## ஆண்டாள் - ரெங்கமன்னார் திருக்கல்யாண திருவிழா: ஸ்ரீவில்லிபுத்தூரில் பக்தர்களுக்கு கல்யாண விருந்து

ஸ்ரீவில்லிபுத்தூர், ஏப்.4:



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் நேற்று இரவு ஆண்டாள் - ரெங்கமன்னார் திருக்கல்யாணம் கோலாகலமாக நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட 15 ஆயிரம் பக்தர்களுக்கு கல்யாண விருந்து வழங்கப்பட்டது.

108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய இரு ஆழ்வார்கள் அவதரித்த சிறப்புக்குரியது. ஆண்டாள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பிருந்து பங்குனி உத்திர நாளில் ஸ்ரீரெங்கம் ரெங்கமன்னாரை திருமணம் புரிந்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள், கருடாழ்வார் சமேதராக ரெங்கமன்னார் மணக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். இங்கு ஆண்டுதோறும் பங்குனி உத்திர நாளில் ஆண்டாள் - ரெங்கமன்னார் திருக்கல்யாணம் நடைபெறுவது வழக்கம். நேற்று பங்குனி உத்திரத்தையொட்டி ஆண்டாள் கோயில் ஆடிப்பூர கொட்டகையில் உள்ள மணப்பந்தலில் மாலை 4.30 மணிக்கு ரெங்கமன்னார், பெரியாழ்வார் பூர்ண கும்பத்துடன் எழுந்தருளினர். மாலை 5 மணிக்கு ஸ்ரீ ஆண்டாள் அங்கமணிகளுடன் புறப்பாடாகி மணப்பந்தலில் எழுந்தருளினார். தொடர்ந்து பெரியாழ்வார் ஆண்டாளை ரெங்கமன்னாருக்கு கன்னிகா தானம் வழங்கும் வைபவம் நடைபெற்றது. இதில் பெரியாழ்வாரின் 225-வது வம்சாவழியான வேதபிரான் பட்டர் சுதர்சனன் ஆண்டாளை ரெங்கமன்னாருக்கு கன்னிகா தானம் செய்து வைத்தார். தொடர்ந்து திருப்பதி ஸ்ரீனிவாசப் பெருமாள் சீதனமாக அனுப்பிய பட்டு வஸ்திரம் உள்ளிட்ட மங்களப் பொருட்கள் ஆண்டாளுக்கு அணிவிக்கப்பட்டு, இரவு 7 மணிக்கு மேல் திவ்ய தம்பதிகள் ஆண்டாள் - ரெங்கமன்னார் திருக்கல்யாணம் நடைபெற்றது.

அப்போது பெண்கள் மாங்கல்ய கயிறு மாற்றிக் கொண்டனர். பக்தர்களுக்கு மாங்கல்ய கயிறு, மஞ்சள், குங்குமம் பிரசாதம் வழங்கப்பட்டது. இதில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு திருக்கல்யாண விருந்து வழங்கப்பட்டது. விழாவில் ஸ்ரீவில்லிபுத்தூர் மணவாள மாமுனிகள் மடத்தின் சடகோப ராமானுஜ ஜீயர், செயல் அலுவலர் சர்க்கரையம்மாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மேல்மலையனூர் அங்காளம்மன் கோயிலில் பௌர்ணமி பூஜை

சபரிமலை, ஏப்.4:



விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஸ்ரீஅங்காளம்மன் கோயிலில் பங்குனி மாத பௌர்ணமியையொட்டி திருவிளக்கு பூஜை புதன்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி அதிகாலை மூலவர் அம்மனுக்கு பால், தயிர், சந்தனம் உள்ளிட்ட வாசனை திரவியங்களை கொண்டு சிறப்பு அபிஷேகம், மலர்களால் அலங்காரம் செய்து மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து உற்சவர் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, தீபாராதனை நடைபெற்றது. பின்னர் மாலை 6 மணிக்கு திருக்கோயில் வளாகத்தில் உள்ள மண்டபத்தில் 108 பெண்கள் பங்கேற்ற திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதையடுத்து அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் திரளான பெண்கள் பூஜையில் பங்கேற்று அம்மனை வழிபட்டனர்.

ஏற்பாடுகளை திருக்கோயில் உதவி ஆணையர் சக்திவேல், அறங்காவலர் குழுத் தலைவர் ஏழுமலை, அறங்காவலர்கள் சுரேஷ், மதியழகன், பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம், மேலாளர் சதீஷ், மணியம், அண்ணாமலை, காசாளர் மணி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

## மயிலம் முருகன் கோயில் பங்குனி உத்திரப் பெருவிழா

மயிலம், ஏப்.4:



விழுப்புரம் மாவட்டம், மயிலத்தில் உள்ள பிரசித்திப் பெற்ற வள்ளி, தெய்வானை சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் பங்குனி உத்திரப் பெருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான தெப்பல் உற்சவம் புதன்கிழமை இரவு நடைபெற்றது.

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுரம் ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம் ஆளுகைக்குள்பட்ட மயிலம் ஸ்ரீவள்ளி, தெய்வானை சமேத ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரப் பெருவிழா நடைபெறுவது வழக்கம்.

இதன்படி, நிகழாண்டுக்கான இவ்விழா மார்ச் 23-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவை முன்னிட்டு கோயிலில் முருகப் பெருமானுக்கு நாள்தோறும் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, தங்கமயில் உள்பட பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதி உலா நடைபெற்றது.

பங்குனி உத்திரப் பெருவிழாவின் முக்கிய நிகழ்வாக வள்ளி, தெய்வானை சமேத ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக்கல்யாணம் மார்ச் 30-ஆம் தேதியும், தேரோட்டம் 31-ஆம் தேதியும் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து புதன்கிழமை கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடுகளுக்குப் பின்னர் பிற்பகலில் அக்னி குளக்கரையில் பங்குனி உத்திர தீர்த்தவாரி நடைபெற்றது. பின்னர் மலைக் கோயிலிலிருந்து சுப்ரமணிய சுவாமி, சிறப்பு அலங்காரத்தில் அக்னி குளத்துக்கு வந்து மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த தெப்பலில், நள்ளிரவு 12.20 மணிக்கு ஸ்ரீவள்ளி, தெய்வானை சமேதராய் சுப்ரமணிய சுவாமி எழுந்தருளச் செய்யப்பட்டு தெப்பல் உற்சவம் நடைபெற்றது.






## நலம் தரும் மருத்துவம்

## வயிற்று சூட்டை குறைக்க!

வயிற்றுசூடுஎன்பதுஒருபொதுவானபிரச்னை. ஆனால், எளிய உணவு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களுடன் அதனை திறம்பட நிர்வகிக்க முடியும். நீரேற்றத்துடன் இருப்பதும், குளிர்ச்சியான உணவுகளை எடுத்துக் கொள்வதும், செரிமான அமைப்பை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். நீர்ச்சத்து மற்றும் குளிர்ச்சி பண்புகள் மூலம் வயிற்றில் ஏற்படும் எரிச்சல், அசிடிட்டி, நெஞ்செரிச்சல், செரிமான பிரச்னை மற்றும் உடல் வெப்பத்தை உடனடியாக குறைக்க உதவும்.

1) வயிற்றுக்கு குளிர்ச்சி தரும் பொருட்கள்:

இளநீர், நுங்கு, மோர், வெங்காயம், வெள்ளரிக்காய், தர்பூசணி, திராட்சை போன்றவை உடலுக்கு குளிர்ச்சி தருவதுடன் வயிற்றுக்கும் இதம் தரும்.

இளநீர் உடலுக்கு இயற்கையான புத்துணர்ச்சியை அளித்து வெப்பநிலையை சீராக்கும்.

மோர் வயிற்றில் உள்ள அமிலத்தன்மையைக் குறைத்து குளிர்ச்சியை தரும் சிறந்த பானமாகும்.

வெள்ளரிக்காயில் அதிக நீர் சத்து உள்ளதால் உடல் சூட்டை தணித்து குளிர்ச்சியாக வைத்திருக்கும்.

தர்பூசணியில் நீர்ச்சத்து மிகுந்திருப்பதால் வயிற்றுக்கு இதம் தரும்.

புதினா இலைகளை உணவில் சேர்த்துக் கொள்வது வயிற்று எரிச்சலை குறைத்து செரிமானத்தை மேம்படுத்தும்.

2) சாதம் வடித்த கஞ்சி:

இந்த எளிய பாரம்பரிய பானம் உடலுக்கு குளிர்ச்சியை அளிப்பதுடன், ஆற்றலையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும். காலை எழுந்ததும் சாதம் வடித்த கஞ்சியை குடிப்பது வயிற்று சூட்டை போக்க உதவும். சாதம் வடித்த கஞ்சியுடன் மோர், சிறிது உப்பு கலந்து காலையில் குடிப்பது உடல் வெப்பநிலையை சமநிலைப்படுத்தி குடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும். வெறும் வயிற்றில் டீ, காபி போன்ற பானங்களை அருந்துவதை தவிர்த்து விடலாம். சாதம் வடித்த கஞ்சி அல்லது முன்தினம் வடித்த சாதத்தில் இரவு தண்ணீர் விட்டு வைத்து, காலையில் அந்த நீருடன் பழைய சாதத்தைக் கரைத்து சிறிது மோர் கலந்து உப்பு, சின்ன வெங்காயம் 2 பொடியாக நறுக்கியது சேர்த்து சாப்பிட வயிற்று சூடு காணாமல் போய்விடும்.

3) சூட்டை அதிகரிக்கும் காரம் மற்றும் வறுத்த உணவுகள்: காரமான மற்றும் எண்ணெய் பலகாரங்கள், அதிக மசாலா உணவுகள் உடல் சூட்டை அதிகரித்து வயிற்று எரிச்சல், அமிலத்தன்மை (ACIDITY) மற்றும் செரிமானக் கோளாறுகளை உண்டாக்கும். உணவில் உப்பு காரத்தின் அளவை கட்டுக்குள் வைப்பதும், மசாலா உணவுகளுடன் தயிர், வெங்காயம் போன்றவற்றை சேர்த்து சமைப்பதும் வயிற்றில் ஏற்படும் எரிச்சலை தடுக்க உதவும். அத்துடன் காரமான உணவுகள், அதிக எண்ணெய் பலகாரங்கள் மற்றும் காஃபின் கலந்த பானங்களைத் தவிர்ப்பது வயிற்றுச் சூடு மீண்டும் ஏற்படாமல் தடுக்க உதவும்.

## செல்போன் நனைந்துவிட்டதா? அவசரப்பட்டு இந்த 4 தப்புகளை மட்டும் செஞ்சிடாதீங்க...



செல்போன் என்பது தற்போதுஒவ்வொருவருக்கும் அத்தியாவசிய பொருளாக மாறிவிட்டது. கழிவறை முதல் கடைவீதி வரை எங்கு சென்றாலும் செல்போன் இல்லாமல் யாரும் செல்வதில்லை. அத்தகைய செல்போனை பாதுகாப்பதில் அனைவரும் முனைப்பு காட்டுகின்றனர். சில நேரங்களில் மழையில் செல்போன் நனைந்தாலோ அல்லது கைத்தவறி தண்ணீரில்விழுந்துவிட்டாலோ மனம் பதைபதைத்து என்ன செய்வது என்று தெரியாமல் முழிக்கின்றனர். அந்த வகையில் செல்போன் தண்ணீரில்நனைந்துவிட்டால் செய்யக்கூடாதவைகள் குறித்து இப்பதிவில் காண்போம்.

ஈரமான செல்போனை இயக்குவது செலவுக்கு வழிவகுக்கும். செல்போன் ஈரம் ஆகிவிட்டால் உடனே இயங்குகிறதா என அதனை இயக்க முயற்சிப்பதுதவறான செயலாகும். ஏனெனில் செல்போனுக்குள் தண்ணீர் இருக்கும் போது அதனை இயக்குவது ஷார்ட் சர்க்யூட் அபாயத்தை அதிகரித்து செல்போனின் மதர் போர்டை சேதப்படுத்தகூடும்என்பதால் உடனடியாக செல்போனை இயக்குவதை முயற்சிக்கக் கூடாது.

### ஆபத்தான ஹேர் டிரையர் அல்லது ஹீட்டர்

செல்போன் மழையில் நனைந்து விட்டாலோ அல்லது தண்ணீரில் விழுந்து விட்டாலோ உடனடியாக அதனை உலர்த்துவதற்கு ஹேர் டிரையர் அல்லது ஹீட்டர் பயன்படுத்துவது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

ஹேர் டிரையர் அல்லது ஹீட்டரில் இருந்து வரும் அதிகமான சூடான காற்று செல்போனின் உள் பாகங்களையும், பேட்டரியையும் சேதப்படுத்துவதோடு, இதனால் செல்போன் தீப்பிடித்து வெடிக்கும் அபாயம் அதிகம் இருப்பதால் செல்போனை உலர்த்த ஹேர் டிரையர் அல்லது ஹீட்டரை பயன்படுத்துவது கூடாது.

### செல்போனை ஆட்டுவதே தவறு

செல்போனில் உள்ள தண்ணீரை வெளியேற்ற உடனடியாக அதனை வேகமாக உலுக்குவது தவறான செயலாகும். ஏனெனில் செல்போனை உலுக்குவதன் மூலம் தண்ணீர் மேலும் உள்ளே பல இடங்களில் பரவிகூடுதல் சேதத்தை ஏற்படுத்த கூடும் என்பதால் தண்ணீரை வெளியேற்ற உலுக்க முயற்சிக்கக்கூடாது.

### சார்ஜ் போடுவது மிகப்பெரிய தவறு

செல்போன் ஈரமாக இருக்கும் போது அது இயங்குகிறதா எனப் பார்க்க சார்ஜ் செய்வது ஆபத்தான செயலாகும். ஏனெனில் இதனால் கைப்பேசி சேதம் அடைவதோடு மின்னதிர்ச்சியும் தீ விபத்து ஏற்படும் அபாயமும் உள்ளதால் செல்போன் உலர்ந்த பிறகே சார்ஜ் செய்ய வேண்டும்.




### ஈரமான செல்போன் பாதுகாப்பு

செல்போன் ஈரமாகி விட்டால் உடனடியாக அதனை அணைத்துவிட்டு பின்பக்க அட்டையில் உள்ள சிம் கார்டை முதலில் அகற்ற வேண்டும்.

செல்போனில் உள்ள ஈரத்தை உலர்ந்த இடத்திலோ அல்லது அரிசி ஈரப்பதத்தை உறிஞ்சும் என்பதால் அரிசி பாத்திரத்திலோ வைத்து உலர்த்த வேண்டும். மேலும் குறைந்தது 24 மணி நேரம் முதல் 48 மணி நேரம் வரை உலர்த்திய பிறகு இயக்க வேண்டும்.

# "சொந்தக் கதை"




பிரபல டைரக்டர் அர்ஜுன். தொடர்ந்து வெற்றிப் படங்கள், விருதுகள், ரசிகர்கள் என எல்லாமே இருந்தது.
ஆனாலும் அவர் மனதிற்குள் ஒரு வெற்றிடம்.

ஒருநாள்… கூரியரில் ஒரு கவர். அதனுள் பெயரில்லா ஒரு ஸ்கிரிப்ட்.
“யாரு அனுப்பிருப்பாங்க?” யோசித்தபடியே படிக்க ஆரம்பித்தார்.
அது ஒரு காதல் கதை. ஒரு பெண், முழு மனதோடு காதலிக்கிறாள்.
ஒரு ஆண்,அவளை நம்ப வைத்து ஏமாற்றுகிறான். கடைசியில் அவளை விட்டுப் போகிறான்.
கதையில் வரும் சில சம்பவங்கள் அர்ஜுனின் கைகளை நடுங்க வைத்தன.
“இது… இது… என்… சொந்தக் கதை…”
இளமையில் காதலித்து… காரணம் சொல்லாமல் விட்டு விட்டு வந்த அந்தப் பெண்… மாலா.
அவர் உடனே முடிவு செய்தார். “இதைப் படமா எடுக்கணும்.” எட்டு மாதங்களுக்குப் பிறகு, படம் தயாரானது. பிரிமியர் ஷோ.
அரங்கம் முழுக்க கை தட்டல்.பலர் கண்ணீர் துடைத்துக் கொண்டனர்.
அர்ஜுன் மட்டும் அமைதியாக இருந்தார்.

படம் முடிந்ததும்… திரையில் ஒரு வீடியோ ஓடியது.
ஒரு பெண் காமிராவை நேராகப் பார்த்து பேசுகிறாள். அர்ஜுன் உறைந்து போனார்.
அவள்…. மாலா.
“இந்தக் கதை உங்களிடம் சேரும்னு எனக்கு தெரியும்… நீங்க என்னை விட்டுப் போனதுக்கு நான் பழி வாங்கலை… ஆனால் நீங்க ஏன் மாறுனீங்க?ன்னு தெரிஞ்சுக்கணும்…”

அரங்கம் அமைதியானது.

அவள் சிரித்தாள். "நான் இறக்கலை…
உயிரோட தான் இருக்கேன்…அதுவும் இங்கதான் இருக்கேன்"
அர்ஜுனின் கண்கள் பெரிதானது.
அப்போது, ஆடியன்ஸ் நடுவிலிருந்து ஒரு பெண் மெல்ல எழுந்து நின்றாள்.
மாலா.
அவள் மெல்ல நடந்து அவரருகே வந்தாள்.
"காதல் வெற்றி பெறணும்னு அவசியமில்லை…அது உண்மையா இருப்பதுதான் முக்கியம்…”
சொல்லி விட்டு வேகமாய்த் திரும்பிச் சென்றாள்.
அர்ஜுன் அங்கேயே நின்றார். அவருக்குள் ஒரு தீர்ப்பு ஒலித்துக் கொண்டிருந்தது.
“சில காதல்கள் திரும்ப வராது…
திரும்ப வந்தால் அது காதல் இல்லை
.”



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# அந்த காட்சி.



சின்ன சின்ன கைவேலைகளை செய்வதற்கு கூட இந்த வீட்டுல ஆளுங்க இல்ல….என் தலையெழுத்து நான் தனியா கிடந்து இந்த வீட்டுல அல்லாடலம்னு இருக்கு என்று புலம்பிக் கொண்டே பாத்திரங்களை தேய்த்து கொண்டிருந்தாள்; குமரேசன் மனைவி பார்வதி.

தான் குடித்த காபி டம்ளரை கூட கழுவி வைப்பதில்லை. இது ஆண்கள் செய்யற வேலை இல்லை; என்று குமரேசன் ஆவேசமாக பேசுவார்.

இரு மகள்களுக்கும் திருமணம் செய்து வைத்துவிட்ட நிலையில் குமரேசனும், பார்வதியும் மட்டுமே இருந்து வந்தனர். வயதான காலத்திலும், சர்க்கரை நோய் பாதித்த நிலையிலும் சமையல் செய்வதை கூட மிகுந்த சிரமத்தோடு செய்து வந்தாள்.

உதவிக்கு ஆள் இல்லாததால், கடந்த ஆறுமாதங்களாக பார்வதி தனக்கு உதவியாக பாத்திரங்கள் கழுவுவதற்கும், வீட்டை சுத்தம் செய்வதற்கும் கோமதி என்பவளை மாதம் மூவாயிரம் சம்பளத்திற்கு வேலைக்கு அமர்த்தியிருந்தாள்.

கோமதி காலை 8 மணிக்கு வருவாள். சமயலறையில் பாத்திரங் களை கழுவி வைத்துவிட்டு, வீட்டை பெருக்கி சுத்தம் செய்து விட்டு புறப்பட்டு விடுவாள். அதேபோன்று மாலை 5 மணிக்கு வரும்போது மதியம் சேர்ந்திருக்கும் சமையல் பாத்திரங்களை தேய்த்து வைத்து விட்டு வீட்டை பெருக்கி வைத்து விட்டு சென்று விடுவது அவள் வழக்கமாக இருந்தது.

கடந்த சில நாட்களாக பார்வதியின் வீட்டுக்கு காலதாமத மாகவே வந்து வேலைகளை செய்து கொண்டிருந்தாள்.

ஏன் தினமும் லேட்டாக வருகிறாய் என்று கேட்டதற்கு, பசங்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பறதுல லேட்டாயிடுதும்மா என்று கோமதி காரணம் சொல்லி வந்தாள்.

இரண்டு தினங்களாக சுத்தமாக வேலைக்கு வரவேயில்லை. கோமதியின் கைபேசிக்கு பார்வதி பலமுறை தொடர்பு கொண்டும் சுவிட்ச்ஆப என்று சொல்லிக் கொண்டே இருந்தது.

என்ன காரணமோ தெரியல…. கோமதி வேலைக்கு வரல…. என்னால சமையல் வேலையும் செஞ்சிகிட்டு பாத்திரத்தையும் கழுவ முடியல…. என்று அழுவாத குறையாக தனியாக புலம்ப ஆரம்பித்து விட்டாள். இதை பற்றியெல்லாம் குமரேசன் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை.

குமரேசன் நேரத்திற்கு சாப்பிக்கூடியவர் என்பதால் அவசர, அவசரமாக சமையல் வேலையை பார்வதி செய்து கொண்டிருந் தாள்.

என்னாங்க… கோமதி வேலைக்கு வரமாதிரி தெரியல… வேலைக்கு வேற யாராவது இருக்காங்களான்னு கொஞ்சம் பாருங்க! என்னால வேலை செய்ய முடியல… கைகாலெல்லாம் ஒரே அசதியா இருக்கு! சமையல் வேலை கூட என்னால செய்ய முடியாம போயிடும் போல இருக்கு. கொஞ்சம் சீக்கிரமா வேலைக்கு ஆள் ரெடி பண்ணுங்க என்று அழுவாத குறையாக கணவரிடம் தெரிவித்தாள்.

சரி….சரி… பார்க்கிறேன் என்று அலட்சியமாக சொன்னார் குமரேசன்.

மறுநாள் பொழுது விடிந்தது.முதல்நாள் மதியத்திலிருந்து இரவு வரை சேர்ந்திருந்த சமையல் பாத்திரங்களை தேய்ப்பதற்கு அடுக் களைக்குள் நுழைந்த பார்வதி, அப்படியே அதிர்ச்சியில் உறைந்து நின்றாள்.

சமையல் பாத்திரங்கள் சுத்தமாக கழுவி வைக்கப்பட்டிருந்த நிலையில், குமரேசன் அமைதியாக தேநீர் தயாரித்து கொண்டிருந்தார்.



தமிழ்ச் செம்மல்
-நன்னிலம் இளங்கோவன்.

# ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும் 2



▪Banumathi Nachiyar



## குறள் 10

அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லா
முன்னோனைக் காட்டி விடும்

விளக்கம்

அன்னத்தால் ஆன உடம்பின் பயனெல்லாம் இறைவனை உணர்விப்பதே ஆகும்.

அன்னத்தால் ஆன உடம்பு பஞ்சபூதங்களின் சேர்க்கை. எனவே உடலை உணவிற்கு ஏற்ப பேண வேண்டும். அந்த அன்னமே ஆத்மாவாக உள்ளது என்பர். அந்த அன்னத்தினால் உண்டான உடம்பின் பயனாக, முன்னோனை உள்ளத்தில் உணர்தல் என்று விளக்குகிறார். அன்னமே சிவனாகக் கொண்டு இறைவனைத் தொழுவது நம் சைவ சித்தாந்தம். அன்னத்தால் ஆன தேகம் உணவில் உள்ள சத்துக்களையும் அசத்துக்களையும் உட்கிரகித்து வாழ்கிறது.

"அன்னம் சுத்தமானால் எண்ணம் சுத்தமாகும்!" என்பது பழமொழி. இத்துடன் இரண்டாவது அதிகாரமாகிய உடம்பின் பயன் முடிவடைகிறது. நாளை உள் உடம்பின் நிலைமை என்ற அதிகாரத்தில் சூட்சம தேகத்தின் தத்துவங்களை விளக்குகிறார் ஔவையார்.. ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்..

(தொடரும்).

# பசுவிற்கு அகத்திக்கீரை கொடுத்து வழிபடுவது ஏன்?

பசு ஏதாவது விஷத்தன்மை உடைய தாவரத்தை அல்லது உணவை அருந்தி அதிலிருந்து கிடைக்கும் பாலை அருந்தினால் நமக்கும் அந்த விஷத்தன்மை வருமா?என்று சோதித்து பார்த்ததில் விஞ்ஞானிகள் அதிர்ந்து போனார்கள்.*

90 நாட்கள் பசுவுக்கு தினமும் விஷம் கலந்த தாவரத்தை கொடுத்து விட்டு அதன் பாலை ஆராய்ந்து பார்த்தார்கள்.

விஷத்திற்கான எந்த தடயமும் அந்த பாலில் இல்லை..

சரி அந்த விஷம் எங்கு தான் போனது என்று ஆராய்ந்து போது ஆச்சர்யம் அடைந்தார்கள்.



ஆல கால விஷத்தை உண்ட பரமசிவன் உலகை காக்க அந்த விஷத்தை தன் கழுத்திலேயே தங்க வைத்தான் என்பதுதான் வரலாறு.

அதே போல் பசுவும் விஷத்தை தன் கழுத்திலேயே தங்க வைத்திருக்கிறதாம். அதனால் தான் பழங்காலம் தொட்டு பசுவுக்கு அகத்திக் கீரை கொடுக்கிறோம். அகத்திக்கீரை விஷத்தை முறிக்கும் தன்மை கொண்டது. பசுவிற்கு அகத்திக்கீரை தருவதால் ஏற்படும் பலன்கள்

பசுவுக்கு நாம் அகத்திக்கீரைதருவதால்.,

முதலில் நாம் அறியாமல் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும்.

கொலை களவு செய்வதால் உண்டாகும் பிரம்ம ஹத்தி முதலிய தோஷங்கள் விலகி விடும்.

நீண்ட நாட்களாக திதி, கர்மா செய்யாமல் விட்டிருந்தால் அந்த பாவம் பதினாறு அகத்தி கீரை கட்டை பசுவுக்குத் தருவதால் நீங்கும்.

பித்ரு தோஷங்கள் இருந்தால் நீங்கும் சுப வாழ்வு ஏற்படும். கோமாதா என்று போற்றப்படும் பசுவிற்கு அகத்திக் கீரை தருவதால், முதலில் அறியாமல் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும் . பெரும் தவறுகளால் உண்டாகும் பிரம்மஹத்தி தோஷங்கள் விலகிவிடும். முன்னோருக்கு செய்ய வேண்டிய நீத்தார் கடன்களான திதி, கர்மா செய்யாமல் இருந்தால் ஏற்படும் பாவம் பதினாறு அகத்தி கீரை கட்டை பசுவுக்கு தருவதால் நீங்கும். மேலும் பித்ரு தோஷங்களும் நீங்கும். பசுவை ஒரு முறை பிரதட்சணம் செய்வதால் பூலோகம் முழுவதும் பிரதட்சணம் செய்த புண்ணியம் கிடைக்கும். கோமாதாவை சிரத்தையுடன் வணங்கிட பிரம்மா, விஷ்ணு, முதலான அனைத்து தெய்வங்களையும் பூஜித்த புண்ணியம் நமக்கு கிடைக்கும். உண்பதற்கு பசுவிற்கு புல் கொடுத்தாலும் (கோக்ராஸம்), பசுவின் கழுத்து பகுதியில் சொரிந்து கொடுத்தாலும் (கோகண்டுயனம்) நம்மை பிடித்த தீராத பாவங்கள் விலகும்.

பசுக்கள் மேய்ந்து விட்டு வீடு திரும்பும் சந்தியா காலம் கோதூளி காலம் (லக்னம்) என்று அழைக்கப்படுகிறது. இது மிக புண்ணியமான காலமாகும்.பசு நடக்கும் போது எழும் புழுதியானது நம் உடலில் படுவது 8 வகை புண்ணிய ஸ்நானங்களில் ஒன்றாகும். பசுவின் கால் பட்ட தூசியைதான் மாமன்னர்கள் பூசிக்கொண்டார்கள். "மா" என்று பசு கத்தும் ஓசை அப்பகுதிக்கு மங்கலத்தை தருகிறது. பசு வசிக்கும் இடத்தில், அதன் அருகில் அமர்ந்து சொல்லும் மந்திர ஜபமோ, தர்ம காரியங்களோ நூறு மடங்கு பலன்களை அள்ளித் தரும்.

எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி 620 015

## தினம் ஒரு தலைவர்கள்

# ஷஹீத் சிவராம் ராஜகுரு வரலாறு

ராஜ்குரு 1908 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் தேதி மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள கேத் என்ற இடத்தில், பூனாவிற்கு அருகிலுள்ள பீமா நதிக்கரையில் பிறந்தார். அவர் தேசஸ்தா பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார். அவரது தாயார் பெயர் ஸ்ரீமதி பார்வதி தேவி மற்றும் அவரது தந்தையின் பெயர் ஸ்ரீ. ஹரிநாரைன் ராஜ்குரு. அவரது முழுப் பெயர் 'ஹரி சிவராம் ராஜ்குரு' அல்லது 'சிவ்ராம் ஹரி ராஜ்குரு'. ஒவ்வொரு ஆகஸ்ட் 24 ஆம் தேதியும், ராஜ்குரு பிறந்தநாளில், சஹீத் ராஜ்குருவின் துணிச்சலான செயல் மற்றும் தியாகத்தை நினைவுகூரும் வகையில் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. ராஜ்குருவின் பிறந்த நாள் இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும்.

சஹீத் சிவராம் ராஜகுரு மற்றும் அவரது வாழ்க்கை பற்றிய உண்மைகள் 1914 ஆம் ஆண்டு, அவருக்கு ஆறு வயதாக இருந்தபோது, அவரது தந்தை இறந்தார். அவரது குடும்பப் பொறுப்பு அவரது சகோதரரின் தோள்களில் விழுந்தது. அவரது சகோதரர் தின்கர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தனது தாய்க்கும் சகோதரருக்கும் உணவளித்தார். அவர் உள்ளூரில் கெட் நகரில் தொடக்கக் கல்வியைப் பெற்றார், பின்னர் புனேவில் (பூனா) உள்ள நியூ இங்கிலீஷ் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். அவரது தந்தை இறந்தபோது அவரது சகோதரர் அவரைக் கவனித்துக் கொண்டார், மேலும் அவரது குடும்பத்தினர் சிவராம் ராஜ்குருவைப் பற்றி சில கனவுகளைக் கொண்டிருந்தனர், ஆனால் விதி பின்னர் மாறியது.

அவர் சிறு வயதிலிருந்தே அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தார், மேலும் இளம் வயதிலேயே சேவா தளத்திலும் சேர்ந்தார். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் சிவராம் ராஜ்குருவின் வாழ்க்கையில் ஒரு முக்கிய கதாபாத்திரம், ஏனெனில் அவர்தான் ராஜ்குரு அணுகிய முதல் மனிதர். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் நடத்திய பல பயிற்சி முகாம்களிலும் அவர் கலந்து கொண்டார். சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிய கதைகளைக் கேட்பது வழக்கம், மேலும் லோக்மான்ய திலகரின் புரட்சிகர கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

15 வயதில், அவர் வாரணாசிக்கு நடந்து சென்று ஒரு சமஸ்கிருதப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். வாரணாசியை அடைய ஆறு நாட்கள் ஆனது என்று கூறப்படுகிறது. அந்தப் பள்ளியில், அவரைப் போன்ற புரட்சியாளர்களான சில புதிய நண்பர்களை அவர் உருவாக்கினார். படிப்படியாக அவரது நோக்கம் தெளிவாகியது. பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளை வீழ்த்துவதே அவரது ஒரே குறிக்கோள். அவர் வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். இந்தியாவுக்கு எந்த வகையிலும் சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தனது கனவை நனவாக்க, அவர் இந்துஸ்தான் சோசலிச குடியரசு இராணுவத்தில் சேர்ந்தார். பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோரை சந்தித்தது அவரது வாழ்க்கையின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். சுதந்திரம் பற்றிய ஒரே கருத்தை அவர்கள் தங்கள் இதயங்களிலும் மனங்களிலும் பகிர்ந்து கொண்டதால் அவர்களின் நட்பு மிகவும் வலுவாக வளர்ந்தது.

சைமன் கமிஷனும் அதன் பின்விளைவுகளும் ஆங்கிலேயர்களால் ஒரு புதிய காப்பக ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியர்கள் இந்த புதிய சீர்திருத்தத்தை திருத்துமாறு கோரினர். 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி, நாட்டின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கும், அரசாங்கத் திட்டங்கள் பொதுமக்களை எவ்வாறு சென்றடைகின்றன என்பதை ஆராய்வதற்கும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஆணையம் அமைக்கப்படும் என்று கூறப்பட்டது. மேலும் அறிக்கைகளின் அடிப்படையில், புதிய திட்டங்கள் உருவாக்கப்படும், மேலும் தேவையான சீர்திருத்தங்களைச் செய்யலாம். இதற்காக, பிரிட்டிஷ்காரர் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி ஒரு குழுவை அமைத்தார். இந்தக் குழுவிற்கு சர் ஜான் சைமன் என்ற பிரிட்டிஷ்காரர் தலைமை தாங்கினார்.

ஏழு எம்.பி.க்கள் கொண்ட ஒருவர் இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறார் என்பதால் இந்திய மக்கள் கோபமடைந்தனர், ஆனால் அந்த ஏழு பேர் கொண்ட குழுவில் ஒரு இந்தியர் கூட இல்லை. 1927 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் பல போராட்டங்களை நடத்தி, சைமன் கமிஷனைப் புறக்கணிக்குமாறு இந்தியர்களிடம் முறையிட்டது, மேலும் அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலாளராக இருந்த லார்ட் பிர்கன்ஹெட்டை சவால் செய்தது. அனைத்து இந்திய மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குமாறு அவர்கள் செயலாளரிடம் கேட்டுக் கொண்டனர். முகமது அலி ஜின்னா தலைமையிலான முஸ்லிம் லீக்கும் சைமன் கமிஷனைப் புறக்கணிக்க முடிவு செய்தது.



சைமன் கமிஷன் ஜனவரி 1928 இல் இங்கிலாந்தை விட்டு வெளியேறியது, அவர்கள் வந்தவுடன், வழியில் பெரும் போராட்டங்கள் நடந்தன. மக்கள் கமிஷனை கருப்புக் கொடிகளுடன் வரவேற்றனர். இந்தியாவின் கிட்டத்தட்ட அனைத்து முக்கிய நகரங்களிலும் இதேபோன்ற போராட்டங்கள் நடந்தன. அவற்றில் 'சைமன் கமிஷனுக்கு' எதிரான ஒரு போராட்டம் பிரபலமானது அல்லது மிகவும் பிரபலமற்றது. அக்டோபர் 30, 1928 அன்று, கமிஷன் லாகூருக்கு வந்தபோது, அவர்களை கருப்புக் கொடிகளுடன் வரவேற்கத் தயாராக இருந்த போராட்டக்காரர்களை அவர்கள் எதிர்கொண்டனர். அந்த குறிப்பிட்ட போராட்டத்திற்கு இந்திய தேசியவாதியான லாலா லஜ்பத் ராய் தலைமை தாங்கினார். அந்த ஆண்டு பிப்ரவரியில் பஞ்சாப் சட்டமன்றத்தில் இந்த கமிஷனுக்கு எதிராக அவர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். பின்னர் உள்ளூர் போலீசார் போராட்டக்காரர்களை அடிக்கத் தொடங்கினர். அந்த போராட்டத்தில், மற்றவற்றுடன், தலைவராக இருந்த லாலா லஜ்பத் ராய் படுகாயமடைந்தார். சில நாட்களுக்குப் பிறகு அவர் இறந்தார்.

இந்தச் செய்தி இந்தியாவில் காட்டுத்தீ போல பரவியது. மக்கள் ஆத்திரமடைந்தனர். 1928 ஆம் ஆண்டு லாகூரில் பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி ஜே.பி. சாண்டர்ஸைக் கொல்ல பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோருடன் சேர்ந்து ராஜ்குரு ஒரு திட்டத்தை வகுத்தார். லாலா லஜ்பத் ராயின் மரணத்திற்குப் பழிவாங்குவதற்காக. பல இந்தியர்கள் இந்த செயலைப் பாராட்டினர். பல இந்திய குடிமக்கள் இதைக் கண்டித்தனர். இந்திய தேசிய காங்கிரஸ் இந்தச் செயலைக் கண்டித்தது. ஆனால் இறுதியில், இது இந்திய மனங்களிலும் இதயங்களிலும் ஒரு புரட்சியைத் தூண்டியது - அவர்களால் ஈர்க்கப்பட்ட ஒரு தலைமுறை சுதந்திரப் போராளிகள் புரட்சியை விரைவுபடுத்தினர்.

சிவராம் ராஜகுரு படுகொலைக்குப் பிறகு என்ன நடந்தது? படுகொலைக்குப் பிறகு, ராஜகுரு ஒரு தப்பியோடிய வாழ்க்கை வாழ்ந்தார். அவர் நாக்பூருக்கு ஒளிந்து கொள்ளச் சென்றார். நாக்பூரில் உள்ள ஒரு ஆர்.எஸ்.எஸ் ஊழியரின் வீட்டில் தஞ்சம் புகுந்து கே.பி. ஹெட்கேவரைச் சந்தித்தார். புனேவுக்குத் திரும்பும் வழியில், அவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். பகத் சிங், சுக்தேவ் மற்றும் ராஜகுரு ஆகிய மூன்று பேரும், மேலும் 21 சக சதிகாரர்களும் கைது செய்யப்பட்டு வெளிப்படையாக வடிவமைக்கப்பட்ட ஒரு விதிமுறையின் கீழ் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக சிறையில் இருந்தனர். அவர்களின் கதை இந்திய மக்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளித்தது. ராஜகுரு, இரண்டு துணிச்சலான மனிதர்களுடன் சேர்ந்து, 1931 மார்ச் 23 அன்று தூக்கிலிடப்பட்டார். பின்னர், அவர்களின் உடல்கள் சட்லஜ் நதிக்கரையில் தகனம் செய்யப்பட்டன. சிவராம் ராஜகுரு தியாகியானபோது அவருக்கு வயது வெறும் 23. அவருக்கு இரும்பு இதயம், அச்சமற்ற மனப்பான்மை மற்றும் தைரியம் இருந்ததாக அவரது நெருங்கிய கூட்டாளிகள் கூறுகிறார்கள். பகத் சிங்கின் கட்சியின் 'துப்பாக்கி ஏந்தியவர்' அவர்.

இந்த துணிச்சலான செயல்களைக் கேட்டு, நாம் நம்மை நாமே கேள்வி கேட்க வேண்டும், நாம் சுதந்திரத்திற்கு தகுதியானவர்களா? சிவராம் ராஜகுரு போன்ற பெரிய மனிதர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்த அதே மக்களால் இந்த சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. வன்முறை, கலவரங்கள், திருட்டுகள் மற்றும் ஊழல்கள் நம் தேசத்தை முடக்கியுள்ளன. அரசியல்வாதிகள், தங்கள் லாபத்திற்காக, நம் மக்களைப் பிரிக்கிறார்கள், மேலும் வாக்களிப்பின் சக்தி என்ன, நமது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைப் பெறுவதற்கு எவ்வளவு வன்முறை மற்றும் மனித உயிர் செலவாகும் என்பது மக்களுக்கு இன்னும் தெரியாது. ஜனநாயகத்திற்கும் ஒரு விலை உண்டு. மக்களுக்குத் தேவையானது செயல்பாட்டில் பங்கேற்பதுதான். ஜனநாயகம் ஒரு சுறுசுறுப்பான விளையாட்டு போன்றது. நாம் வாக்களிக்கும்போது நமது வேலை முடிவடைவதில்லை; மாறாக, அது நாம் வாக்களிக்கும்போது தொடங்குகிறது. நாம் அற்பமான தனிப்பட்ட மற்றும் குறுகிய கால ஆதாயங்களுக்காக விழுகிறோம், நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கக்கூட மாட்டோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரம் ஒரு விலையில் வருகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நீண்ட காலத்திற்கு முன்பு நடப்பட்ட மரங்களின் பழங்களை நாம் அனுபவித்து வருகிறோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தை பயனுள்ளதாக மாற்ற தேசத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

# 2 வாரத்தில் 1500 கோடி ரூபாய் வசூலைத் தாண்டியது Dhurandhar 2



இந்தியில் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிப்பில் கடந்த டிசம்பரில் வெளியான துரந்தர் படம் 1500 கோடி ரூபாய்க்கு மேல் வசூலித்து சாதனை படைத்தது.

பாகிஸ்தானில் பணியாற்றும் இந்திய உளவாளியை பற்றிய கதைக்களத்தில் இப்படம் அமைந்திருந்தது. இதன் 2-ம் பாகமான 'துரந்தர் தி ரிவெஞ்ச்' படம் கடந்த மார்ச் 19-ல் வெளியாகி முதல் படத்தைப் போல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்நிலையில், துரந்தர் 2 திரைப்படம் வெளியான 15 நாட்களிலேயே உலகளவில் ரூ.1,501 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை படைத்துள்ளது. இந்த ஸ்பை திரில்லர் படம் வட அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளிலும் வசூல் வேட்டை நடத்தி வருகிறது.

முதல் மற்றும் இரண்டாம் வாரங்களில் அதிகபட்ச வசூல், உலகளவில் மிகப்பெரிய தொடக்க வார வசூல் மற்றும் உலகளவில் 1,000 கோடி ரூபாய் வசூலை அதிவேகமாக எட்டிய திரைப்படம் உள்பட பல்வேறு பாக்ஸ் ஆபீஸ் சாதனைகளை இப்படம் முறியடித்துள்ளது.



தமிழ் மற்றும் மலையாளத்தில் பாப்புலர் நடிகையாக இருப்பவர் அஞ்சு குரியன். அவருக்கு இன்ஸ்டாக்ராமில் மட்டும் 3 மில்லியன் ரசிகர்கள் இருக்கிறார்கள்.

அவர் அடிக்கடி மிகவும் கவர்ச்சியாக வெளியிடும் ஹாட் போட்டோக்கள் இணையத்தில் ரசிகர்கள் மத்தியில் படுவைரல் ஆகின்றன. தற்போது சேலையில் சற்று கிளாமர் ஆக அஞ்சு குரியன் போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்திருக்கிறார். அந்த அழகிய ஸ்டில்களை பாருங்க.

# 'நூறு சாமி' படத்தின் அப்டேட்



'பிச்சைக்காரன்' படத்தை தொடர்ந்து இயக்குநர் சசி மற்றும் விஜய் ஆண்டனி கூட்டணி மீண்டும் இணைந்துள்ள படம் 'நூறு சாமி'. இந்தப் படத்தில் விஜய் ஆண்டனியுடன், லப்பர் பந்து படத்தில் நடித்து புகழ் பெற்ற நடிகை ஸ்வாசிகா, லிஜோமோல், கருணாஸ், காவ்யா அனில் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தின் இறுதிக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. முன்னதாக 'நூறு சாமி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் முதல் பாடல் ஆகியவை வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்றது. தொடர்ந்து இந்தப் படம் வருகிற மே 1-ஆம் தேதி உழைப்பாளர் தினத்தன்று திரைக்கு வர உள்ளது.

இந்த நிலையில் 'நூறு சாமி' படத்தின் டீசர் நாளை வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் வெளியாக உள்ள 'நூறு சாமி' படம் ஒரு குடும்பத்தில் நிலவும் அன்பு, போராட்டங்கள் நிறைந்த கதைக்களம் என கூறப்படுகிறது.

# பிரதீப் ரங்கநாதனின் சம்பளம் இவ்வளவா?



தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் கதாநாயகனான பிரதீப் ரங்கநாதன், தொடர்ச்சியாக வெற்றிப் படங்கள் கொடுத்து கவனம் ஈர்த்துள்ளார். 'லவ் டுடே', 'டிராகன்', 'டியூட்' என அவரது படங்கள் தொடர்ந்து ரூ.100 கோடி வசூலை தாண்டியுள்ளன.

பிரதீப் ரங்கநாதன் நடிப்பில் விரைவில் 'எல்.ஐ.கே.' படம் திரைக்கு வரவுள்ளன.

விக்னேஷ் சிவன் இயக்கியுள்ள இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார்.

இதற்கிடையில் தெலுங்கு சினிமாவிலும் பிரதீப் ரங்கநாதன் கால்பதிக்க போகிறாராம். பிரபல இயக்குனர் சந்திரசேகர் ஏலேட்டியுடன் அவர் கூட்டணி சேரப்போவதாகவும், இந்த படத்துக்காக அவருக்கு ரூ.50 கோடி சம்பளம் பேசப்பட்டிருப்பதாகவும் பேசப்படுகிறது.

குறுகிய காலத்திலேயே ரூ.50 கோடி சம்பளத்தை தொட்டிருக்கும் பிரதீப் ரங்கநாதனின் பயணம் திரையுலகில் கவனம் ஈர்த்துள்ளது.



# நீளிரா திரைவிமர்சனம்

நீளிரா- திரைவிமர்சனம்(2.5 / 5)

இலங்கையில் இந்திய அமைதிப்படை மற்றும் போராளிகள் மோதல் தீவிரமாக இருக்கும் காலகட்டத்தில், ஒரு குடும்பத்தில் எளிமையாக நடத்த திட்டமிடப்பட்ட திருமணம் எதிர்பாராத சூழ்நிலையில் பெரும் நெருக்கடியாக மாறுகிறது.

அனுமதி பெற்று நடத்தப்படும் அந்த திருமணம் நடைபெறும் வீட்டை இந்திய ராணுவம் சுற்றிவளைக்க, அதே நேரத்தில் போராளிகளும் அந்த இடத்தை குறிவைப்பதால், அந்த வீட்டில் பதட்டமான சூழ்நிலை ஏற்படுகிறது.

இறுதியில், அந்த வீட்டில் திருமண நிகழ்ச்சி நடைபெற்றதா? ராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையே சண்டை நடந்ததா? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

நவீன் சந்திரா நேர்மையான ராணுவ வீரராக, கடமை மற்றும் மனிதநேயத்தின் இடையே சிக்கிக் கொண்டுள்ள மனநிலையை அழகாக வெளிப்படுத்துகிறார். ரூபா கொடுவாயூர் பாதிக்கப்பட்ட பெண்ணாக மிக இயல்பான, உணர்ச்சிகரமான நடிப்பை கொடுத்துள்ளார்.

சித்து குமரேசன், கயல் வின்செண்ட், சுவாதி கிருஷ்ணா, நவயுகா நமச்சிவாயம், தம்பி பிள்ளை, ரோகித் கராத்தே அனைவரும் போரின் பயத்தையும் பதட்டத்தையும் கண்களில் காட்டி கதையை உயர்த்துகிறார்கள்.

**இயக்கம்**

போரின் நடுவில் சிக்கிக் கொள்ளும் ஒரு குடும்பத்தின் பதற்றமான இரவை மையமாக கொண்டு உருவாக்கி இருக்கிறார் இயக்குனர் சோமீதரன். படத்தின் ஆரம்பம் குடும்ப உணர்வுகளோடு அமைதியாக நகர்ந்தாலும், ராணுவம் வீட்டுக்குள் நுழையும் தருணத்திலிருந்து திரைக்கதை முழுவதும் பதட்டமாக மாறுகிறது.

ஒரு இரவுக்குள் நடக்கும் சம்பவங்களை வைத்து, போரின் மன அழுத்தத்தையும் அச்சத்தையும் மிக நெருக்கமாக பதிவு செய்திருக்கிறார் இயக்குநர் சோமீதரன். வசனங்கள் குறைவாக இருந்தாலும், இடையே வரும் சில வரிகள் போரின் உண்மை நிலையை நேராக தாக்கும் வகையில் இருக்கிறது. முதல் பாதி திரைக்கதை மெதுவாக செல்வது பலவீனம்.

**ஒளிப்பதிவு**

செல்வரத்தினம் பிரதீபன் ஒளிப்பதிவு போரின் பதட்டத்தையும், அந்த பகுதியின் இயல்பையும் மிக அழகாக பிடித்துள்ளது.

**இசை**

கே இசை காட்சிகளோடு ஒன்றிணைந்து, மனதில் ஒரு கனமான உணர்வை உருவாக்குகிறது.



டிராகன் என்ற ஒரே ஒரு படத்தின் மூலமாக புகழின் உச்சிக்கே சென்று இருக்கிறார் கயாடு லோஹர். அதை தொடர்ந்து மலையாளம், தமிழ், தெலுங்கு என பல மொழிகளும் பட வாய்ப்புகள் அவரை தேடி வந்து குவிந்திருக்கிறது.

அரை டஜன் படங்களுக்கும் மேலாக கைவசம் வைத்திருக்கிறார் அவர். மலையாளத்தில் அவர் நடித்த Pallichattambi வரும் ஏப்ரல் 10ம் தேதி திரைக்கு வருகிறது. அதன் ப்ரோமோஷன் நிகழ்ச்சிகளில் கயாடு லோஹர் கலந்துகொண்டு வருகிறார்.

தற்போது அவர் சேலையில் அழகிய லுக்கில் இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# மனிதன் தெய்வமாகலாம் படத்தின்



மனிதன் தெய்வமாகலாம் படத்தின் இசை வெளியீட்டு நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் படக்குழுவினர் கலந்து கொண்டனர். அந்த வகையில், செல்வராகவன் இந்த நிகழ்ச்சியில் பேசும் போது, "இந்தப் படத்தில் பணியாற்றிய தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவரும் அசுரத்தனமாக உழைத்தனர். அவர்கள் எப்போது தூங்குவார்கள், சாப்பிடுவார்கள் என்பது கூட தெரியாத அளவிற்கு கடும் உழைப்பாளிகள். இவர்களைப் பார்த்து நான் இப்படியும் படம் எடுக்கலாம் என்று கற்றுக் கொண்டேன். படத்தில் நடித்துள்ள நடிகை கௌசல்யாவை பார்த்து ஒரு காலத்தில் நானே ரசித்து "ஜொள்ளு" ஊத்தி இருக்கிறேன். இப்பொழுது அருகிலேயே இந்த நிகழ்ச்சியில் அமர்வது கூட சற்று நெகிழ்ச்சியாக இருக்கிறது," என்றார்.

மனிதன் தெய்வமாகலாம் படத்திற்கு ஒளிப்பதிவு பணிகளை ரவி வர்மா மேற்கொள்ள, தீபக் எஸ் படத்தொகுப்பு பணிகளை கவனிக்கிறார். இந்தப் படத்திற்கு பாக்கியராஜ் வெள்ளையன் கலை இயக்க பணிகளை மேற்கொண்டுள்ளார்.

## தெய்வம்

# விளம்பர முகவர்கள் & விற்பனை பிரதிநிதிகள் தேவை

- அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
- பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
- கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
- மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு

CALL / WHATSAPP: 7789941009

இன்றே இணையுங்கள்!

---

Sanjay
Cell: 90032 64920

# Real Choice

Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection

#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.

Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

---

# WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424

---

# WANTED

## — MARKETING EXECUTIVES —

We are hiring **Marketing Executives** (Male/Female) for immediate openings.

**Full-Time / Part-Time**

**Salary: ₹30,000 - ₹50,000**

Open to all, including Retired / VRS candidates and Job Seekers.

**Location: All Over Tamil Nadu**

Contact: **7789941009**

---

# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

---

# WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact:
8428872887

---

# keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

## INTERNSHIP & JOB OPPORTUNITIES
## MSW & M.Sc Psychology - Freshers

**Internship:**
- Clinical Training
- Counseling Practice
- Case Work

**Jobs:**
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

---

ஸ்ரீவேணுகா கம்பெனி

சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு

# AJANTHA

TRADITIONAL THAMBULA BETEL NUTS

அஜந்தா பாக்கு

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!

RAVIKUMAR AND COMPANY

---

# TAMIL TELECALLER JOB FOR

WORK FROM HOME

ALL OVER TAMILNADU

APPLY NOW

7789951009

PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA

DAILY & MONTHLY SALARY

SALARY STARING FROM Rs. 10000/- onwards

Whatsapp: 7789951009

---

# Wanted REPORTERS

சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை

பேப்பர்பாய்

8122664699

---

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253

SALARY BASED ON EXPERIENCE

---

# அனைத்து பிரிவினருக்கும்

## என் துணை

திருமண தகவல் மையம்

உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.

www.enthunai.com 7871617005
support@enthunai.com 7789941009

---

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை

# ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்

ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com






## புதுயுகம் படைப்போம்

கண்ணன் மாடுகளை
நேசித்தார்,
இயேசு ஆடுகளை நேசித்தார்,
நபிகள் ஒட்டகங்களை
நேசித்தார்,
இவர்களெல்லாம்
விலங்குகளை
நேசித்ததால்
மனிதன் வாசிக்க
கீதை, பைபிள்,
குர்ஆன் என
நூல்களை
அளித்தார்கள்,
நாம் படித்தும்
புரிந்துக்கொள்ளாமல்
மனிதனை மனிதனே
வெட்டிசாய்த்து
விரோதம் கொள்கிறோம்,
எல்லா மதங்களும்
அன்பையும்,
சகோதரத்துவத்தையும்,
மனிதநேயத்தையும்தான்
போதிக்கின்றன,,,
மதத்தை நேசிப்பவர்கள்
மதநூல்களை உணர்ந்து
வாசித்தாலே
மனிதநேயம் வளரும்
புதுயுகம் மலரும்,



**நாகை ஆசைத்தம்பி**
கோவை



## கொஞ்சம் ஹைக்கூ...

தவளைகள் கனவில்
யார் வருவார்
பாம்பா ? கடவுளா?

(2) பட்டாம்பூச்சி வரைந்த
கண்ணாடித் தடுப்பில் மோதிச்
சாகின்றன தட்டான்கள்.

(3) நீரில்லாமல் நீந்துகின்றன
துள்ளியபடி மீன்கள்
பிள்ளை வரைந்த ஓவியம்.

(4) நள்ளிரவில் குடும்பத்தின்
தூக்கத்தைக் கெடுப்பான்
சாலையில் கிடக்கும்
குடிகாரன்.

(5) பின்னிரவில் நிகழும்
விபத்து காத்திருப்பார்கள்
பத்திரிக்கை அலுவலகத்தில்.

(6) அப்பா வேலை பார்க்கிறார்
நம்மைப் பார்க்கின்றன அவர்
நெஞ்சின் நரை முடிகள்..



(7) எல்லார்
வீட்டிலும் உள்ளன
அரிசியும் மாவும்
தெருக்கோலத்தில்
இல்லை.

**ஹரணி** தஞ்சாவூர்

## ஆல்கஹால் !

நாள் முழுதும் மது
அருந்தி... உடலில்
ஆல்கஹாலின் தீவிரத்தால்
மரணித்தவனின் பூத
உடல்... எரியூட்ட அதிக
நேரம்
ஆகவில்லை
மின்
மயானத்தில்!



**எம்.பி. தினேஷ்**
கோவை



## மழலைகட்குப் புத்தக வாசிப்பை உண்டாக்குவோம்!

அறுசீர் மண்டிலம்.

வாசிப்புப் பழக்கத்தை
ஊக்குவிப்போம்
வளமான கருத்துகளைத்
தேக்குவிப்போம்!
யோசித்து நன்னூல்கள்
படிக்கவைப்போம்
உன்னதமாய்ப் பன்னூல்கள்
பயிலவைப்போம்!
தேசத்தில் குழந்தைகளை
உயரவைப்போம்
தெள்ளுதமிழ் நூல்களிலே
ஓங்கவைப்போம்!
நேசத்தைக் குழந்தைகளில்
பதியவைப்போம்
நெஞ்சாரக் குழந்தைகளை
நடத்திடுவோம்!

நூலகத்தை மழலைகளில்
ஒப்படைப்போம்
நுவல்கின்ற செய்திகளைக்
கோத்தெடுப்போம்!
கோலமுடன் புத்தகத்தைத்
தந்திடுவோம்
கொஞ்சுதமிழ் நூல்களையே
நல்கிடுவோம்!
பாலமாக கல்வியிலே
நுழையவைப்போம்
பாங்காகப் பெற்றோரும்
ஒத்துழைப்போம்!
காலமெலாம் புத்தகத்தால்
வளர்த்தெடுப்போம்
கங்குலையே புத்தகத்தால்
போக்கவைப்போம்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## நம்பிக்கை தீபம்

மௌனத்தின் பின்னாலே
முழங்குமொரு சத்தம்
கேட்கவும் யாருமில்லை,
சொல்லவும் துணிவில்லை...

புன்னகை முகமூடியணிந்து
புரியாதவர்கள் நடுவே
வாழும் நாட்களிலே
பொய்யான நிறங்கள் பல...

கண்ணீரின் துளிகளும்
கண்களுக்குள் தங்கி,
"நானே சரி" என்ற
அகங்காரத்தில் நொந்து
மறைய...

மறைவு வாழ்க்கை...

இருள் சூழ்நத அறையில்
லேசான ஒளிக்கீற்றில்
ஒளிரும்
"நாளை
" என்ற
நம்பிக்கை
தீபம்



**நா.பத்மாவதி**
கொரட்டூர்



## விரல் தேடும் வீணை

சற்று நிமிர்ந்து பார்த்தேன்
வெள்ளோதிமப்பேடு நடந்து
செல்கிறது... அவள் முக
ஒளியைப் பார்த்து வானத்து
நிலவு மேகத்தில் மறைந்து
எட்டிப் பார்க்கிறது... அவள்
பூமியில் நடை பயிலுவதை
யாரிடம் கற்றா....? தமிழின்
கீற்றில் தென்றலைக்
காணும் கீதம்... இசையின்
ஏழு வண்ணத்தில்
வானவில்
படைக்கும்
அவள்
கரங்களுக்காக
வீணையின்
நரம்புகள்
காத்துக்
கிடக்கின்றன....



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

## வாழ்க்கை

தினம் தவறாமல் தண்ணீர்
ஊற்றி, உரம் ஒழுங்காக
இட்டு, களைகள் அகற்றிப்
பராமரித்து, வண்ணத்
தொட்டியில் வளர்த்த
செடியில் பூத்த மலர்களை
நடைபாதையோரமாக
சேற்றிலும் சகதியிலும்,
கற்களினூடே ஒடுங்கி
வளர்ந்த செடியில் துளிர்த்த
மலர்கள்
எத்தனை
சுலபமாக
அழகில்
தோற்கடித்து
விடுகின்றன?



**கே. பி. ஜனார்த்தனன்**

## தாமரை மலர்கிறது

ஓர் இந்திய கனவு உறங்கி
விட்டது... விழித்துப்
பார்க்கையில் பார்வையில்
இந்தியா தெரியவில்லை...

இந்தியாவில் வறுமையை
நீக்கும் பாடசாலை
எங்குள்ளது ? அன்று
இந்தியாவின் சுதந்திரத்திற்கு
உப்பு எடுத்தன...

இன்று இந்தியாவில்
சுதந்திரத்திற்காகத் தாய்மண்
எடுப்போம்..

இந்தப் புதிய அத்தியாத்தின்
தொடக்கமே!
திராவிட
பூமியாக
அமையட்டும்....



**எஸ். தயாளன்**
காட்பாடி

## துளிப்பாக்கள்

காதலன் கண் இமைகளை
மூட முடியவில்லை
கண்களுக்குள் காதலி!

கிளியை விரட்டாதீர்
காதலன் கடல் பயணம்
காதலியின் தனிமை

கட்சித் தலைவன்
ஏ.சி. காரில் பவனி வர
தொண்டர்கள் வெயிலில்.

திரையில் கதாநாயகன்
திரைமறைவில்
அவன் ஒரு வில்லன்!

விண்ணில்
தோன்றி
மண்ணில்
உதிராத
நட்சத்திரப்
பூக்கள்!



**பூ.சுப்ரமணியன்**
சென்னை

## எங்கே செல்லும் இந்த பாதை..?

அவரவருக்கு..
அவரவருக்கு..
ஆயிரம் சிந்தனைகள்!
அவரவர் நடந்தார்..
அவரவர் நடந்தார்.. அவரவர்
பயணத்துக்கு..!


இந்த மண்ணிலே.. வந்து
நடந்தால்.. எத்தனை
அனுபவங்கள்! சொந்தம்
என்றும் சுற்றம் என்றும்..
எத்தனை உறவினர்கள்?

உலகம் எல்லாம்
தன்வயமாயினும் நிம்மதி
எங்கென்றார்?
உடன்பிறந்தாலும்..
அவரவர்ப் பாதையில்
அவரவர் செல்கின்றார்!

இரவும் பகலும்..
நடந்து. நடந்து..
எங்கே தூங்குகின்றார்
ஆறடி நிலத்தில் அவரவர்
வந்தே.. அங்கே
தூங்குகின்றார்!

வீட்டுடன் மனைவி..
வீதியில் மக்கள்..
காடுவரை யாரோ.?
கடைசி வரை விடைத்
தெரியாமலேயே...
அவரவர் போகின்றார்.!

**வே.கல்யாண்குமார்**



அப்பா ஒரு ஆலமரம்
அவர் நமக்கு கிடைத்த
ஒரு வரம்..

அவர் கைவிரலை பிடித்து
நடந்தேன்... அவர் நெஞ்சில்
மிதித்து விளையாண்டேன்...

அவர் தோளில் ஏறி
அமர்ந்தேன்... உலக
சொற்கத்தை கண்டு
மகிழ்ந்தேன்...

புத்தாடை எனக்கு கொடுத்து
அவர் கந்தல் துணி உடுத்த
கண்டேன்...

மிடுக்கான மீசையும்
ஒட்டிய வயிற்றுடன் பல
முறை கண்டேன்...

நான் கால் தடிக்கி கீழே
விழுந்தால் ....
பர்தவிச்சி அவர் மனம்
உடையக்கண்டேன்...

அப்பா ஒரு பல்கலை
கலகம்... எத்தனை முறை
அவர் பாசத்தை புரட்டி புரட்டி
பார்த்தாலும், படித்தாலும்
நீர் வீழ்ச்சி கூட தோற்று
போகும்....!!

அப்பா,
அப்பாதான்



**பொன். கருணா**
நவி மும்பை



திட்டிக் கூட தீர்த்து விடு
அடித்து போடும் படி
அப்படி எட்டியெல்லாம்
பார்க்காதே!

நீ இருக்கும் வரை
என் காதல் கவிதைகளுக்கு
ஓய்வேது?

அழகாய் சிரித்தாள்
ஆடிப் போனது ஆறடி மனசு!

நீ வீடு செல்லும் வரை
அந்த பொறாமை பிடித்த
வானவில் வீதிக்கு வரப்
போவதில்லை!

அந்த கோனாரை
வரச் சொல்லுங்கள்
அவள் கொலுசொலிக்கு
உரை எழுத!

நீ என்ன செய்தாய்?
சின்னதாய் சிரித்து
தொலைத்ததுக்கே
பாறையில் குத்தி கிழிக்கப்பட்ட
தேங்காய் மட்டையாய்
தூக்கி எறியப் பட்டேன்
என்னிலிருந்து!

நீ நிற்கும் வரை
நிற்கப் போவதில்லை
அலைபாயும் மனசு!

பாதியிலேயே விட்டு
விடுவதற்கா
பாசம் கொடுத்து
பேசித் தொலைத்தாய்?!

நீ கரையேறி விட்டாய்
இன்னமும் எண்ணம் மாறாமல்
மூழ்கியே தான் இருக்கிறேன்
உன் நினைவுகளில்!

மன்னிப்பு
தற்காலிக உதட்டு அசைப்பு
ஒரு போதும் செய்த பாவங்கள்
மனதிலிருந்து போவதில்லை!

நீ போன பின்பும்
போய் விடுமா என்ன?
உன் பொல்லாத நினைவுகள்.
புற்றுநோயாய் என்னை
சாகடிக்கும் வரை வாழ்ந்து
கொண்டே தான் இருக்கும்
அழியா உன் நினைவுகள்?

ஏங்கி,ஏங்கியே
கழிந்து விடுமோ மிச்ச காலம்,
துச்சமாய் நினைத்தாலும்
பரவாயில்லை தட்சணையாக
கொடுத்து விடு
உனது பேரன்பை!

கொடுக்கப் படாத அன்பு
கொலைக்குற்றத்திற்கு
சமமானது!

அன்புக்காக ஏங்குவதும்
அநாதைத்தனத்தின்
மிச்சம் தான்!


**லி.நௌஷாத் கான்**

## தீக்குச்சி

எல்லாவற்றையும்
கற்றுக்கொண்டுதான் இங்கே
கால் பதிக்க வேண்டுமா?
மிதிவண்டி ஓட்டக் கற்றுக்
கொண்டுதான் – இந்தப்
பூமிப் பந்தில் நடக்கப் பழக
வேண்டுமா? அத்தனை
மொழிகளையும் கரைத்துக்
குடித்த பிறகுதான்
வாய் திறந்து பேச
வேண்டுமா? முகவரிகளைச்
சரிபார்த்துதான் நண்பர்களைச்
சேர்க்க வேண்டுமா?
ஆதார் அட்டையை வாங்கிப்
பார்த்துதான் அன்பு பாராட்ட
வேண்டுமா? இந்த மரம்
எத்தனை கனிகளைத்
தரும் என்று முன்கூட்டியே
கணித்துதான்,
ஒரு மாங்கன்றை மண்ணில்
நட வேண்டுமா?
எல்லாவற்றையும் தெரிந்து
கொண்டுதான் எதையும்
தொடங்க வேண்டும் என்று
யார் சொன்னது? – ஆனால்,
உலகம் அப்படித்தான்
சொல்லிக் கொண்டிருக்கிறது!
ஒன்றுமே மாறாத இந்தச்
சூழலில், மாற்றத்தை
விரும்புவது குற்றமா?
எல்லாவற்றையும் கற்ற
பிறகுதான் கருத்தைச் சொல்ல
வேண்டுமா?
தர்மம் தெரிந்தால் போதாதா?
அடுத்தவன் பசியை
உணர்ந்தால் போதாதா?
அடுத்தவன் துயரம் புரிந்தால்
போதாதா? போதும்...
ஆனால், அந்த உண்மையை
ஒத்துக்கொள்ள இங்கே
யாருக்கும் மனமில்லை!
புதிதாக முளைப்பது
காளானோ, ஆலமரமோ –
அதை அடியோடு வெட்ட
வேண்டும் என்பதே பலரது
வைராக்கியமாக இருக்கிறது.
இந்த உலகம் புல், பூச்சி,
செடி, கொடி, விலங்கு,
பறவை என அனைவருக்கும்
பொதுவானது;
அதைப்போலவே, இந்த
நாடும் ஜனநாயகமும்
அனைவருக்கும் ஆனது!
எந்த எண்ணிக்கையும்
பூஜ்ஜியத்தில்
இருந்துதான் தொடங்க
வேண்டும். கோடியில்
தொடங்கினால், அதன் முடிவு
பூஜ்ஜியத்தில் போய் முடியும்!
வலிகளைப் புரிந்து கொண்டு,
காயங்களை அறிந்து
கொண்டு தொடங்கப்படும்
எந்த ஒரு சக்தியும் –
வெறும் சத்தமாக முடிந்து
போவதில்லை! குறைகளைச்
சொல்ல வேண்டாம்,
ஆலோசனைகளை
வழங்குவோம்; அவர்கள்
கற்றுக் கொள்வார்கள், கற்றுக்
கொள்ளக் கால அவகாசம்
கொடுங்கள்! முழுக்கக்
கற்றுக்கொண்டுதான் இந்த
நாட்டுக்குள் வரவேண்டும் என
நினைத்தால், அதற்குள் இந்த
நாடே இங்கே இருக்காது!
வழிவிடுங்கள்... இதோ ஒரு
புதிய மனிதன் வருகிறான்!
தமிழர் பண்பாட்டோடு
பூச்செண்டுகள் கொடுத்து
வரவேற்போம். அவன் சரியான
பாதையில் சென்றால் பின்
தொடர்வோம்; அவனுக்குப்
பாதையே இல்லை என்று
மட்டும் சொல்லி விடாதீர்கள்!
அப்படியே பாதை
இல்லையென்றாலும்... அவன்
உருவாக்குவான் ஒரு புதிய
வழியை! அவன் நடக்கும்
பாதையே நாளைய வரலாறாக
மாறலாம்; வளரும் போது அது
சில வலிகளைத் தரலாம்!
எதிரியாய் இருந்தாலும் கை
கொடுத்துப் பாருங்கள்;
புன்னகைத்துப் பாருங்கள்,
கொஞ்சம் அன்பு செய்து
பாருங்கள்! வஞ்சனைகளையும்
வன்மத்தையும் மனதிற்குள்
பூட்டி வைக்காதீர்கள்;
அவற்றை முழுமையாகக்
கொட்டித் தீர்த்துவிட்டு,
மனிதராக வாழ முயற்சி
செய்யுங்கள்! நல்லவை
மட்டுமே உங்கள்
கண்களுக்குத் தெரியும்
போது, அல்லாதவை
அகன்றுவிடும். எதிர்வினை
தரும் மனிதர்களை அடக்க
ஏதோ ஒன்றை தேடாதீர்கள்;
அவர்கள் எரிமலையைக்
கண்டு அடங்குவார்கள்!
அந்த எரிமலையில்...
நாமும் ஒரு தீக்குச்சியாய்
இருப்போம்!



**ஜனனி அந்தோணி ராஜ்,** திருச்சிராப்பள்ளி.




# நூல் விமர்சனம்

வெளிச்ச விதைகள் !
நூல் ஆசிரியர் கவிஞர்
இரா .இரவி !

நூல் மதிப்புரை கவிஞர் முனைவர் ஆ .மணிவண்ணன் ( உதவி ஆணையர் காவல்துறை) a.m.lastcitizen@gmail. com முக நூல் Manivannan Athi Narayanan

வெளியீடு ; வானதி பதிப்பகம்.
பக்கம் .190 விலை ரூபாய் 120
23. தினதயாளு தெரு
தியாகராயர் நகர்
சென்னை 600 017.
பேச 044- 24342810 / 24310769
மின் அஞ்சல் vanathipathippakam@ gmail.com

சங்கம் கண்ட மதுரையின் காமராசர் பல்கலைக்கழக மேனாள் தகைசால் தமிழ் பேராசிரியர் இரா.மோகன் அவர்களது தமிழ் குருகுலத்தில் நான்,இக்கவிதை நூல் ஆசிரியர் என் கெழுதகை இலக்கிய நண்பர் இரா ரவி R Ravi Ravi மற்றும் பலர் மாணவராகப் பயின்று வருகின்றோம்.

அதில் இரா.ரவி அனுக்கத் தொண்டர்.

தமிழக அரசின் சுற்றுலாத்துறையில் மாவட்ட உதவி அலுவலராகப் பணியாற்றி வருகின்றார்.

பெரியார் பெருந்தொண்டர்.

பணி நேரம் தவிர்த்து இதர நேரமெல்லாம் முழு இலக்கிய வாதி,தமிழ்த் தொண்டர்.

இந்நூல் இவர் இயற்றிய 16 வது நூல். அறிமுகத்தை இன்னும் விரிவாக்கலாம்.

கவிதைகள் உதித்த பின்பு அவற்றை எழுதி விட்டு தலைப்புகள் இடுவது என்னைப் போன்ற ஒரு சிலர்.

தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து கவிதைகளை உருவாக்குதல் மற்றொரு முறை. இந்த நூலை அந்த வகையில் தான் அமைந்திருப்பார் எனத் தெரிகின்றது.

16 நூலையும் படித்த ரசிகர்கள் என்னைப் போன்று ஒரு சிலரே இருக்க வாய்ப்பு.

புகழ்மிக்க சென்னை வானதி பதிப்பகம் வெளியிட்டு பெருமை சேர்த்துள்ளது.

சான்றோர் இல்லத்து அலமாரி மற்றும் சாமானியன் மடியில் ஒரு சேர இந்நூல் அணி சேர்க்கும்.

நன்றி,வாங்கிப் படித்து பயனடையுங்கள்.என் நண்பரின் நூல். நன்றி.






## துளிப்பாக்கள்

காற்று வீசுகிறது
இலைகள் அசைகிறது
நிலவொளி அசைகிறது!

ஆசை ஆசையாக
வரைந்தான் ஓவியன்
புத்தர் ஓவியம்!

உலா வரும்போது
திரை போடுகிறது மேகம்.
முகம் காட்டும் நிலவுக்கு!

எத்தனை வாகனங்கள்
அதன் மீது சென்றாலும்
அசைவதில்லை நிழல்!

விளைந்தது நெல் பயிர்
விவசாயின் வியர்வையில்
உப்புக் கரிக்கவில்லை சோறு!

**பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை,
சென்னை



## அருணகிரித் தமிழ்..

முத்துத் தமிழ் சந்தம் பாடிட
முந்தித் திரு வருளைப்
பொழிந்திடும்
சிந்துத் தமிழ் தந்தாய் இங்கு
அருள்வாயே.!

நித்தம் புதுக் கவிதைகள்
பாடியும்.. நீடுத் தமிழ்க்
கவியால் பரவியும்..
நின்னைச் சரண் அடைந்தேன்
இங்கு வருவாயே.!

சித்தம் தனில் உந்தன்
நினைவுகள்.. சிந்துக் கவி
சிந்தும் பறவைகள்..
நித்தம் உனைத் தேடித்
திரிவதை அறியாயோ..

புத்தம் புது உணர்வுகள்
பொங்கிட.. புதுமைக் கவி
உலகில் தங்கிட..
பித்தன் எனக்காக ஒருமுறை
வருவாயோ!

*எட்டுத் தொகைப் பத்துப்
பாட்டென.. இலங்கும் கவி
சிலம்பின் ஒலியென..
எதுவும் தரவில்லை உனக்கு
அருள்வாயோ

கொட்டும் மழைக் கம்பன்
பாட்டென.. கூவும் குயில்
பாரதி இசையென..
ஒற்றைக்கவி தந்தேனில்லை
பொறுப்பாயோ?

பட்டுச் சுடர் பரவும் தாசனின்..
வெட்டும் கூர்ப் பாட்டுத்
தீயினை.. தொட்டும் ஒரு
பாடல் தந்திட மறந்தேனே..

கட்டுக் கரை மீறிடும்
ஆசையில்.. கவிதை என ஏதோ
எழுதினேன் கிட்டே வந்து ஒரு
முத்தம் தந்திடு முருகோனே.!


*சுற்றும் புவி நின்றே
கேட்கட்டும்.. சூழும் புயல்
வீசிட வாழ்த்தட்டும்..
சற்றே மயில் வாகனம்
மீதினில் வருவாயே.!

குற்றம் குறை எனக்குள்
ஆயிரம்.. கூறும் தமிழ்
ஒன்றே பாயிரம்.. குமரா
இதைக் கருத்தில் கொண்டு
பார்ப்பாயே

வற்றும் நதி
மழைவர பாயுமே
வருடும் முகில்
மொட்டுகள்
விரியுமே..
சற்றேநீ
அதுபோல்
என்னுள் வருவாயே.!

அற்றே விழும் வாழ்க்கைச்
சாலையில் அருணகிரி
அருளால் பாடுவேன்
அழகா! மலைக் குமரா!
எனக்கு அருள்வாயே.!

**வே.கல்யாண்குமார்.**



## சிலுவைப் பாதை.!

தேவனே.. தேவனே..
கல்வாரி நடந்திரோ..!
பாபமே.. என் பாபமே..
சிலுவையில் சுமந்தீரோ

காயத்தினாலே
குணப்படுத்த..
காயங்கள் ஏற்றீரோ.!
ஆயனாக வந்து
ஆடுகளுக்காக..
ஆவியினைத் தந்தீரோ !

மண்ணில் விழுந்து
புரண்டீரே.. மனிதன்
திருந்துதற்கோ..
மண்ணறை பிளந்து
வெளிப்படவே..
மரணத்தை ஏற்றீரோ.!

தானே தனது
சிலுவையினை..
சுமந்து வா என்று
அழைத்தீரோ..
தாயின் முன்னே
கண்ணெதிரே..
தாகத்தில் அழைத்தீரோ!

வருத்தப்பட்டு பாரம்
சுமந்தே.. வாழ்வினை
தந்தீரோ..!
வாடா மலரே வெயினிலே..
சிலுவையைச் சுமந்தீரோ.!

நினைவாய் செய்வீர்
என்றவரே..
எங்கள் நெஞ்சில் நிறைந்தீரோ
கனவுப் பூமியில்
கால்பதித்தே..
கல்வாரி சிலுவை
சுமந்தீரோ.!

**வே.கல்யாண்குமார்.**



## அழகோவியம்

எனக்கு இலக்கியமும்
தெரியாது இலக்கணமும்
தெரியாது! அவ்வளவு ஏன்?
தமிழ் மொழியும் கூட
முழுமையாகத் தெரியாது!
என்னைப்படிக்க வைப்பதும்
நினைக்க வைப்பதும்
எழுத வைப்பதும் காதலிக்க
வைப்பதும் என் இலக்கியச்
சோலையான நீதான்!
யாரும் வரைய முடியாத
அழகோவியம் நீ!
உயிருடன் எழுந்து வந்து
நடமாடும் சிலை நீ!
அழகைத் தன்னுள்ளே(யே)
வைத்திருக்கும் எழுதாத



பாடல் நீ!
எனக்கெனவே
பூமியில்
தோன்றிய
வானத்து
தேவதை நீ!
நீ
கிடைப்பதற்கு முன்பு
உன்னையே கேட்டுத்
தவமிருக்க நினைத்தேன்!
நீயே வரமாகக் கிடைத்து
விட்ட பிறகு இனி
வாழ்வில் வேறென்ன
வேண்டும் எனக்கு?!
இனி உன் ஒவ்வொரு
புன்னகையும் என்
வாழ்வில் வசந்தமே!

**முத்து ஆனந்த்** வேலூர்



## கட்டிக் கரும்பே கண்ணம்மா"

என் கட்டிக் கரும்பே
கண்ணம்மா!
உன்கண்ணம் சிவந்தது
என்னம்மா!
நீ கடிக்கும் கரும்பு
தேனம்மா!
அதை சுவைச்சு தின்னு
பாரம்மா!
மாமன் தோட்டத்தில்
விளைஞ்ச கரும்பு!
உன்ன தேடி வந்த நானும்
எறும்பு!
விருப்பம் இருந்தா நீயும்
விரும்பு!
சம்மதம் சொன்னா கொஞ்சம்
திரும்பு!
செய்ய வேண்டாம் இன்னும்




குறும்பு!
மிச்சம்
இருந்தால்
தந்து ஒதுங்கு.

**கவிஞர்**
**பொன் பனகல்**
**பொன்னையா.**

அழைக்க வேண்டிய
நிர்பந்தமேயில்லை..
மந்திரங்கள் மூலமாகவோ..
ராகங்களை வாசித்தோ..
தெய்வங்களைப் போலவோ..
மழையைப் போலவோ.

நினைத்த மாத்திரத்தில்
எதிரே நின்று
பொழிந்து தள்ளி விடுகிறாய்

அழைப்பதை விடவும்..
அள்ளிக் கொடுப்பதை
விடவும்.. சொல்லப்போனால்
இவை ஏதுமற்ற
தருணங்களில்
கூடுதலாகவே



பொழிந்து
தள்ளிவிடுகிறாய்
அன்பை!

தூறினாலும்..
பொழிந்தாலும்..
ஒருபோதும்
உன்
கம்பீரம் குறைவதேயில்லை.

**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்

## பயணங்கள் என்றும் முடிவதில்லை...

வாழ்க்கைப் பயணத்தைத்
தொடங்கவே, ஆழ்ந்த
சிந்தனை மனத்திலே,
சுமக்கும் பாரங்கள்
எத்தனையோ?
இதுபோல் அனைவரும்
பகிர்வோமோ?

வாழ்க்கையின் அழகை
ரசித்திடுவோம்!
நட்புக்கள் பயணம் நீளுகவே!
எத்தனைப் பெட்டிகள்
இதிலுண்டோ?
இறங்குபவர் ஏறுபவர்
எத்தனையோ?

பழகிய மனிதர் இறங்கிடுவர்!
வேறொருவர் வந்தும்
பழகிடுவர்! நினைவுகள்
சிலரின் பேச்சுக்களில்,
நின்றிடும் பயணம்
முடிவினிலே!

அன்பின் நினைவில்
இணைந்திட்ட, நட்புகள்
நாமும் பயணிப்போம்!
கற்றலில் ஒலிக்கும்
இசையாகக், கலந்தே
வாழ்வோம் இணையாக!

வாழ்க்கைப் பயணம்
சிறந்திடவே, கருத்தினில்
வேண்டும் நட்புகளே!
பயணங்கள் என்றும்
முடிவதில்லை,தொடங்கிய
இடமும் சலிப்பதில்லை!

முதல்பயணம் என்றும்
இனிமைதான்!நிதானமாகவே
செல்லும் பயணந்தான்!
கற்பனைத் திறத்தைக்



கொடுக்கும்தான்!
கவிதைகள்
பிறக்கும்
ஏராளம்தான்!

**பானுமதி**
**நாச்சியார்**
கோவை

## குறுங்கவிதைகள்

அந்தியிடம் அடகு வைத்து
மறைந்தான் மாலைக்
கதிரவன் நாளைக் காலை
மீட்கிறானாம்
எனது நிழலை.
********
பிதாவின் சார்பாக
பாதிரியாரே பிழைகளை
மன்னித்து விட்டார்.
பரிசுத்தமாகி விட்ட
பவித்ராவை பயமுறுத்துகிறது
வறுமைக் கோடு
*********
ஏடகத்தின் அமைதியை
எள்ளி நகையாடின
கொலுசுகள் ஏளனமாய்
சிரித்துக் கொண்டன
எட்டிப் பார்த்த
சுவர்ப்பல்லிகள்.
*********
முதலிரவுக்கு முன்பே
விழுந்து முறித்துக்
கொண்டாள் முழங்காலை.
மூன்று முடிச்சு விழுமுன்
முதியோரில்ல முகவரியை
அறிந்தவள்
**********
வைகறையின் இறுதி
ஊர்வலத்தில் கலந்தே
விடைப் பெறுகிறோம்
இருளில் நடைப் பயிலும்
நானும் மௌனமும்
**********
பணி ஓய்வுப் பெறுகிறார்
பள்ளித் தலைமை ஆசிரியர்
வரிசையில் நின்று
வாழ்த்துகின்றன
வலிய அறுபது ஆண்டுகள்
**********
சூழ்ந்தன போர் மேகங்கள்
பொழிந்தது குண்டு மழை.
பாதி பாதியாய் எரிந்தும்
பாங்காய் நிற்கும்
போதிமரங்கள்.
**********
மழை நிற்க
காத்திருக்கின்றன
அரைவில்லும் குறை நிலவும்
மொட்டு மலர
காத்திருக்கின்றன(ர்)
வண்டுகளும் பெண்டுகளும்.
""""""""""""""""""""""""""""""""""""""""
பாழடைந்த வீட்டைத்
திறந்ததும் வேகமாய்
வெளியேறுகிறது



வௌவாலுடன்
அமானுஷ்யம்
காரிருள்
செய்கிறது
வசியம்

**முனைவர்**
**வே.புகழேந்தி,**
பெங்களூர்

## தமிழ் இலக்கியத்தின் மணிமகுடம் திருக்குறள்

தமிழ் இலக்கியத்தின்
மணிமகுடம் திருக்குறள்
தனிப்பெரும் இடம்பெற்ற
இலக்கியம் திருக்குறள்
தமிழ் என்ற சொல்லே இடம்
பெறாத திருக்குறள்
தமிழன் என்ற சொல்லே
இடம் பெறாத திருக்குறள்
கடவுள் என்ற சொல்லே
இடம் பெறாத திருக்குறள்
கற்கண்டை மிஞ்சும்
கனிச்சுவை மிக்க
திருக்குறள் வாழ்வியல்
நெறியை பயிற்றுவிக்கும்
திருக்குறள் வாழ்வின்
அர்த்தம் உணர்த்தும்
திருக்குறள் உலக
இலக்கியங்களின்
உன்னதம் திருக்குறள்
உலகிற்கு அறநெறி
அறிவிக்கும் திருக்குறள்
உலக மொழிகளில்
மொழிபெயர்க்கப்பட்ட
திருக்குறள் உலக மக்கள்
யாவரும் அறிந்த திருக்குறள்
அழியாப் பெருமையுடன்
நிலைத்திருக்கும் திருக்குறள்
அறியாமை நீக்கிடும்
அறிவுடைமை திருக்குறள்
மனிதநேயம் மனத்தில்
விதைக்கும் திருக்குறள்
மடமை நீக்கி பகுத்தறிவைப்
போதிக்கும் திருக்குறள்
ஈடு இணையற்ற இனிய
இலக்கியம் திருக்குறள்
எண்ணிலடங்கா கருத்துப்
புதையல் திருக்குறள்
காந்தியடிகளின் குரு
டால்ஸ்டாய் என்ற அறிஞர்
டால்ஸ்டாயின் குரு
செந்நாப்புலவர் திருக்குறள்
சொக்க வைக்கும்
சொற்களின் சுரங்கம்
திருக்குறள் சோகத்தை
மறக்க வைக்கும் சுகம்
திருக்குறள் தமிழுக்கும்
செம்மொழி பெற்றுத் தந்த



திருக்குறள்
தமிழருக்குப்
பெருமை
ஈட்டித் தந்த
திருக்குறள்!

**கவிஞர்**
**இரா.இரவி**



## குல்லா வியாபாரியும்.. குட்டிக் குரங்குகளும்.!

குல்லா விற்க போனாரே முல்லா முஸ்தப்பா.! கோடை வெயில் தகதகக்க ஊரு ஊராக.!

எல்லோருக்கும் எடுக்கும் பசியை நீக்க வேண்டியே.. குல்லா வியாபாரம் செய்தார் முல்லா முஸ்தப்பா.!

நடுப்பகலில் நடைதளர்ந்து சோர்வு ஏற்பட.. கொடும் வெயில் காலத்திலே முல்லா முஸ்தப்பா..

ஆலமரம் ஒன்றைக் கண்டு அதனின் அருகிலே.. தலைச் சுமையை இறக்கி வைத்து உறக்கம் கொண்டாரே..!

இலை அசைய.. காற்று வீச.. கனவுகள் சூழ..
இனிய மரத்தடியிலேயே கண்ணயர்ந்தாரே.. நல்லா இதைப் பார்த்தனவே.. வானரக் கூட்டம்!

குல்லா விற்று மாடி வீடு கட்டிய முல்லா.. குரங்குகளோ மூட்டையைத் திறந்து குல்லாக்களை எடுத்தே..

எல்லாக் குரங்கும் குல்லாப் போட்டு மரத்தின் மேலடா..இவர் விழித்து பார்த்து உடன் பதைபதைக்கிறார்.!

அல்லா.. எந்தன் குல்லா எல்லாம் குரங்குத் தலையிலே.. நல்லாத் தூங்கி விட்டேனே.! மனதில் நினைக்கிறார்!

குல்லாவினைத் தருவீரோ குரங்குகளே என்றார். குறும்பு செய்யும் குரங்குகளோ குதித்து ஆடின..

மனிதன் செய்யும் காரியத்தை மந்திகள் செய்யும்.. தாத்தா பாட்டி சொன்ன கதை ஞாபகம் வரவே..

தன் தலையில் இருந்த குல்லா.. தன் கையில் எடுத்து.. தரையினிலே வீசிவிட்டார் முல்லா முஸ்தப்பா!

எல்லா குரங்கும் இவரைப் பார்த்து தரையினில் வீச.. எடுத்து அடுக்கி.. மூட்டை கட்டும் முல்லா முஸ்தப்பா!

குரங்கு குல்லா வியாபாரி கதை நமக்குத் தெரியும்.. கனவு கண்டே தூங்கி வழிய.. துயரமே தானே தொடரும். !

எல்லோருமே விழிப்புடனே கடமையாற்றவே.. நல்லா இருக்கும் நமது வாழ்வு என்பது புரியும்.! அனுபவம் உரைக்கும்.!

**வே.கல்யாண்குமார்.**

## காதல் சிலுவை

உன் கட்டுக் கடங்காத
நேரங்களில் கொஞ்சமும்
யோசிக்காமல் நீ உன்
மௌனம் என்னும்
*காதல் சிலுவையில்
என்னை அறைந்து விட்டுப்
போய் விடுகிறாய்!
உன் இரக்க மனம் கூடப்
பரிதாபத்திலிருந்து தடம் மாறி
கருணையிலிருந்து இடம் மாறி
அரக்க மனமாக மாறுகிறது!
ஆறுதல் பெறக்கூட வழியின்றி
நான் அமைதியை நாடுகையில்
ஆர்ப்பரித்து வந்து
அணைக்கிறாய்!
இது என் மீதுள்ள அதீத
காதலா? எவரேனும்
என்னைக் கைப்பற்றி
விடுவார்களோ என்று
காதலான ஐயமா?
எதுவென்றாலும் நீ
உன் மன அரியணையிலிருந்து
என்னை ஒரு வினாடியேனும்
இறக்கி வைக்க
நினைத்ததில்லை என்பதே
எனக்கோர் அழகான வரம்!

## கரம் சேர்ந்த ஜெபமாலை

என் மனம் கவர்ந்த
கவிதை நீ! என் கரம் சேர்ந்த
ஜெபமாலை நீ! உன்
வசந்தமான வரவேற்பில்
காதல் தின்னும்
கவிஞனாகிறேன் நான்!
உன் காதலான மோகத்தில்
அன்பு சிந்தும்
குறும்பனாகிறேன் நான்!
வஞ்சி நீ எனக்களிக்கும்
சமபந்தி விருந்தில்
ரசித்தே ருசிக்கும்
கலைஞனாகிறேன் நான்!
உன்னை நான் உற்று
நோக்கும் வேளைகளில்
என்னை இழுத்தணைத்து
பார்வை மட்டு(ம்)மே
பசிக்குப் போதாதென்று
நிரூபிக்கிறாய் நீ!
உன் தோழிகள் கவிதை
எழுதும் நேரங்களில் நீ
வெகு சமர்த்தாக என்னைப்
படிக்க வந்து விடுகிறாய்!
இந்தக் கவிதைகள் போதுமா?
இன்னும் கொஞ்சம்
வேண்டுமா? என்ற
கேள்வியை உன்
கண்களின் பார்வைகள்
நிரந்தரமாய் வைத்திருக்கிறது!
வாழ்வியல் காதலை
மிக மகத்துவமாய்
வைத்திருக்கிறது எனக்கான
உன் அழகு இ த ய ம்!
அதை விட வேறேதேனும்
சொர்க்கம் இருக்குமா
என்ன!?

## குருத்தோலை பிடித்தவள்

உனக்காகத்தவமிருக்கவில்லை!
வரம் கேட்கவில்லை!
ஆனாலும் குருத்தோலை
பிடித்தவளான நீ கிடைத்தது
எனக்குப் பெரும்பேறு!
ஒரு டேலியா பூ போல்
உனக்கு எந்த நேரமும்
அன்றலர்ந்த அழகிய முகம்!
அதை ரசித்து ரசித்து
நான் பரவசமடைகையில்
என்னுள் ஊடுருவிப்
பரவசமடைகிறது நம் பேரன்பு!
நீ அனுமதி வழங்கிய பிறகு
அந்தக் காதலின் பணி
என்னைப்பேரரசனாக்கி
மணி மகுடம் சூட்டியது!
கவிதை படிக்க நேரமில்லை
என்கிறாய் அது கூடப்
பரவாயில்லை! முத்தமிடவும்
கூட நேரமில்லை என்கிறாய்!
இப்பொழுது தான்
நினைக்கிறேன் ஊர்
சொல்வது போல் நீ
ரவுசுப் பார்ட்டியோ என்று!
எது வேண்டுமானாலும்
நடக்கட்டும்! நீயே
என்றென்றும் என்
உயிருக்கு(ள்) உயிரான
காதலி! ஆசைக்கு(ள்)
ஆசையான நாயகி!




**மேய்ப்பனின் ஆடு**
எங்கும் தூரத்தே சென்று

விடாமல் *மேய்ப்பனின்
ஆடு போல என் கண்
முன்னேயே தான்
எப்போழுதுமிருக்கிறாய் நீ!
உன் முத்தங்கள் மட்டுமே
எனக்கு மகர சங்கராந்தியான
சர்க்கரைப் பொங்கல்!
உன் அதரங்களின் கவிதைச்
சுவை எனக்கு எப்பொழுதும்
முக்கனிகளின் இனிப்பையே
தோல்வியுறச் செய்யும்
நான்காவது கனி!
உன்னையன்றி வேறு யாரடி
அன்பே எனக்கு வாழ்நாள்
காதலன் விருதை
வழங்கி விட இயலும்!
என் சுடிதார் சொர்க்கமே
உன் துப்பட்டா கூட என்
கவிதைகளுக்கான
உயிரெழுத்துக்களையும்
மெய்யெழுத்துக்களையும்
உயிர்மெய் எழுத்துக்களையும்
வைத்திருக்கும்!
காதல் எனப்படுவது
யாதெனின்
இதுவேதானன்றோ!

## தேவாலயப் புறா

நீ தேவாலயப் புறா என்பதால்
உன் பார்வை என் புறம்
திரும்பாதென்றே என்
காதலை மறைத்து
வைத்திருந்தேன்!
நல்ல வேளை உன் காதல்
என்னைக் கண்டுபிடித்து
விட்டது என் காதலால்
ஓடவும் முடியாது ஒளியவும்
முடியாது என்று!
எண்ணற்ற முத்தங்கள்
நமக்குள் கலந்து விட்ட
போதிலும் ஒவ்வொரு
முறையும் முதல் முறை
போலவே நமக்குள் காதல்
எப்படியெல்லாம்
இழைந்தோடுகிறது பாரேன்!
காதல் மிரண்டால்
கவிதை கொள்ளாது என்பது
எவ்வளவு அழகான உண்மை!
நான் எப்பொழுதும்
உன்னைப் பற்றித்தான்
நினைத்துக்கொண்டிருக்கிறேன்!
இது வரை எந்தக்
கவிதையிலும் காணாத
அழகை உன்னிடம்
நான் ஒவ்வொரு நொடியும்
கண்டுகளிக்கிறேன்!

**முத்து ஆனந்த்**
வேலூர்


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539



PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
Salary: ₹10,000 - ₹15,000
Attractive Incentives
Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale
Residential / Commercial
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005



SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview


உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST MATRIMONY WEBSITE
CALL: 7789951009

ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
- Residential Construction
- Commercial Construction
- Customer Satisfaction
Contact Us
9710348377

VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
(FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY OR SELL
PROPERTY OR LAND?
+91 9884417843

Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுபவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்







# கோடை விடுமுறையும், குடும்ப விவாதமும்....

கோடை விடுமுறைக்கு
குற்றாலம் செல்வோம்
என்கிறாள் மகள் .
கொடைக்கானல், ஊட்டி
செல்வோம் என்கிறான்
மகன் .
திருசெந்தூர் , பழனி
செல்வோம் என்கிறாள்
மனைவி .
புன்னகையோடு கேட்டுக்
கொண்டிருக்கிறான்
கணவன் .



ஹாய்...டாட் ...
சம்மர் வெகேசனுக்கு
சிங்கப்பூர் ,மலேசியா
வேண்டாம்
பாரிஸ் போகலாம்
என்கிறாள் மகள் .
லண்டன் போலாம்
என்கிறான் மகன் .
ஆஸ்திரேலியாவில்
உள்ள தன்
அக்கா வீட்டிற்குப்
போகலாம்
என்கிறாள்



அம்மா .
எனி ஒன் ஒ.கே
என்கிறார்
அப்பா .

லீவுக்கு விறகு
பொறுக்கப்
போ
என்கிறாள் அம்மா .
செங்கல் சூளைக்குப் போ
என்கிறார் அப்பா .
வெயிலுக்குள்ள படிக்கிற
புள்ள
எதுக்கு ?
தீப்பெட்டி ஆபிஸ் போ
என்கிறான் அண்ணன் .
இப்படியாக விவாதம்
நடக்கிறது
அவரவர் வீட்டில் .



## விடுகதை

| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |

# வாக்கு மறதி..

கடுங் குளிர் நிறைந்த ஒரு இரவில் ஒரு மன்னன் தன் அரண்மனைக்கு வந்தான்..
அரண்மனைவாசலில் மெல்லிய ஆடையுடன் வயது முதிர்ந்த காவலாளியைப் பார்த்தான்..
குளிர் கடுமையாக இருக்கிறதே.. அதை நீ உணரவில்லையா..? என்று கேட்டான்..
ஆம்.. உணர்கிறேன் மன்னா.. ஆனால், குளிரை தடுக்கும் ஆடை என்னிடம் இல்லையே..! என்றான் காவலாளி..

அதற்கு மன்னன், கவலைப்படாதே, நான் அரண்மனை சென்று குளிரை தாங்கும் கம்பளி ஆடையை உனக்கு அனுப்புகிறேன்.. என்று கூறி அரண்மனைக்குள் சென்றான்..

மன்னரின் வார்த்தையை கேட்டு அந்த காவலாளி அகமகிழ்ந்தான்..

அரண்மனைக்கு சென்ற மன்னன் தான் வாக்களித்தை மறந்தே போனான்..

மனிதனின் எத்தனையோ பலவீனங்களில் பாழாய்ப்போன மறதியும் மிக மோசமான ஒன்று..

காலையில் பார்த்தால் அந்த காவலாளி இறந்து கிடந்தான்.. அவனருகே ஒரு கடிதம் இருந்தது.. அந்த கடிதத்தில் இவ்வாறு



எழுதப் பட்டிருந்தது.. மன்னா..!! இவ்வளவு நாட்களாக கடும் குளிரை தாங்கி கொண்டிருந்தேன்.. ஆனால், குளிரை தாங்கும் ஆடை கிடைக்கும் என்ற என் எதிர்பார்ப்பு இதுவரை இருந்த என்னுடைய மன உறுதியை குலைத்து என்னை கொன்று கொண்டிருக்கிறது..

வாக்குறுதிய கொடுத்தால் அதனை எப்பாடுபட்டேனும் உறுதியாக காப்பாற்றிட வேண்டும்.. அது வெறும் வெற்று வார்த்தைகளில்லை.. காற்றில் கரையும் வார்த்தை என்றாலும் மற்றவருகளுக்கோ அது 'உயிராகக்கூட' இருக்கலாம்..

*ஆம்..! நீங்கள் கொடுக்கும் வாக்குறுதி, மற்றவரிடம் நீங்கள் எண்ணி பார்க்காத அளவு நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.. எனவே, அந்த வாக்குறுதிக்கு முன் சற்று யோசியுங்கள்..



# ஜோக்ஸ்

ஜோக்ஸ் பகுதிக்கு
காவலர் 1: நமது அரசியார் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறாங்களே! ஏன்?
காவலர் 2: போர்களத்திலிருந்து நமது அரசர் ஓடி வரும் அந்த கண்கொள்ளா காட்சியை கண்டு ரசிக்கத்தான்.
நாஞ்சில் சு. நாகராஜன்

ஒருவர் : டி. வி. யில் பேட்டி கொடுக்கும் அந்த டாக்டரை போலி என்கிறாயே! ஏன்?



அடுத்தவர்: கொசு கடிச்சாலும் தொப்பிளை சுற்றி மூணு ஊசி போடச் சொல்றாரே!

ஜோக்ஸ் பகுதிக்கு
இளைஞன் : டாக்டர், உங்க கிளினிக்கை அண்ணாந்து பார்த்தா எனக்கு தலை சுத்துகிறது.
டாக்டர் : எதற்கு அண்ணாந்து பார்க்கிறீங்க?
இளைஞன் : உங்க கிளினிக்கின் மூன்றாவது மாடியில்தான் என் லவ்வர் வீடு இருக்குது டாக்டர்.

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## நள்ளிரவில் அதிக பசியா? இதை செய்யுங்கள்



நீரிழிவு நோயாளிகள் ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்துக்கொள்வதற்காக பெரும்பாலும் இரவில் குறைவாகத்தான் சாப்பிடுவார்கள். அப்படி குறைவாக சாப்பிடுவதால் இரவு 2 மணியளவில் கண்டிப்பாக பசி எடுத்துவிடும். ஆனால் பசியில் அதிகமாக சாப்பிட்டு விட்டாலும் சரி, தவறான உணவைத் தேர்ந்தெடுத்து சாப்பிட்டாலும் சரி ரத்த சர்க்கரை அளவு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

உண்மையைச் சொன்னால் ரத்த சர்க்கரை அளவு அதிகரிக்கக் கூடாது ஆனால் அதே சமயம் பசியும் அடங்க வேண்டும், அதற்கான உணவைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே சாதனையாகத்தான் கருதப்படுகிறது.

இரவு நேரத்தில் ஏற்படும் பசியைப் போக்க வேண்டும். ஆனால், ரத்த சர்க்கரை அளவை பாதிக்கக் கூடாது. இந்தவகை உணவுகளைப் பற்றிதான் இப்போது பார்க்கப் போகிறோம்...

முதலில் பிளைன் க்ரீக் யோகர்ட் அதாவது கிரேக்க தயிர். இதில் புரதமும் மிகக்குறைந்த அளவிலான இயற்கை சர்க்கரையும் உள்ளது. இதில் உள்ள புரதம் உங்கள் பசியை போக்குவதோடு இல்லாமல் செரிமானத்தையும் சீராக்கும். அத்துடன் ரத்த சர்க்கரை அதிகரிப்பைத் தடுக்கவும் உதவி செய்யும். 2019 –யில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், கிரேக்க தயிர் ரத்த சர்க்கரை அளவை அதிகரிக்காது என்று கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, நீங்கள் இரவு நேர பசியின் போது பயப்படாமல் கிரேக்க தயிரை சாப்பிடலாம்.

அடுத்ததாக பாதாம் பருப்பு. பாதாம் பருப்பில் குறைந்த கார்போஹைட்ரேட், அதிக நார்ச்சத்துகள் நிறைந்துள்ளதாகவும் இது ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை பராமரிக்க உதவுவதாக 2002 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு முடிவு தெரிவித்துள்ளது. எனவே நீங்கள் தூங்க செல்வதற்கு முன் ஒரு கைப்பிடி பாதாம் பருப்பை தாராளமாக சாப்பிடலாம். வயிறு முழுமையாக உள்ளது போன்ற உணர்வையும் தரும். அதேசமயம் உங்கள் தூக்கத்தை சீர்குலைக்காமல் பார்த்துக்கொள்ளும்.

தினமும் நள்ளிரவில் பசிக்கிறது என்றால், தூங்க செல்வதற்கு முன் நீங்கள் தாராளமாக வேக வைத்த முட்டையை சாப்பிடலாம். 2023-இல் நடத்தப்பட்ட ஆய்வின்படி முட்டையில் கார்போஹைட்ரேட் குறைவாக இருந்தாலும் நல்ல கொழுப்புகள் மற்றும் புரதம் அதிகமாக இருப்பதால் ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது. அதுமட்டுமின்றி, மெலடோனின் உற்பத்தியை அதிகரிக்க செய்து தூங்குவதற்கும் உதவி செய்கிறது.

கடைசியாக பாசிப்பருப்பு சூப் மற்றும் பனீர் முதலானவற்றை எடுத்துக்கொள்ளலாம். பாசிப்பருப்பு சூப் செய்யும் போது அதில் செரிமானத்திற்காக சிறிதளவு நெய், சீரகம், பெருங்காயம் முதலானவற்றை சேர்த்துக்கொள்ள வேண்டும். சூப்பை வெதுவெதுப்பான சூட்டில் குடிக்க வேண்டும். பாசிப்பருப்பு சூப்பும் ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.

பனீர் எடுத்துக்கொள்ளும் போது அதனுடன் கருப்பு மிளகு சேர்த்துக்கொள்ளலாம். 2019 ஆய்வு முடிவின் படி பனீரில் கார்போஹைட்ரேட் குறைவாகவும், கேசீன் புரதம் அதிகமாகவும் உள்ளதாகவும் இதனால் பசியைக் கட்டுப்படுத்தி முழுமையாக சாப்பிட்ட உணர்வையும் வழங்குவதாக கூறுகிறது.



உங்கள் நள்ளிரவு நேர பசியை போக்கிக்கொள்ளவும் ரத்த சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கும் மேற்கண்ட உணவுகளை நீங்கள் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம்.

## சர்க்கரைக்கு பதில் வெல்லம் பயன்படுத்தினால் கிடைக்கும் நன்மைகள்

சர்க்கரை அதிகமாக எடுத்துக்கொள்பவரா நீங்கள். அப்படியென்றால் இந்த பதிவு உங்களுக்காகத்தான். ஒரு நாளில் நீங்கள் எடுத்துக்கொள்ளும் சர்க்கரைக்கு பதிலாக வெல்லம் எடுத்துக்கொண்டால் உங்கள் உடலுக்கு அவ்வளவு நன்மை கிடைக்கபெறும்.

வெல்லத்தில் ஆண்டி ஆக்சிடன்டுகள், இரும்புச்சத்து, செலினியம், மக்னீசியம் முதலான சத்துகள் அதிகமாக உள்ளது. அதனால் தான் சித்த மருத்துவத்தில் கூட வெல்லம் சேர்க்கப்படுகிறது.

வெல்லத்தில் இரும்புச் சத்து அதிகமாக உள்ளதால், இரத்தத்தை சுத்திகரிக்க உதவுகிறது. இதன்மூலம் சருமத்தை மேம்படுத்தி



உடலையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்துகிறது. ஒவ்வாமையால் ஏற்படும் ஆஸ்துமா பிரச்சனைகளுக்கு உகந்ததாகவும், தொண்டை புண் மற்றும் இருமலை போக்கவும் சளிக்கு அருமருந்தாகவும் செயல்படுகிறது.

வெல்லத்தில் பொட்டாசியம் சத்து அதிகளவில் உள்ளதால் இதய செயல்பாட்டை சீராக்கவும், ரத்த அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது.

வயிறு, உணவுக்குழாய், நுரையீரல் போன்ற உடல் உறுப்புகளை உறுதியாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க உதவுகிறது. மேலும், மலச்சிக்கலைத் தடுத்து செரிமானத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. முக்கியமாக வெல்லத்தில் உள்ள நீர் உடல் எடையைக் குறைக்க உதவுகிறது.

நீங்கள் உணவு அருந்தியபிறகு வெல்லம் சாப்பிடுவது மிகவும் நல்லது. ஏனென்றால், வெல்லம் செரிமான நொதிகளை சீராக செயல்படுத்துகிறது. இதனால் உணவானது எளிதில் உடைந்து ஜீரணமாக உதவி புரிகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக வெல்லம் மிகச்சிறந்த நச்சு நீக்கி என்றே சொல்லலாம். இயற்கையாகவே வெல்லத்தில் நச்சுகளை நீக்கும் தன்மை உள்ளது. இது நம்முடைய உடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றி கல்லீரலையும் சுத்தப்படுத்துகிறது.

இத்தனை சிறப்பம்சங்களைக் கொண்ட வெல்லத்தை சர்க்கரைக்கு மாற்றாக தாராளமாக பயன்படுத்தலாம். இருப்பினும் சர்க்கரையோ வெல்லமோ எதுவாக இருந்தாலும் அளவோடு எடுத்துக்கொள்வது நல்லது.


## தலையில் எண்ணெய் தேய்ப்பது சரியா...?

தலைமுடி அடர்த்தியாகவும் கருகருவென்றும் பளபளப்பாகவும் இருக்க எண்ணெய் மிகமிக உதவியாய் இருக்கும்.

தலையில் எண்ணெய் தேய்க்காமல் இருப்பதை விட தினமும் எண்ணெய் தேய்ப்பதினால் உடலுக்கு நிறைய நன்மைகள் இருக்கின்றன. காய்ந்து போன, கரடுமுரடான, சரிவர பராமரிக்காமல் பாதிக்கப்பட்ட, அடைபட்ட மயிர்க்கால்களின் நுண்துளைகள் எரிச்சலூட்டும் தலைப்பொடுகு உள்ள தலைமுடி மற்றும் முடி கொட்டுதல் போன்ற பிரச்சனைகள் தீர வாரத்துக்கு இருமுறை தலையில் எண்ணெய் தேய்ப்பது நல்ல பலன்களைத் தரும்.

ஒருநாள் விட்டு ஒருநாள் அல்லது வாரத்தில் இரண்டு நாட்கள் தலையில் எண்ணெய் தேய்ப்பது என்பது உலர்ந்த காய்ந்துபோன தலைமுடிக்கு மிகவும் நல்லது. தலையில் ஏற்படும் சில சரும நோய்களுக்கு தினமும் மருந்து கலந்த எண்ணெய் தேய்ப்பது நல்லது என்று சருமநோய் சிறப்பு சிகிச்சை நிபுணர்கள் பரிந்துரை செய்வதுண்டு.

தலையிலுள்ள மயிர்க்கால்கள் பாதிக்கப்படாமல் இருக்க எண்ணெய் மிகவும் உதவியாய் இருக்கும். தலையில் எண்ணெய்



தினமும் தேய்ப்பதால் தலைமுடிக்கு மட்டுமல்ல, உங்கள் உடம்பையே புத்துணர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் குளிர்ச்சியாகவும் வைத்திருக்கும். உங்கள் தலைமுடி அடர்த்தியாகவும் கருகருவென்றும் பளபளப்பாகவும் இருக்க எண்ணெய் மிகமிக உதவியாய் இருக்கும்.

தலைக்கும் தலையிலுள்ள மயிர்க்கால்களுக்கும் தேவைப்படும் சத்துப்பொருட்களுக்கும் வைட்டமின்களுக்கும், மயிர்க்கால்கள் உறுதியாக இருக்கவும் தலைமுடி நன்கு வளரவும் எண்ணெய் மிகவும் உதவுகிறது.

தலைமுடியில் இருக்கும் சுருள்முடிகளை நேராக்க எண்ணெய் உதவுகிறது. தலையில் பொடுகு வராமல் தடுக்க, இளநரை வராமலிருக்க, மன அழுத்தத்தைப் போக்க, பேன் தொந்தரவு இல்லாமலிருக்க, தலைமுடி கொட்டுவதைத் தடுக்க எண்ணெய் மிகவும் உதவுகிறது.

## காடை இறைச்சியில் இத்தனை சத்துக்களா?

கோழி இறைச்சியைவிட மிகவும் சுவையும், சத்தும் கொண்டது காடை இறைச்சி. 'கட்டில் கிடப்பார்க்கு காட்டில் படும் காடை' என்கிறது, சித்த மருத்துவ பாடல் ஒன்று. நோய்களால் உடல் இளைத்த ஒருவன் காடை இறைச்சியுடன் சோறு சாப்பிட்டால், கட்டழகன் ஆவான் என்கிறது தமிழ் நூல் ஒன்று.

கோழி இறைச்சியை ஒப்பிடும்போது மிகக் குறைவான கொழுப்பு, ஏராளமான உயிர்ச்சத்துகள் காடை இறைச்சியில் உள்ளன. மூளைக்கு முக்கியமான கோலின் சத்து, வைட்டமின்கள் ஏ, பி-1, பி, டி, கே மற்றும் புரதம், கால்சியம், இரும்பு, துத்தநாகம் உள்பட பல சத்துக்கள் இவற்றின் மூலம் கிடைக்கின்றன. காடை இறைச்சியில் அதிக ஒலிக் அமிலம் இருப்பதால், இதய நோய் அபாயத்தை குறைக்கிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன.



நீரிழிவு நோயாளிகள், காடை இறைச்சியை உணவில் எடுத்துக்கொண்டால் ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தலாம். மேலும் கண்பார்வை பாதிப்புகளை தடுத்து விழித்திரைகளை மேம்படுத்துகிறது. காடை இறைச்சியில் உள்ள பாஸ்பரஸ், கால்சியம் சத்துக்கள் மூட்டு தேய்மானத்தை தடுப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

இதே போல், காடை முட்டைகள் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தி, மூளையின் செயல்பாட்டை அதிகரிப்பதுடன், நரம்பு மண்டலத்தை உறுதிப்படுத்துகின்றன. உடலில் ஹீமோகுளோபின் அளவை அதிகரிப்பதன் மூலம் ரத்த சோகையை தடுக்கிறது. காசநோய், ஆஸ்துமா மற்றும் நீரிழிவு நோய்க்கான சிகிச்சையில் காடை முட்டையை சிறந்த மருந்தாக சீனர்கள் பயன்படுத்துகின்றனர். சிறுநீரகம், கல்லீரல், பித்தப்பை போன்றவற்றில் கற்கள் உருவாவதை காடை முட்டைகள் தடுக்கும் என்று கூறப்படுகிறது.

இத்தாலி, மெக்சிகோ, ஜப்பான், போலந்து, பிரெஞ்சு போன்ற நாடுகளில் காடை, மிகவும் விரும்பி உண்ணப்படும் இறைச்சியாக உள்ளது.

## செல்போனால் இளைஞர்களுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம்



இளைஞர்களில் பலர் எல்லாவற்றிலிருந்தும் அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். கல்வி, வேலை, நிதி சிக்கல்கள், அதிகரித்த செல்போன் பயன்பாடு, போட்டித்தன்மை போன்ற பல காரணங்களால் மன அழுத்தம் ஏற்படுகிறது.

கடுமையான மன அழுத்தத்தில் இருப்பவர்களிடையே பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகரித்து வருவதாக அமெரிக்க நரம்பியல் அகாடமி எச்சரித்துள்ளது.

வாழ்க்கை முறை மாற்றங்கள் காரணமாக அதிகரித்து வரும் மன அழுத்தம் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அது விளக்கம் அளித்துள்ளது.

இதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு மூளையின் ஒரு பகுதிக்கு ரத்த விநியோகம் துண்டிக்கப்படுகிறது. அவர்கள் சோம்பேறியாக மாறுகிறார்கள், பேச முடியாத நிலை ஏற்படும். அவர்கள் பார்வையை இழக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் மரணம் ஏற்படுகிறது.

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு கடுமையான மன அழுத்தத்தை அனுபவித்ததாக இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

பின்லாந்தில் உள்ள ஹெல்சின்கி பல்கலைக்கழக மருத்துவமனை உட்பட பல்வேறு மருத்துவ நிறுவனங்கள் இந்த ஆய்வில் பங்கேற்றன. மன அழுத்தத்தில் இருக்கும்போது, கார்டிசோல் அட்ரினலின் மற்றும் நோராட்ரெனலின் போன்ற ஹார்மோன்கள் வெளியிடப்படுகின்றன.

சிறிது மன அழுத்தத்துடன் இந்த ஹார்மோன்கள் உடலுக்கு அவசியமானவை. ஆனால் அவை அதிகமாக வெளியிடப்பட்டால் ஆரோக்கியத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். இதயத்துடிப்பு அதிகரிக்கிறது. உயர் ரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

இதையும் படியுங்கள்: நள்ளிரவில் அதிக பசியா?- நீரிழிவு நோயாளிகளுக்கு குட் நியூஸ்

இது உறுப்புகளை சேதப்படுத்தும் மன அழுத்தம் மூளை மற்றும் இதயம் உட்பட அனைத்து உறுப்புகளிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தொடர்ச்சியான மன அழுத்தம் நினைவாற்றலைக் குறைக்கிறது. படிக்கும் திறன் குறைகிறது. முடிவுகளை சரியாக எடுக்க முடியாது. கவனம் குறைகிறது. உணர்ச்சிகளில் அதன் தாக்கத்தால் பயம் மற்றும் பதட்டம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்கு இது மிகவும் ஆபத்தானது. சிலர் எடை கூடுகிறார்கள். சிலர் எடை குறைகிறார்கள். பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. நோய் எதிர்ப்பு



சக்தி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. பாலியல் திறன் குறைகிறது. மனச்சோர்வு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.


மன அழுத்தத்தை உணரும்போது அதற்கான காரணங்களை அடையாளம் காண வேண்டும். எந்தெந்த காரணிகள் நமக்கு பிரச்சனையை ஏற்படுத்துகின்றன என்பதை பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

நீண்ட நேர செல்போன் பயன்பாடுகளை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விட்டுவிட்டு நேர்மறை சிந்தனையை ஏற்றுக்கொள்ள வேண்டும். மன அழுத்தத்தைக் குறைப்பது நம் கையில்தான் உள்ளது. நமது வாழ்க்கை முறையிலும் உணவு முறையிலும் மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

சர்க்கரை மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்து புரதம் அதிகம் உள்ள உணவுகளை உண்ணுங்கள். தேவைப்பட்டால் ஒரு உணவியல் நிபுணரின் ஆலோசனையுடன் சீரான உணவை உண்ணுங்கள். தினமும் அரை மணி நேரம் வாரத்தில் குறைந்தது 5 நாட்களாவது உடற்பயிற்சி செய்யுங்கள்.

எல்லாவற்றிலும் மன அழுத்தத்தில் இருப்பவர்கள் அறிவாற்றல் நடத்தை சிகிச்சையைப் பரிசீலிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்





8122664699

## காட்பாடி சட்டமன்றத் தொகுதி, த.மா.மு.தி.க சார்பில் இளம்பெண் வழக்கறிஞர் இந்து வில்லியம்ஸ் வேட்புமனுத் தாக்கல்!



**வேலூர், ஏப். 04:** வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் தமிழ் மாநில முற்போக்கு திராவிட கழகத்தின் (த.மா.மு.தி.க) சார்பில் அந்த கட்சியின் நிறுவனத் தலைவர் வில்லியம் சத்தியராஜ் மகள் இந்து வில்லியம்ஸ், 2ம் தேதி தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.


## வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில் தேர்தல் பொது பார்வையாளர் நேரில் ஆய்வு




**வாடிப்பட்டி, ஏப்.04:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலு கா அலுவலகத்தில் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் வேதபதி மிஸ்ரா தேர்தல் பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார். அப்போது வழங்கப்பட்ட வேட்பு மனுக்கள், பெறப்பட்ட வேட்பு மனுக்களின் விபரங்கள், தேர்தல் பறக்கும் படை தேர்தல் நிலை கண்காணிப்பு குழு செயல்பாடுகள் மற்றும் பணிகள் விபரங்களைதேர்தல் நடத்தும் அதிகாரிகள் மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அதிகாரி சண்முக வடிவேலிடம் கேட்டறிந்து ஆவணங்களை ஆய்வு செய்தார்.

உடன் உதவி தேர்தல் அதிகாரி தாசில்தார் ராமச்சந்திரன், தேர்தல் துணை தாசில்தார் கருப்பையா ஆகியோர் இருந்தனர்.

## திருநீலக்குடி, அருள்மிகு ஸ்ரீவீரமாகாளியம்மன் ஆலயத் திருவிழா.



திருவிடைமருதூர் / திருநீலக்குடி, கோயில் பத்துத் தெரு, அ.மி. ஸ்ரீவீரமாகாளியம்மன் ஆலயத்தின்,54ஆம் ஆண்டு, திரு நடனத் திருவிழா, பக்தி பரவசத்தோடு, வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.செய்தி: குடந்தை பரிபூரணன்.

## திருக்கல்யாண பிரம்மோற்சவம்



திருக்குறுங்குடி ஸ்ரீ நம்பி பங்குனி திருக்கல்யாண பிரம்மோற்சவம் முதல் திருநாள் புறப்பாடு.

## திருவூரல் உத்ஸவம்



திருவள்ளூர் ஸ்ரீவைத்திய வீரராகவ பெருமாள் புட்லூர் திருவூரல் உத்ஸவம் 03.04.2026.

## வெண்ணந்தூர் ஒன்றியத்தில் அமைச்சர் மதிவேந்தன் தீவிர பிரச்சாரம்



**இராசிபுரம், ஏப்.04:** ராசிபுரம் (தனி) தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிடும் அமைச்சர் மதிவேந்தன், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் திறந்தவெளி ஜீப்பில் சென்று பொதுமக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதிக்கு திமுக வேட்பாளராக அமைச்சர் மதிவேந்தன் போட்டியிடுகிறார். நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்த அவர், அதனைத் தொடர்ந்து தேர்தல் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் திறந்தவெளி ஜீப்பில் சென்று பொதுமக்களிடம் நேரடியாக சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இந்த பிரச்சாரத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார், வெண்ணந்தூர் ஒன்றிய திமுக செயலாளர் ஆர். எம். துரைசாமி உள்ளிட்டோர் வேட்பாளர் மதிவேந்தனுடன் இணைந்து பொதுமக்களிடம் ஆதரவு கோரி தீவிரமாக வாக்கு சேகரித்தனர். பிரச்சாரத்தின் போது, பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் அமைச்சர் மதிவேந்தனை வரவேற்று ஆதரவு தெரிவித்தனர்.

## வாடிப்பட்டியில் 100,% வாக்களிக்க வலியுறுத்தி விழிபுணர்வு உறுதிமொழி கலை நிகழ்ச்சி




**வாடிப்பட்டி, ஏப்,.04:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு உறுதிமொழி மற்றும் கலை நிகழ்ச்சி வாடிப்பட்டி பஸ் நிலையத்தில் நடந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அதிகாரி சண்முக வடிவேல் தலைமை தாங்கி கலைநிகழ்ச்சியை தொடக்கி வைத்து இந்தியாவின் ஜனநாயக பாரம்பரியம் சுதந்திரமான நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் கண்ணியத்தையும் நிலை நிறுத்த குடிமக்களாகிய நாம் மதம் இனம் சாதி சமூகம் மொழி அல்லது பிற காரணங்களால் பாதிக்கப்படாமல் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றி வாக்களிப்போம் என்று உறுதியளிக்கிறோம் என்று உறுதிமொழி வாசித்தார். மேலும்85 வயதானவர்கள் மாற்று திறனாளிகள் வாக்களிக்க வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுகளில் சென்று வாக்குகள் சேகரிப பார்கள். எனவே வாக்காளர்கள் தங்கள் ஜனநாயக கடமையை ஆற்ற வேண்டும் இவ்வாறு அவர் பேசினார். இதில்உதவி தேர்தல் அதிகாரிகள் தாசில்தார் ராமச்சந்திரன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் பஞ்சாட்சரம், மண்டல துணை தாசில்தார் செந்தில்குமார், தேர்தல் துணை தாசில்தார் கருப்பையா, வருவாய் ஆய்வாளர் கௌதம் குமார், ராஜா, இளநிலை உதவியாளர் கென்னடி, கிராம நிர்வாக அலுவலர்கள் , ஜெயபிரகாஷ், கார்த்திக், உமாதேவி, அருள் ராணி, கிராம உதவியாளர்கள் ஜெயக்குமார், சண்முகம், கண்ணன், சுமதி, புஷ்பம் உள்பட அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் வாக்களிப்பது எங்கள் உரிமை வாக்களிப்பது எங்கள் கடமை எங்கள் வாக்கு விற்பனைக் கு அல்ல என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்திய படி நின்றனர். இதில் மதுரை கலைகுழுவைச் சேர்ந்தவர்கள் தாரை தப்பட்டை முழங்க வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு பாடல் பாடி நடனம் ஆடினர்.

இந்த கலை நிகழ்ச்சியை பஸ் பயணிகள் வியாபாரிகள் பொதுமக்கள் கண்டு களித்தனர்.

## வேட்பாளர் திரு.Dr.சுபேர்கான் அவர்களின் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம்



சட்டமன்ற தேர்தலையொட்டி ராயபுரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வெற்றி வேட்பாளர் திரு.Dr.சுபேர்கான் அவர்களின் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் நேற்று 02/04/2026 ராயபுரம் ரம்ஜான் மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாரூக் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் 100க்கும் மேற்பட்ட காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

## ஸ்ரீ கோமளவல்லி தாயார் ஸமேத ஸ்ரீ ஆராவமுதன்



திருக்குடந்தை ஸ்ரீ திவ்ய தம்பதிகள் ஸ்ரீ கோமளவல்லி தாயார் ஸமேத ஸ்ரீ ஆராவமுதன்.

## எடப்பாடி கே.பழனிசாமி பரப்புரை





திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மு.அமைச்சர் . கே.சி.வீரமணி அவர்களை ஆதரித்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி பரப்புரை ஆற்றினார்



திருப்பத்தூர், ஞானசேகரன்(அமமுக) வாணியம்பாடி, செந்தில் குமார் ஆம்பூர், வெங்கடேசன்,குடியாத்தம், பரிதா புருஷோத்தமன் அணைக்கட்டு வேலழகன் ஆகிய அஇஅதிமுக வேட்பாளர்களை ஆதரித்து ஆம்பூரில் மு.முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி ஆதரித்து பிரச்சாரம் செய்தார்

## மனித நேய மாண்பாளர் விருது



**மயிலாடுதுறை , ஏப் , 04:** மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியில் புதுயுகம் டிவியின் சவாலே சமாளி பேச்சரங்க நிகழ்ச்சி நடைப்பெற்றது. ஏஆர்சி ஆர்.வி.குருகோவிந்த் , சீமாட்டி நிர்வாக இயக்குநர் பௌசில் முகமது , அரிமா முன்னாள் மாவட்ட ஆளுநர் வீரபாண்டியன் தருமபுரம் கலைக் கல்லூரி செயலர் செல்வநாயகம் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியின் பட்டிமன்ற நடுவர் ஞானசம்பந்தன் சமூக சேவை செய்து வரும் மயிலாடுதுறை லயன் எம்.சி.கே.மஹாவீர் சந்த் ஜெயின் அவர்களுக்கு மனிதநேய மாண்பாளர் விருதை வழங்கி சிறப்பித்தார்.




## ஸ்ரீராம நவமி சிறப்பு பக்தி உபன்யாசம்...!



**வந்தவாசி, ஏப் 04:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி பஜனைக் கோவில் தெருவில் உள்ள ஸ்ரீகோதண்டராமர் திருக்கோயிலில் ஸ்ரீராமநவமி வைபவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஓய்வுபெற்ற மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் டாக்டர் எஸ். குமார் முன்னிலை வகித்தார். முதலாவதாக, புரிசை பி.கோவிந்தராஜ ராமானுஜதாசர் குழுவினர் பங்கேற்ற திவ்யப் பிரபந்த பாடல்கள் பாடப்பட்டது. பிறகு காஞ்சிபுரம் உ.வேஅக்காரக்கனி ஸ்ரீநிதி ஸ்வாமிகள் அவர்களால் 'சுந்தர காண்டம்' என்ற தலைப்பில் சிறப்பு உபன்யாசம் நடைபெற்றது. முன்னதாக மூல மூர்த்திகளுக்கு விசேஷ பூஜைகள் நடைபெற்றன. நிகழ்வை ஆர். சீனிவாச ராமானுஜதாசர் தொகுத்து வழங்கினார். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பாகவத கோஷ்டியினர் கலந்து கொண்டனர்.

## பங்குனி உத்திரம் முருகர் திருக்கல்யாணம் சிறப்பு வழிபாடு



திருவண்ணா மலை மாவட்டம் ஏப்ரல் 3 போளூர் வட்டம் ஆர். குண்ணத்தூர் ஊராட்சியில் மலை மீது அமர்ந்திருக்கும் ஸ்ரீதண்டபாணி சுவாமி மலைக்கோவிலில் பங்குனி உத்திரம் முன்னிட்டு குமாரசாமி குருக்கள் அவர்களால் உற்சவர் சிறப்பு அபிஷேகங்கள் வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள் முருகர் திருக்கல்யாண உற்சவம் வள்ளி,தெய்வானை, வேத மந்திரங்கள் ஒலிக்க, ஹோமங்கள், மாலை மாற்றும் வைபவம், மங்கள வாத்தியங்கள் இசைக்க, திருக்கல்யாண உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முருகர், வள்ளி, தெய்வானை திருக்கல்யாணம் உற்சவத்தில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## 2026 தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்களிப்பதின் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு



திருவண்ணாமலை ஏப்ரல் 04: திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட கல்நகர் பகுதியில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற உள்ளது முன்னிட்டு பொது மக்களிடம் 100% வாக்களிப்பதில் அவசியம் குறித்து திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு.க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் பொது மக்களுக்கு வாக்களிப்பது அவசியம் குறித்து அறிவுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: குற்றாலம் அருகே அமைந்துள்ள அழகிய சுற்றுலாத் தலங்கள்!



### பாபநாசம் அணை:

குற்றாலத்திலிருந்து 34 கிலோ மீட்டர் தொலைவில் பாபநாசம் அணை உள்ளது. இது திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு முக்கிய அணையாகும். 1942 ஆம் ஆண்டு முதன் முதலில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கட்டப்பட்ட அழகிய அணை இது. இந்த அணையிலிருந்து திருநெல்வேலிமற்றும்தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி ஆறு பாய்கிறது. இதன் மூலம் பாசன வசதி பெறுவதுடன் ஆண்டு முழுவதுக்குமான குடிநீர் தேவையையும் இந்த அணை தருகிறது.

### காரையாறு அணை:

நெல்லை மாவட்டத்தில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் அருகில் அமைந்துள்ளது இந்த காரையாறு அணை. அம்பாசமுத்திரம் அருகே மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள இந்த அணைக்கு ஏராளமான சுற்றுலாப்பயணிகள் படகு சவாரிகள் செய்வதற்காக இங்கு வருகின்றனர்.

### பாம்பு பூங்கா:

குற்றாலத்தில் ஐந்தருவிக்கு அருகில் அமைந்துள்ளது பாம்பு பூங்கா. இங்கு பல்வேறு வகையான பாம்புகள் காணப்படுகின்றன.

இதற்கு அருகில் சிறுவர் பூங்கா மற்றும் மீன் பண்ணைகளையும் பார்த்து ரசித்து விளையாடி மகிழ்வதற்காக நிறைய சுற்றுலாப்பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

### படகு குழாம்:

குற்றாலத்தில் ஐந்தருவிக்கு அருகே மேலவெண்ணமாடை குளம் செல்லும் வழியில் படகு குழாம் உள்ளது. இது பிரதான அருவிக்கும் ஐந்தருவிக்கும் இடையில் படகு சவாரியில் சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்வதற்கு ஏற்ற இடமாக அமைந்துள்ளது.

### சுற்றுச்சூழல் பூங்கா:

குற்றாலத்தில் உள்ள சுற்றுச்சூழல் பூங்கா என அழைக்கப்படும் குழந்தைகள் பூங்கா தமிழத்தில் உள்ள பூங்காக்களில் மிகப்பெரியது. சலசலக்கும் காற்று, இயற்கை ததும்பிய அழகு, சுற்றிலும் மலைகள் என இந்த இடத்தை கண்டுகளிக்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். குலுங்கும் பல வண்ண மலர்களும், விதவிதமான வண்ணத்துப்பூச்சிகளின் அழகும் அனைவரையும் ரசிக்கும்படி செய்கின்றன.

### மணிமுத்தாறு:

குற்றாலத்தில் இருந்து 51 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள அருவி இது. ஆண்டு முழுவதும் அருவியில் நீர் விழுகிறது. தொடர்ச்சியாக கொட்டிக்கொண்டே இருக்கும் மணிமுத்தாறு அருவி, பசுமையான பரப்பு, மலைகள், தேயிலைத்தோட்டம் மற்றும் அணைக்கட்டு ஆகியவற்றுடன் கூடிய இந்த இடத்தின் இயற்கை அழகு மணிமுத்தாறு அருவியை மிகவும் விரும்பப்படும் சுற்றுலா தலங்களில் ஒன்றாக ஆக்குகிறது.

### குண்டாறு அணை:

தென்காசி மாவட்டத்தில் குற்றாலத்துக்கு அருகில் மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் குண்டாறு அணை உள்ளது. இது ஒரு இயற்கை நீர் தேக்கமாகும். இயற்கை எழில் சூழ்ந்த இந்த இடம் சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக உள்ளது. குண்டாறு அணை தமிழ்நாடு மற்றும் கேரளாவை இணைக்கும் சாலையில் அமைந்திருப்பதால் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. இதன் அருகில் அதிக அளவில் தனியார் அருவிகளும் உள்ளன. அதற்கு செல்ல விரும்பினால் தனியார் ஜீப்புகளில் செல்லலாம்.

### அகஸ்தியர் அருவி:

குற்றாலத்தில் இருந்து 37 கிலோமீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள இந்த அருவி மக்களை அதிகம் கவர்கின்றது 25 அடி உயரத்தில் இருந்து கொட்டுகின்ற இந்த அறிவின் அழகை காண்பதற்காக ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வருகின்றனர். அருவிக்கு அருகில் அகஸ்தியருக்கு கோவில் ஒன்று உள்ளது. அருவியின் மேற்பகுதியில் கல்யாண தீர்த்தம் உள்ளது. அகஸ்தியருக்கு சிவன் காட்சி தந்த இடமாக நம்பப்படுகிறது.


### தோரணமலை முருகன் கோவில்

தென்காசி மாவட்டத்தில் கடையம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது இக்கோவில். 800 அடி உயரம் கொண்ட தோரணமலை உச்சியில் அருள்பாலிக்கும் முருகனை தரிசிக்க வேண்டுமானால் 1193 படிகள் ஏறவேண்டும்.

இவை தவிர குற்றாலம் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், புலி அருவி போன்ற நிறைய இடங்கள் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை அதிகம் ஈர்க்கின்ற இடங்களாகும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

# ரூ.66,000 சம்பளத்தில் ரைட்ஸ் நிறுவனத்தில் உதவியாளர் வேலை!




மத்திய ரயில்வே அமைச்சகத்தின் கீழ் இயங்கும் போக்குவரத்து, உள்கட்டமைப்பு மற்றும் அது சார்ந்த தொழில்நுட்பத் துறைகளில் ஒரு முதன்மையான, பல்துறை சார்ந்த ஆலோசனை மத்தியப் 'நவரத்னா' பொதுத்துறை நிறுவனமான ரைட்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் காலியாக உள்ள 15 உதவியாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் 25 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதி: ஏதாவதொரு துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத் தேர்வு, சான்றிதழ்கள் சரிபார்ப்பு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: பொது, ஓபிசி பிரிவினருக்கு ரூ.300. இடபுள்யுஎஸ், எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளி பிரிவினர்கள் ரூ.100 செலுத்த வேண்டும். கட்டணத்தை ஆன்லைனில் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: https://www.rites.com என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 27.4.2026

# தமிழ்நாடு முழுவதும் தேர்தல் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கை: தேர்தல் ஆணையம்

**சென்னை, ஏப்.4:**

தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலின் ஒரு பகுதியாக, வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு (ஸ்வீப்) திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாக்காளர்களின் விழிப்புணர்வை அதிகரிப்பது, தகவல் அறிந்த மற்றும் தார்மீக அடிப்படையிலான வாக்களிப்பை ஊக்குவிப்பது மற்றும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடையே முழுமையான தேர்தல் பங்கேற்பை உறுதி செய்வதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள், சட்டமன்ற தொகுதிகள் அளவில் இந்த முன்னெடுப்புகளைத் தீவிரமாக செயல்ப டுத்தி வருகின்றனர். மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்பு ணர்வு நடவடிக்கைகள் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகின்றன. ஸ்வீப் திட்டத்தின் கீழ் பெரிய அளவிலான 1,486 நிகழ்ச்சிகளும், 22,130 சிறிய அளவிலான நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான நிகழ்ச்சிகளாக, மாரத்தான் போட்டிகள், மனிதச் சங்கிலிகள், வாக்காளர் உறுதிமொழிப் பிரசாரங்கள் மற்றும் கல்லூரிகளில் உள்ள தேர்தல் எழுத்தறிவு சங்கங்களின் செயல்பாடுகள் ஆகியவை அடங்கும். ஒவ்வொரு மாவட்டமும் தனித்துவமான சின்னங்களை உருவாக்கி, அவற்றின் மூலம் வாக்காளர் விழிப்புணர்வு செய்திகளைத் திறம்பட பரப்பி வருகின்றன. அதில், வாக்களிப்பதன் முக்கியத்துவம், நேர்மையான வாக்களிப்பு ஆகியவை முக்கியப்படுத்தப்படுகின்றன. மேலும், முதல்முறை வாக்காளர்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், நலிந்த பிரிவினர் ஆகியோரை மையப்படுத்தி விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோவை: வெள்ளியங்கிரி மலை ஏறிய கல்லூரி மாணவர் உயிரிழப்பு

**கோவை, ஏப்.4:**

கோவை அருகே மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ள பூண்டியில் வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவில் உள்ளது. இந்த கோவிலை ஒட்டி உள்ள 7-வது மலையில் சிவபெருமான் சுயம்புலிங்கமாக காட்சியளிக்கிறார். இந்த மலை மீது செல்ல தற்போது அனுமதி அளிக்கப்பட்டு உள்ளதால் ஏராளமான பக்தர்கள் மலையேறி சென்று சாமி தரிசனம் செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் தர்மபுரி மாவட்டம் பீடம்னேரி பெருமாள் கோவில் வீதியை சேர்ந்தவர் முகேஷ்குமார் (23). இவர் கோவை பேரூர் அடுத்த தெலுங்குபாளையத்தில் தங்கியிருந்து, அங்குள்ள தனியார் கல்லூரியில் டி.பார்ம் 5-ம் ஆண்டு படித்து வந்தார். முகேஷ்குமார் தனது நண்பர்களுடன் பூண்டி வெள்ளியங்கிரி மலையேறி சென்று சுயம்புலிங்க சுவாமியை தரிசனம் செய்ய முடிவு செய்தார்.

இதற்காக நேற்றிரவு முகேஷ்குமார் தனது நண்பர்களான அபி, மகேந்திரன் மற்றும் நண்பர்கள் 8 பேருடன் தெலுங்குபாளையத்தில் இருந்து புறப்பட்டு பூண்டி வெள்ளியங்கிரிக்கு சென்றனர். பின்னர் முகேஷ்குமார் தனது நண்பர்களுடன், பூண்டி அடிவாரத்தில் உள்ள வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவிலில் தரிசனம் செய்து விட்டு, மலையேறினார்.

நேற்று அதிகாலை முகேஷ்குமார் மற்றும் நண்பர்கள் 5-வது மலையில் ஏறி கொண்டிருந்தனர். அப்போது முகேஷ்குமாருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு, அப்படியே மயங்கி சரிந்து கீழே விழுந்தார். இதை பார்த்ததும் அதிர்ச்சியான நண்பர்கள் விரைந்து கீழே சென்று வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் உடனடியாக அங்கு விரைந்து சென்று, மயக்கம் அடைந்த முகேஷ்குமாரை டோலி கட்டி தூக்கி மலையில் இருந்து கீழே கொண்டு வந்தனர்.

பின்னர் அவரை அங்கு தயாராக இருந்த ஆம்புலன்ஸ் ஊழியர்கள் பரிசோதித்து பார்த்தனர். அப்போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டது தெரியவந்தது. பின்னர் இதுகுறித்து போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பின்னர் முகேஷ்குமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக போலீசார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே உடல் தகுதியை உறுதி செய்த பின்னரே மலை ஏற வேண்டும் என்று வனத்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர். வெள்ளியங்கிரி மலையேறிய கல்லூரி மாணவர் உயிரிழந்த சம்பவம் பக்தர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# 5 ஆண்டுகளில் தினமும் 20 இந்தியர்கள் வெளிநாடுகளில் உயிரிழப்பு

**புதுடெல்லி, ஏப்.4:**



கடந்த 5 ஆண்டுகளில், தினமும் சராசரியாக 20-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் வெளிநாடுகளில் இறந்துந்துள்ளதாகவும், பெரும்பாலான உயிரிழப்பு வளைகுடா நாடுகளில் நிகழ்ந்துள்ளதாகவும் அரசின் புள்ளி விவரத்தில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான தரவுகளை வெளியுறவு இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் கடந்த ஜனவரி 29ம் தேதி மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமான பதிலில் அளித்துள்ளார். இதன்படி 2021 முதல் 2025 வரை வெளிநாடுகளில் உயிரிழந்த இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 37,740-ஐ எட்டியுள்ளது. இந்த உயிரிழப்புகளுக்கான காரணங்கள் வெளியிடப்படவில்லை.

2021ம் ஆண்டில்தான் அதிகபட்சமாக 8,234 இந்திய தொழிலாளர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர். 2022-ல் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 6,614-ஆக குறைந்த நிலையில், அதன் பிறகு ஆண்டுதோறும் உயிரிழப்புகள் சீராக அதிகரித்து, 2023-ல் 7,291 ஆகவும், 2024-ல் 7,747 ஆகவும், 2025-ல் 7,854 ஆகவும் உயர்ந்துள்ளன.

இந்த உயிரிழப்புகளில் 86 சதவீதத்திற்கும் அதிகமானவை வளைகுடா நாடுகளில்தான் நிகழ்ந்துள்ளன. கடந்த 5 ஆண்டுகளில், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் முறையே 12,380 மற்றும் 11,757 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

# சென்னையில் இயல்பு நிலைக்கு திரும்பிய புறநகர் மின்சார ரெயில் சேவை: பயணிகள் மகிழ்ச்சி



**சென்னை, ஏப். 4:**

சென்னையில் முக்கிய போக்குவரத்துகளில் ஒன்றாக இருப்பது மின்சார ரெயில் சேவை. மின்சார ரெயில்களில் தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் பயணித்து வருகின்றனர்.

இதன்படி சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் நடைமேடை 10 மற்றும் 11 வழியாக மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டு வந்தன. இந்த ரெயில் நிலை யத்தில் மறுசீரமைப்பு பணிகள் நடந்து வந்ததால், நடைமேடை 10, 11 வழியாக இயக்கப்பட்ட மின்சார ரெயில் சேவை, 5, 6-வது நடைமேடைக்கு மாற்றப்பட்டன. இதுதவிர ரெயில் சேவையும் கணிசமாக குறைக்கப்பட்டன. இதனால் பயணிகள் அவதிப்பட்டனர்.

மேலும் மறுசீரமைப்பு முடிந்ததும் வழக்கமான ரெயில் சேவை ஏப்ரல் 5-ந்தேதி தொடங்கும் என்று தென்னக ரெயில் அறிவித்து இருந்தது. இந்தநிலையில், பணிகள் முடிக்கப்பட்டநிலையில் (வெள்ளிக்கிழமை) முதல் மீண்டும் நடைமேடை 10,11 வழியாக மின்சார ரெயில் இயக்கப்பட்டுவருகிறது. அனைத்துப் பணிகளும் திட்டமிட்ட நேரத்திற்கு முன்னரே வெற்றிகரமாக முடிக்கப்பட்டதால், இந்த தடை முன்கூட்டியே ரத்து செய்யப்பட்டு, புறநகர் ரெயில் சேவைகள் மீண்டும் முழுமையாக செயல்பட தொடங்கி உள்ளன.இதனால் அதில் பயணம் செய்யும் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதனிடையே கடந்த பிப்ரவரி 20-ந்தேதிக்கு முன்பு நடைமுறையில் இருந்து வழக்கமான வார நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணை மீண்டும் அமலுக்கு வந்துள்ளது. அதன்படி, வார நாட்களில் சென்னை கடற்கரை தாம்பரம் செங்கல்பட்டு இடையே 106 ரெயில் சேவைகளும், மறுமார்க்கமாக, செங்கல்பட்டு தாம்பரம் - கடற்கரை இடையே 106 ரெயில் சேவைகளும் என இரு மார்க்கமாகவும் மொத்தம் 212 மின்சார ரெயில் சேவைகள் இயக்கப்படுகின்றன.

இதேபோல, ஞாயிற்றுக்கிழமை அட்டவணைபடி சென்னை கடற்கரை-தாம்பரம்-செங்கல்பட்டு இடையே 93 சேவைகளும், மறுமார்க்கமாக, செங்கல்பட்டு - தாம்பரம் - கடற்கரை இடையே 97 சேவைகளும் என மொத்தம் 190 ரெயில் சேவைகள் இயக்கப்படுகிறது. குறித்த காலத்திற்கு முன்பே பணிகளை முடித்து, கோடை காலத்தில் பயணிகளின் சிரமத்தைக் குறைத்த ரெயில்வே ஊழியர்களுக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# தமிழகம் முழுவதும் 23 ஆயிரம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த திட்டம்: தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, ஏப்.4: வாக்களிப்பதன் அவசியம் குறித்து தமிழகம் முழுவதும் 23,616 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளதாக, தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு (SVEEP) திட்டம் தமிழகம் முழுவதும் விரிவாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கம், வாக்காளர் விழிப்புணர்வை அதிகரிப்பது, தார்மீக அடிப்படையிலான வாக்களிப்பை ஊக்குவிப்பது மற்றும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடையே முழுமையான தேர்தல் பங்கேற்பை உறுதிசெய்வதாகும்.

மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் சட்டமன்ற தொகுதிகள் அளவில் இந்த முன்னெடுப்புகளைத் தீவிரமாக செயல்படுத்தி வருகின்றனர். மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகின்றன. பெரிய அளவில் 1,486, சிறிய அளவில் 22,130 நிகழ்ச்சிகள் என மொத்தம், 23,616 நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நேர்மையான வாக்களிப்பு: பெரிய அளவிலான நிகழ்ச்சிகளில் மாரத்தான் போட்டிகள், மனிதச் சங்கிலிகள், வாக்காளர் உறுதிமொழிப் பிரச்சாரங்கள் மற்றும் கல்லூரிகளில் உள்ள தேர்தல் எழுத்தறிவு சங்கங்களின் செயல்பாடுகள் ஆகியவை அடங்கும். கூடுதலாக, ஒவ்வொரு மாவட்டமும் அதன் கலாச்சார அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையில், தனித்துவமான சின்னங்களை உருவாக்கி, அவற்றின் மூலம் வாக்காளர் விழிப்புணர்வு செய்திகளைத் திறம்படப் பரப்பி வருகின்றன.



இந் நிகழ்ச்சிகளில், வாக்களிப்பதன் முக்கியத்துவம், நேர்மையான வாக்களிப்பு முறைகள், வாக்காளர் வசதிக்கான நடவடிக்கைகள், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் சிறப்பு முயற்சிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மேலும், அனைவரையும் உள்ளடக்கிய பங்கேற்பை உறுதி செய்யும் வகையில், முதல்முறை வாக்காளர்கள், மாற்றுத் திறனாளிகள், முதியோர்கள், இதர நலிந்த பிரிவினர்களை குறிவைத்து தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இம்முயற்சிகள், மாநிலத்தில் சுதந்திரமான, நியாயமான, அனைவரையும் உள்ளடக்கிய தேர்தலை நடத்துவதற்கான உறுதியை அளிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### போதை ஊசி மருந்து விற்பனை: பெண் உள்பட 2 பேர் கைது

தூத்துக்குடி, ஏப்.4:

தூத்துக்குடி போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு தனிப்படை போலீசார் நேற்று (வியாழக்கிழமை) தாளமுத்துநகர் மொட்டைகோபுரம் சாலைப் பகுதியில் தீவிர கண்காணிப்புப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக சந்தேகப்படும்படி வந்த ஒரு நபரை தடுத்து நிறுத்தி விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அவர் தாளமுத்துநகர் பகுதியைச் சேர்ந்த செய்யதுஇப்ராகிம் (வயது44) என்பது தெரியவந்தது. அவர் தன்னிடம் இருந்த வலி நிவாரணி மருந்துகளை போதைக்காக சட்டவிரோதமாக விற்பனை செய்ய கொண்டு சென்றது உறுதி செய்யப்பட்டது.

அவரிடம் நடத்திய மேல் விசாரணையில், தாளமுத்துநகரைச் சேர்ந்த ஜெயக்குமார் மனைவி பாண்டிசெல்வி(40) என்பவர் இந்த மருந்துகளை சட்டவிரோதமாக விநியோகம் செய்தது தெரியவந்தது. பாண்டிசெல்வி ஒரு மருந்து கடையில் விற்பனையாளராக பணியாற்றி வருவதும், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இத்தகைய சட்டவிரோத செயலில் ஈடுபட்டதும் அம்பலமானது.

இதனைத் தொடர்ந்து செய்யதுஇப்ராகிம் மற்றும் பாண்டிசெல்வி ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 76 போதை மருந்து குப்பிகள், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் செல்போன்கள் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இந்த வலி நிவாரணி மருந்துகள் கடல் வழியாக இலங்கைக்கு கடத்தப்பட இருந்ததா? அல்லது உள்ளூர் இளைஞர்களைக் குறிவைத்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டதா? என்பது குறித்து போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

### தூத்துக்குடியில் 3 பேரிடம் செல்போன் பறிப்பு: மர்ம கும்பலுக்கு போலீஸ் வலைவீச்சு

தூத்துக்குடி, ஏப்.4:

தூத்துக்குடி தாளமுத்துநகர் ஜே.சி. நகரைச் சேர்ந்த சுந்தர்ராஜ் (வயது 63) என்பவர் நேற்று இரவு சாலையில் நடந்து சென்றபோது, இருசக்கர வாகனத்தில் வந்த 3 பேர் கொண்ட கும்பல் அவரை மிரட்டி செல்போனை பறித்து சென்றது. அதே கும்பல், தாளமுத்துநகர் முதல் தெருவைச் சேர்ந்த ஜெரால்ட் அலெக்சாண்டர்(60) என்பவரிடமும் செல்போனைப் பறித்துக் கொண்டு தப்பியது.

மேலும் கிருஷ்ணராஜபுரம் ரோட்டில் நடந்து சென்ற மற்றொருநபரிடமும் அந்த கும்பல் கைவரிசை காட்டியுள்ளது. பறிக்கப்பட்ட 3 செல்போன்களின் மொத்த மதிப்பு ரூ.34 ஆயிரம் ஆகும். இந்த செல்போன் பறிப்பு சம்பவங்கள் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரின் பேரில், தாளமுத்துநகர் மற்றும் வடபாகம் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

ஒரே நாள் இரவில் அடுத்தடுத்து 3 இடங்களில் நடந்த இந்தத் தொடர் செல்போன் பறிப்புச் சம்பவங்கள் தூத்துக்குடி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளை வலைவீசி தேடி வருகின்றனர்.

### சென்னை: மாஞ்சா நூல் கழுத்தை அறுத்ததில் ஸ்கூட்டியில் சென்ற பெண் படுகாயம்

சென்னை, ஏப்.4:

சென்னை நெசப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் கிருத்திகா. இவர் வடபழனியில் உள்ள தனது மகளை ஸ்கூட்டியில் அழைத்து வந்துகொண்டிருந்தார். அப்போது வடபழனி 100 அடி சாலையில் அறுந்து வந்த மாஞ்சா நூல், எதிர்பாராத விதமாக அவரது கழுத்தை அறுத்தது. இதில் காயமடைந்த கிருத்திகா, உடனடியாக மீட்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மாஞ்சா நூலால் பெண் ஒருவர் காயமடைந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்தில், நல்வாய்ப்பாக அவருடன் வந்த மகள் காயமின்றி தப்பினார். மாஞ்சா நூல் பயன்படுத்தக் காவல்துறை தடை விதித்துள்ள நிலையிலும், இத்தகைய ஆபத்தான செயல்கள் தொடர்வது வாகன ஓட்டிகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### 4-வது சுற்றை டிரா செய்தார் பிரக்ஞானந்தா



பாஃபோஸ், ஏப்.4:

சைப்ரஸ் நாட்டில் உள்ள பாஃபோஸ் நகரில் கேண்டிடேட்ஸ் செஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் 4-வது சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர். பிரக்ஞானந்தா, ஜெர்மனியின் மத்தியாஸ் ப்ளூபாமுடன் மோதினார். இதில் கருப்பு காய்களுடன் விளையாடிய பிரக்ஞானந்தா 37-வது நகர்த்தலின் போது டிரா செய்தார்.

உஸ்பெகிஸ்தானின் ஜவோகிர் சிந்தாரோவ், அமெரிக்காவின் ஃபேபியானோ கருவானாவுடன் மோதினார். இதில் 36-வது நகர்த்தலின் போது ஜவோகிர் சிந்தாரோவ் வெற்றி பெற்றார். இன்னும் 10 சுற்றுகள் உள்ள நிலையில் ஜவோகிர் சிந்தாரோவ் 3.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஃபேபியானோ கருனா 2.5 புள்ளிகளுடன் 2-வது இடம் வகிக்கிறார். மத்தியாஸ் ப்ளூபாம், பிரக்ஞானந்தா, நெதர்லாந்தின் அனிஷ் கிரி ஆகியோர் தலா 2 புள்ளிகளுடன் முறையே 3 முதல் 5-வது இடத்தில் உள்ளனர். சீனாவின் வெய் யி 1.5 புள்ளிகளுடன் 6-வது இடத்திலும், அமெரிக்காவின் ஹிகாரு நகமுரா 1.5 புள்ளிகளுடன் 7-வது இடத்திலும், ரஷ்யாவின் ஆண்ட்ரே எசிபென்கோ ஒரு புள்ளியுடன் 8-வது இடத்திலும் உள்ளனர்.

### வீரர்கள் சிறப்பாக செயல்படுவார்கள்: சென்னை அணி கேப்டன் நம்பிக்கை

சென்னை, ஏப்.4:

10 அணிகள் இடையிலான 19-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த நிலையில், சென்னை சூப்பர் கிங்ஸ்கேப்டன் ருதுராஜ் கெய்க் வாட் நிருபர்களிடம் கூறுகையில்,

'ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் ஆடிய களம் சற்று கடினமாக இருந்தது. இதில்நாங்கள் முதலில் பேட்டிங் செய்து நல்ல ஸ்கோரை எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர்களின் புதிய பவுலர்கள் சீதோஷ்ண நிலையை கச்சிதமாக பயன்படுத்தி விக்கெட்டுகளை வீழ்த்தி நெருக்கடிக்குள்ளாக்கினர். நாங்கள் இது போன்ற ஆடுகளங்களில் விளையாடி பழக்க மில்லை. சூழலுக்கு தக்க படி தகவமைத்து கொண்டு விளையாடும் அனுபவம் எங்களிடம் குறைவாக இருக்கலாம். ஆனால் இது ஒரு புதிய அணி. எனவே அவர்கள் மெதுவாக கற்றுக்கொள் வார்கள். அதிக போட்டிகளில் விளையாடும் போது அவர்கள் இன்னும் சிறப்பாக செயல்படுவார் கள். சேப்பாக்கம் ஆடுகளத் தன்மை எப்படி இருக்கும் என்பதை உறுதியாக சொல்ல முடியாது. ஆனால் உள்ளூரில் 7 ஆட்டங்களில் விளையாட உள்ளோம். ஆடுகளம் எப்படி இருந்தாலும் முடிந்த அளவுக்கு அதற்கு ஏற்ற வாறு எங்களை மாற்றிக் கொண்டு விளையாட முயற்சிப்போம்' என்றார்.

## மக்களவைத் தொகுதிகளை 816 ஆக அதிகரிக்க முடிவு: 16-ம் தேதி சிறப்புக் கூட்டம்

புதுடெல்லி, ஏப்.4:

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-ம் பகுதி நேற்று நிறைவு பெற்றது. இந்த நிலையில், 3-ம் பகுதியும் நடைபெறும் என தெரிய வந்துள்ளது. மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை விரைவில் அமல்படுத்தும் வகையில், மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை 543-ல் இருந்து 816-ஆக உயர்த்துவதற்கான மசோதாக்களை நிறைவேற்றுவதற்காக, நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் மீண்டும் வருகிற 16-ந்தேதி கூட இருப்பதாக தகவல்கள் வெளியாகின. இது 3 நாட்கள் நடைபெறும் என தெரிகிறது.



இதனை நாடாளுமன்ற விவகாரங்கள் துறை மந்திரி கிரண் ரிஜிஜு உறுதி செய்தார். நாடாளுமன்ற கூட்டம் முடிந்து நேற்று அவர் வெளியே வரும்போது, "வருகிற 16-ந்தேதி காலை 11 மணிக்கு அவையை கூட்டுமாறு நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம். நாங்கள் முக்கிய மசோதாக்களுடன் வருகிறோம். இது கால நீட்டிப்பு என்பதால், கேள்வி நேரம் மற்றும் தனிநபர் மசோதாக்கள் போன்றவை நடைபெறாது

கடந்த 2023-ம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் படி மக்களவையில் 3-ல் ஒரு பகுதி இடங்கள் மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். புதிய மசோதாக்களின் படி மக்களவைத் தொகுதிகளின் இடங்கள் 816 ஆக அதிகரிக்கும். இதில் 273 இடங்கள் மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

முன்னதாக நாடாளுமன்ற மாநிலங்களவையில் இதுகுறித்த தகவலின் அடிப்படையில் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் ஜெயராம் ரமேஷ், 'அரசு நாடாளுமன்றத்தை கூட்ட உத்தேசித்துள்ள கூட்டத்தை 5 மாநில சட்டசபை தேர்தல் முடிவடைந்த பின்னரே நடத்த வேண்டும் என அனைத்து எதிர்க்கட்சியினரும் விரும்புவதாக' தெரிவித்தார். மாநிலங்களில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த போதிலும், அரசு இந்த மசோதாவை ஆதாயத்துக்காக முன்னெடுத்துச் செல்ல முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். எனவே, கூட்டத்தை வருகிற 29-ந்தேதிக்கு பிறகே நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். இருப்பினும், பெண்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உண்டு என்று கிரண் ரிஜிஜு பதில் அளித்தார். எனவே இந்த விஷயத்தில் நாம் அரசியல் செய்ய வேண்டாம் எனவும் கூறினார்.

## 3 நாள்கள் தொடர் விடுமுறை எதிரொலி: விமான கட்டணம் பல மடங்கு உயர்வு!

சென்னை, ஏப்.4:

புனித வெள்ளி, ஈஸ்டர் பண்டிகை, வார விடுமுறை என தொடர்ந்து மூன்று நாள்கள் விடுமுறை காரணமாக, லட்சக்கணக்கான மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதன் எதிரொலியாக உள்நாட்டு விமானங்களுக்கான விமான கட்டணங்கள், சர்வதேச விமான கட்டணங்கள் அளவுக்கு உயர்ந்ததால் பயணிகள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

சனி, ஞாயிறு தொடர் விடுமுறை ஒருபுறமிருக்க புனித வெள்ளி, ஈஸ்டர் பண்டிகை என தொடர்ந்து மூன்று நாள்கள் விடுமுறை என்பதால் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் பெரும்பாலானோர் மூன்று நாள்கள் தொடர் விடுமுறையை கழிப்பதற்காக சொந்த ஊர்களுக்கு செல்வது



வழக்கம். இதையடுத்து சென்னை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் வெளியூர்வாசிகள், குறிப்பாக தென் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், வியாழக்கிழமை மாலை முதல் தங்கள் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டனர்.

பேருந்துகள், ரயில்களில் இருக்கைகள் அனைத்தும் நிரம்பிவிட்டதால், ஏராளமானோர் வியாழக்கிழமை விமானம் மூலம் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்கு விமானங்களில் டிக்கெட்டுகள் முன்பதிவு செய்ய தொடங்கினர். இதனால் சென்னை உள்நாட்டு விமான நிலையத்தில் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்பட்டது.

அதிகயளவிலான பயணிகள் விமான டிக்கெட்டுகள் முன்பதிவு செய்ததால், சென்னையில் இருந்து கோவைக்கு வரும் விமானங்கள் வியாழக்கிழமை விமான கட்டணங்கள் பல மடங்காக உயர்ந்திருந்தன.

இந்த நிலையில், சென்னை - கோவை இடையே ரூ. 4,966 ஆக இருந்த கட்டணம் ரூ. 16,496 ஆக உயர்ந்து உள்ளது.

## வணிகச் செய்திகள்

### விமானங்களில் விரும்பும் இருக்கைக்கான கட்டணத்தில் 60% இலவசம் உத்தரவை திரும்பப் பெற்றது மத்திய அரசு

புதுடெல்லி, ஏப்.4:

விமானங்களில் விரும்பும் இருக்கையைப் பெற இனி மீண்டும் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும். முன்னதாக அறிவித்த 60 சதவிகித இலவச இருக்கைகள் குறித்த உத்தரவை மத்திய அரசு திரும்பப் பெற்றுள்ளது.

விமானப் பயணங்களுக்கான பயணச்சீட்டுகள் பெற்ற பின் அதற்கான விருப்பமான இருக்கை தேர்வுகளுக்காக கூடுதல் கட்டணம் வசூலிக்கின்றன. இந்தக் கட்டணம் ரூ.200 முதல் ரூ2,100 வரை என வசூலிக்கப்படுகிறது.

முன்புற இருக்கைகள் மற்றும் கால்களை நீட்டி அமர்வதற்கான கூடுதல் இட வசதி போன்ற வசதிகளுக்காகவே இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த விவகாரத்தில் மத்திய அரசு இட்ட 60% இலவச இருக்கைகள் உத்தரவை தற்போது திரும்பப் பெற்றுள்ளது.


விமானப் போக்குவரத்து ஒழுங்கு முறை அமைப்பான டிஜிசிஏ-வால் வெளியான இந்த உத்தரவு ஏப்ரல் 20-ம் தேதி முதல் அமலுக்கு வரவிருந்தது. மத்திய அரசின் இந்த உத்தரவுக்கு விமான நிறுவனங்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வந்தன.

இந்நிலையில், தனது அறிவிப்பை டிஜிசிஏ திரும்பப் பெற்றுக் கொண்டது. எனவே, விமானங்களில் விருப்ப இருக்கைகளுக்கான பழைய விதிமுறை தொடரும் நிலை ஏற்பட்டுள்ளது.

## ராஜா ரவிவர்மாவின் ஓவியம் ரூ.167 கோடிக்கு ஏலம்

மும்பை, ஏப்.4:

புகழ்பெற்ற இந்திய ஓவியர் ராஜாரவிவர்மாவின் ஓவியமான 'யசோதா மற்றும் குழந்தை கிருஷ்ணா' ஓவியம் மும்பையில் உள்ள நிறுவனத்தின் ஏலத்தில் ரூ.167.20 கோடிக்கு விற்பனையாகி இந்திய கலை படைப்புகளில் அதிக மதிப்புள்ள படைப்பாக சாதனை படைத்துள்ளது. இந்த ஓவியம், யசோதா ஒரு பசுவிடம் பால் கறக்க, குழந்தை கிருஷ்ணர் பின்னால் இருந்து ஒரு பால் கோப்பையை எடுக்க முயல்வதை சித்தரிக்கிறது.



கடந்த ஆண்டு ஏலத்தில் எம்.எப்.ஹுசைனின் 'கிராம யாத்திரை' என்ற ஓவியம் ரூ.118 கோடிக்கும் மேல் விலைபோன சாதனையை இந்த ஓவியம் முறியடித்துள்ளது. ராஜா ரவிவர்மாவின் இந்த ஓவியத்தை, கொரோனா பாதிப்பின்போது 'கோவிஷீல்டு' தடுப்பூசி கொண்டு வந்த சீரம் நிறுவனத்தின் இந்தியாவின் நிர்வாக இயக்குனர் பூனாவாலா வாங்கினார். புகழ்பெற்ற ராஜா ரவிவர்மாவின் யசோதை மற்றும் கிருஷ்ணன் ஓவியத்தை பாதுகாத்து, பராமரிக்கும் வாய்ப்பு கிடைத்ததை நான் ஒரு பாக்கியமாக கருதுகிறேன்' என பூனாவாலா கூறினார்.

இதுகுறித்து ஏல நிறுவன தலைவர் மினல் வஜிராணி கூறியதாவது: ஓவியர் ராஜா ரவிவர்மாவின் கலைப்பயணம் உச்சத்தில் இருந்த 1890-களில் வரையப்பட்ட இந்த படைப்பு, குழந்தை வடிவ கிருஷ்ண பகவானையும், அவரது வளர்ப்பு தாயான யசோதாவையும் மையமாக கொண்டு, தாய்மையின் அன்பை மிக நுணுக்கமான முறையில் சித்தரிக்கிறது. இக்காட்சி பார்வையாளர்களை தன்வயப்படுத்தி, ஒரு சாதாரண இல்லற தருணத்தை, ஒரு பரந்த மற்றும் புனிதமான புராண நிகழ்வில் பங்கேற்பது போன்ற ஓர் அனுபவமாக உருமாற்றுகிறது.

சிறந்த கலைப்படைப்புகள், தங்கள் காலத்தால் அழியாத மதிப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் தனித்துவமான இயல்பைக் கொண்டுள்ளன. ரூ.80 முதல் ரூ.120 கோடி வரை ஏலம் போகும் என எதிர்பார்த்த நிலையில் ரூ.167 கோடியை தாண்டி இந்த ஓவியம் ஏலம் போனது.

# மற்றொரு செயற்கை மழைக்கு தயாராகும் டில்லி: கடந்த கால முயற்சிகளை ஆய்வு செய்யும் ஐஐடி கான்பூர்

புதுடெல்லி, ஏப்.4:

இந்த கோடையில் டில்லி மற்றொரு செயற்கை மழைக்காக மேக விதைப்பு சோதனையை சந்திக்கக்கூடும் என்று அதிகாரி ஒருவர் வியாழக்கிழமை தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

கடந்த ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் தேசிய தலைநகரில் இரண்டு சுற்று மேக விதைப்பு சோதனைகள் நடத்தப்பட்டன. டில்லி சுற்றுச்சூழல் துறைக்கும் கான்பூர் இந்திய தொழில்நுட்பக் கழகத்திற்கும் (ஐஐடி) இடையே கடந்த ஆண்டு செப்டம்பர் 25 அன்று கையொப்பமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்த சோதனைகள் நடைபெற்றது. இருப்பினும், இந்த சோதனை நகரத்தில் எந்த மழையையும் ஏற்படுத்தவில்லை.

ஐஐடி கான்பூர், ஒரு அறிக்கையில், மேகங்களில் குறைந்த ஈரப்பதம் காரணமாக தோல்வியடைந்தது. எவ்வாறாயினும், சோதனைகளின் அவதானிப்புகள் எதிர்கால நடவடிக்கைகளுக்கான திட்டத்தை வலுப்படுத்தும். சிறந்த நிலைமைகளை அடையாளம் காண உதவும். மேக விதைப்பு என்பது வானிலை மாற்ற நுட்பமாகும். இது மேகத்தின் மழைப்பொழிவை உருவாக்கும் திறனை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.

சில்வர் அயோடைடு மற்றும் பிற சோமங்கள் போன்ற பொருள்களை மேகங்களாக சிதறடித்து மாற்றங்களைத் தூண்டுவது, பனி படிகங்கள் அல்லது மழைத்துளிகள் உருவாவதை ஊக்குவிப்பது இதில் அடங்கும்.

கடந்த ஆண்டு சோதனையின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு முறையும், சில்வர் அயோடைடு மற்றும் சோடியம் குளோரைடு கொண்ட எட்டு ரசாயன எரிப்புகள் வெளியிடப்பட்டன.

இந்தப் பரிசோதனையை அடுத்து, டில்லி அரசு ஒரு அறிக்கையை வெளியிட்டது. இந்த சோதனைகள் இலக்குவைக்கப்பட்ட இடங்களில் துகள்களைக் குறைக்க உதவியது என்று கூறியது.

## மதுரை விமான நிலையத்தில் இமிகிரேஷன் சோதனை மேற்கொள்ளப்படும் - மத்திய மந்திரி

புதுடெல்லி, ஏப்.4:

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது விருதுநகர் எம்.பி. மாணிக்கம் தாகூர், மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறி வித்ததற்கு நன்றி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் பேசுகையில், "மதுரைக்கு அதிகளவில் வெளிநாட்டு விமானங்கள் வந்து செல்வதை உறுதிப்படுத்த, வெளிநாட்டு விமான போக்குவரத்திற்கான இருதரப்பு சேவைகள் ஒப்பந்தத்தின் கீழ், மதுரை சர்வதேச விமான நிலையத்தையும், ஒரு முக்கிய முனையமாக சேர்க்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமா? அவ்வாறு செய்தால், தமிழகத்தின் தென் பகுதிகளில் சுற்றுலா, ரெயில் மற்றும் பொருளாதாரம் வளர்ச்சி பெறும்" என்று கூறினார்.

அதற்கு சிவில் விமான போக்குவரத்து மந்திரி ராம் மோகன் நாயுடு பதில் அளித்தார். அவர் கூறுகையில், "தமிழ்நாட்டின் மீது கொண்டுள்ள அக்கறை காரணமாகவே மதுரை சர்வதேச விமான நிலையம் அமைவற்கு ஒப்புதல் அளிக்க முடிந்தது. இதன்மூலமாக மதுரை மக்களின் நீண்டகால விருப்பத்தை நிறைவேற்றி உள்ளோம். மதுரையை ஒரு சர்வதேச விமான நிலையமாக மாற்றியதால் ஒருவர் அனைத்து இமிகிரேஷன் (குடிவரவு) சோதனைகளையும் மதுரையிலேயே முடித்துவிட்டு விமானத்தில் ஏறலாம். விமான நிலையத்துக்கு உள்ளேயே பயணத்தை இடைநிறுத்தி, சர்வதேச இணைப்புக்கும் உள்நாட்டு நகரங்களுக்கும் செல்லலாம். இது மதுரை மக்களுக்கு வழங்கும் மற்றொரு வசதி ஆகும்" என்று ராம் மோகன் நாயுடு கூறினார்.

## ஆந்திரத்தின் தலைநகராக அமராவதி: இரு அவைகளிலும் மசோதா நிறைவேற்றம்!

திருப்பதி, ஏப்.4:

ஆந்திர பிரதேச மாநிலத்தின் நிரந்தர தலைநகரமாக அமராவதியை அங்கீகரிக்கும் மசோதா, மாநிலங்களவையில் இன்று (ஏப். 2) ஒப்புதல் அளிக்கப்பட்டது. முன்னதாக, புதன்கிழமையில் மக்களவை யிலும் இம்மசோதா நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இம்மசோதா குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அவரின் ஒப்புதல் கிடைத்ததும், 2026 ஜூன் 2 முதல் ஆந்திர தலைநகர் அமராவதி என்று சட்ட ரீதியாக அங்கீகாரம் கிடைத்துவிடும்.

பின்னணி: ஒருங்கி ணைந்த ஆந்திரம் 2 மாநிலங்களாக ஆந்திரம், தெலங்கானா எனப் பிரிக்கப்பட்டபோது, முந்தைய ஆந்திர மாநில தலைநகராக விளங்கிய ஹைதராபாத் நகரம், தெலங்கானா மாநிலத் தலைநகராக்கப்பட்டது.

அதேநேரத்தில் ஆந்திரத்துக்கு அமராவதி தலைநகராக இருக்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், 2019-ல் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சி அமைந்ததும், ஒரே தலைநகரம் அமைப்பதற்குப் பதிலாக 3 தலைநகரங்கள் இருக்கும் என அப்போதைய முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி அறிவித்தார்.

இந்த நிலையில், மீண்டும் 2024 தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி வென்று ஆட்சியமைத்ததும் அமராவதி மீண்டும் தலைநகராக்கப்பட்டது. இதுதொடர்பான மசோதா, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தற்போது ஒப்புதலும் பெற்றுள்ளது. தலைநகராக அமராவதி ஒப்புதலைப் பெற்றதைத் தொடர்ந்து, ஆளுங்கட்சியான தெலுங்கு தேச கட்சியினர் கேக் வெட்டிக் கொண்டாடி வருகின்றனர்.

# 5 மாநிலங்களிலும் தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க உத்தரவு!

புதுடெல்லி, ஏப்.4:

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களிலும் தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.



தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்களில் இம்மாத இறுதிக்குள் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, நடத்தப்படவுள்ளது.

இந்த நிலையில், வாக்காளர்கள், தங்கள் ஜனநாயக உரிமையை எந்தவிதத் தடையுமில்லாமல் பயன்படுத்துவதை உறுதி செய்யும்வகையிலும், எந்த அச்சமும் இல்லாமல் வாக்களிப்பதையும் நினைவில்கொண்டு, சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களிலும் தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்குமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, கேரளம், புதுச்சேரி, அஸ்ஸாம் ஆகிய 3 மாநிலங்களிலும் ஏப்ரல் 23 ஆம் தேதியிலும், தமிழகத்தில் ஏப்ரல் 23 ஆம் தேதியிலும், மேற்கு வங்கத்துக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய இரு தேதிகளிலும் தனியார் நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இதனை மீறும் நிறுவனங்கள் மீது தொழிலாளர் நலத்துறை மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# கடந்த மார்ச்சில் யுபிஐ பரிவர்த்தனை 24 சதவீத வளர்ச்சி: புதிய உச்சம்

புதுடெல்லி, ஏப்.4:

இந்தியாவின் எண்ம பணப்பரிவர்த்தனை தளமான யுபிஐ, கடந்த மார்ச் மாதத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் புதிய உச்சத்தை எட்டியுள்ளது.




ஹோலி, ரமலான் போன்ற பண்டிகைகள் மற்றும் நிதியாண்டு இறுதி கணக்கு முடிப்புகள் காரணமாக, மார்ச்சில் மட்டும் ரூ.29.53 லட்சம் கோடி மதிப்பிலான பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளதாக இந்திய தேசிய பரிவர்த்தனை கழகம் (என்பிசிஐ) தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீத வளர்ச்சியாகும். அதேபோல், பிப்ரவரியுடன் ஒப்பிடுகையில் பரிவர்த்தனை மதிப்பு 10 சதவீதம் உயர்ந்துள்ளது.

பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையிலும் யுபிஐ இமாலய சாதனை படைத்துள்ளது. கடந்த பிப்ரவரியில் 2,039 கோடியாக இருந்த பரிவர்த்தனை எண்ணிக்கை, மார்ச்சில் 2,264 கோடியாக அதிகரித்து, 24 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

மார்ச் மாதத்தின் சராசரி தினசரி பரிவர்த்தனை அளவு 73 கோடியாகவும், அதன் சராசரி மதிப்பு ரூ.95,243 கோடியாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்தியாவின் மொத்த எண்ம பரிவர்த்தனைகளில் யுபிஐ மட்டுமே 85 சதவீதம் பங்களிப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## டேட்டிங் செயலிகள் பயன்படுத்தும் 40 லட்சம் பேர்! திருமணம் மீறிய உறவுகளும் அதிகரிப்பு

புதுடெல்லி, ஏப்.4:

இந்தியாவில் திருமணம் மீறிய உறவுகள் கணிசமாக அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில், டேட்டிங் செயலிகளின் பயன்பாடு அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது. அதிலும் திருமணம் மீறிய உறவுகள் கணிசமாக அதிகரித்துள்ளதாக ஆய்வு கூறுகிறது.

சமீபத்திய ஆய்வுகளின்படி, டேட்டிங் செயலிகளை சுமார் 40 லட்சம் பேர் பயன்படுத்துவதாகக் கூறுகிறது. அவர்களில் 65 சதவிகிதம் ஆண்களும், 35 சதவிகிதம் பெண்களும் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் திருமணமானவர்களே. மேலும், பெண்களின் பங்களிப்பு, கடந்த 2 ஆண்டுகளில் கணிசமாக 148 சதவிகிதம் அதிகரித்துள்ளது. சராசரியாக டேட்டிங் செயலிகளில் ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் முதல் 1.5 மணிநேரம் வரையில் பயனர்கள் அரட்டையடிக்கின்றனர். குறிப்பாக, மதியம் 12 மணிமுதல் 3 மணிவரையிலும், இரவு 10 மணிமுதல் நள்ளிரவு வரையிலும் செயலியின் பயன்பாடு உச்சத்தை அடைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஆண்கள் - 25 முதல் 30 வயதுடைய பெண்களை நாட முயல்வதாகவும், பெண்கள் - 30 முதல் 40 வயதுக்குள்பட்ட ஆண்களை (குறிப்பாக மருத்துவர்கள், பட்டயக் கணக்காளர்கள் போன்ற பொருளாதார ரீதியாக தொழில் வல்லுநர்கள்) விரும்புகிறார்கள்.

## வெளிநாடுகளுக்கு ரூ.38,424 கோடிக்கு இந்திய ஆயுதங்கள் ஏற்றுமதி: முன்னெப்போதும் இல்லாத உச்சம்



புதுடெல்லி, ஏப்.4:

2025-26-ஆம் நிதியாண்டில் இந்தியா இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.38,424 கோடிக்கு பாதுகாப்புத் துறை சார்ந்த ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சாதனை படைத்துள்ளது.

அமெரிக்கா, ரஷியா போன்ற வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை முன்பு இந்தியா இறக்குமதி செய்து வந்தது. அந்த நிலை அண்மைக்காலமாக மாறி வருகிறது. இந்தியா சொந்தமாக உள்நாட்டிலேயே ஆயுதங்களைத் தயாரித்து, அதை நட்பு நாடுகளுக்கும், வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்து வருகிறது. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவுகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இந்தியா கடந்த 2023-24-ஆம் நிதியாண்டில் ரூ.21,083 கோடிக்கு வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்தது. பின்னர் கடந்த 2024-25-ஆம் நிதியாண்டில் ரூ.23,622 கோடிக்கு வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்திருந்தது.

2025-26-ஆம் நிதியாண்டில் ரூ.38,424 கோடிக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளது. இது முந்தைய நிதியாண்டில் செய்யப்பட்ட ஆயுத ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் ரூ.14,802 கோடி அதிகமாகும். அதாவது, நமது ஆயுத ஏற்றுமதி முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 62 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளது.

இது இதுவரை இல்லாத அளவுக்கு அதிக ஏற்றுமதியாகும். இந்திய ஆயுத ஏற்றுமதியில் பொதுத் துறை நிறுவனங்கள் 54.84 சதவீதமும், தனியார் நிறுவனங்கள் 45.16 சதவீதமும் பங்களிப்பு அளித்துள்ளன. இந்திய ஆயுத ஏற்றுமதி மிகப்பெரிய அளவில் அதிகரித்திருப்பதற்கு, இந்தியா சொந்தமாகத் தயாரிக்கும் பாதுகாப்புத் தளவாடங்கள் மீதும், நவீன ஆயுத தயாரிப்பு வலிமையின் மீதும் வெளிநாடுகள் வைத்துள்ள நம்பிக்கை அதிகரித்திருப்பதையே காட்டுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

## செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் டயாலிசிஸ் சிகிச்சை கண்காணிக்கப்படும்

புதுடெல்லி, ஏப்.4:




செயற்கைநுண்ணறிவு தொழில்நுட்பத்தில் டயாலிசிஸ் சிகிச்சை கண்காணிக்கப்படும் என சுகாதாரத் துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ் தெரிவித்தார்.

பெங்களூரில் உள்ள கே.சி. அரசு மருத்துவமனையில் வியாழக்கிழமை நடைபெற்ற விழாவில், டயாலிசிஸ் சிகிச்சையை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் கண்காணிக்கும் முறை திட்டத்தை தொடங்கிவைத்து அவர் பேசியது:

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு தனியார் நிறுவனத்தில் வழங்கப்படுவது போன்ற தரமான சிகிச்சையை வழங்குவதற்காக அரசு மற்றும் தனியார் கூட்டுமுயற்சியில் சிகிச்சை மையங்கள் இயங்கி வருகின்றன.

இந்த சிகிச்சை மையங்களில் டயாலிசிஸ் சிகிச்சையை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வழியாக கண்காணிக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் தரமான சிகிச்சை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பக் கண்காணிப்பு முறை, பெங்களூரில் உள்ள 7 டயாலிசிஸ் சிகிச்சை மையங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக மேலும் பல புதிய சிகிச்சை மையங்களுக்கு இத்தொழில்நுட்பம் விரிவுபடுத்தப்படும் என்றார்.

# கடந்த ஆண்டில் இந்தியர்களின் சராசரி கைப்பேசி இணைய பயன்பாடு 31 ஜிபி!: ஆய்வில் தகவல்

புதுடெல்லி, ஏப்.4:

கடந்த 2025-ஆம் ஆண்டில், ஒரு பயனர் மாதத்துக்கு சராசரியாக 31 ஜிபி இணைய தரவு பயன்படுத்தியுள்ளது நோக்கியா நிறுவனத்தின் ஆய்வறிக்கையில் தெரிய வந்துள்ளது. இது முந்தைய 2024-இல் இருந்த 27.5 ஜிபி என்ற அளவைவிட 18 சதவீத வளர்ச்சியாகும்.



5ஜி தொழில்நுட்பத்தின் ஆதிக்கம்: இந்தியாவின் ஒட்டுமொத்த கைப்பேசி இணைய போக்குவரத்தில் 5ஜி சேவையின் பங்களிப்பு 47 சதவீதமாக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் 5ஜி இணைய பயன்பாடு ஓராண்டில் 70 சதவீதம் அதிகரித்து, 12.9 எக்சாபைட் என்ற அளவை எட்டியுள்ளது. அதிவேக இணையம், ஏ.ஐ. செயலிகளின் பயன்பாடு, '4கே' தரத்திலான விடியோக்கள், ஆன்லைன் கேமிங் ஆகியவற்றின் மீதான ஆர்வம் இந்தப் பெருக்கத்துக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

உலக அளவில் 2-ஆம் இடம்: இந்த வளர்ச்சியின்மூலம், உலகின் 2-ஆவது மிகப்பெரிய 5ஜி வாடிக்கையாளர் தளத்தைக் கொண்ட நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

அதேபோல், 5ஜி தரவு நுகர்வு மற்றும் 5ஜி 'ஃபிக்சட் வயர்லெஸ் அக்சஸ் (எஃப்.டபிள்யூ.எஸ்.)' பயன்பாட்டிலும் இந்தியா உலக அளவில் 2-ஆம் இடத்தில் உள்ளது. 5ஜி பயன்பாட்டில் எஃப்.டபிள்யூ. எஸ். மட்டும் 25 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது.

மலிவு விலை போன்களின் வருகை: சந்தையில் 100 டாலருக்கும் குறைவான விலையில் (சுமார் ரூ.9,400) கிடைக்கும் 5ஜி பட்ஜெட் ரக ஸ்மார்ட்போன்களின் வருகை 10 மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் விற்பனையான ஸ்மார்ட்போன்களில் 90 சதவீதத்துக்கும் அதிகமானவை 5ஜி தொழில்நுட்பத்தைக் கொண்டிருந்தன. தற்போது இந்தியாவில் உள்ள சுமார் 89 கோடி 4ஜி சாதனங்களில், 38 கோடிக்கும் அதிகமானவை 5ஜி வசதி கொண்டவை என ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

பெருநகரங்களில் மட்டும் மொத்த இணைய பயன்பாட்டில் 58 சதவீதம் 5ஜி மூலமாகவே கிடைக்கிறது.

வரும் 2031-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் 5ஜி சந்தாதாரர்களின் எண்ணிக்கை 100 கோடியைக் கடக்கும் என நோக்கியா கணித்துள்ளது.

## ஈரான் மீது அமெரிக்கா கடும் தாக்குதல்! சீனா எதிர்ப்பு



**பீஜிங், ஏப்.4:**

மத்திய கிழக்கில் ராணுவ நடவடிக்கைகளில் உறுப்பு நாடுகளை ஈடுபடுத்தப்படுவதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து, பிப்ரவரி 28 ஆம் தேதியில் தாக்குதல் நடத்தினர். பதிலடியாக ஈரானும் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், மத்திய கிழக்கில் தொடர் பதற்றம் நிலவி வருகிறது.

இதனிடையே, ஈரான் மீதான தாக்குதலுக்கு மற்றைய நாடுகளுக்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அழைப்பு விடுத்தார். இந்த நிலையில், மத்திய கிழக்கில் நிலவிவரும் பதற்றம் குறித்து ஐக்கிய நாடுகள் அவையில் சீனாவின் பிரதிநிதி ஃபு காங் பேசுகையில், "மத்திய கிழக்கில் ராணுவ நடவடிக்கைகளில் உறுப்பு நாடுகளை அனுமதிப்பது என்பது சட்டவிரோதமான மற்றும் கண்மூடித்தனமான படைகளின் பயன்பாட்டைச் சட்டப்பூர்வமாக்குவதற்குச் சமம்.

ராணுவ நடவடிக்கைகளின் அடிப்படையில் எந்தவொரு பிரச்னையையும் தீர்க்க முடியாது. மேலும், மோதலைத் தீவிரப்படுத்துவது எந்தத் தரப்பினரின் நலனுக்கும் பாதிப்பைத்தான் விளைவிக்கும்" என்று தெரிவித்தார்.

அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களில் ஈரானை மிகக் கடுமையாகத் தாக்கப் போகிறோம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் கருத்துகளுக்கு மத்தியில், சீனா தனது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மேற்காசிய மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் உடனடி தீர்வு காண வேண்டும்: ஐ.நா. அழைப்பு

**நியூயார்க், ஏப்.4:**

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த பிப். 28-ம் தேதி ஈரான் மீது தாக்குதலைத் தொடுத்தன. இதில், அந்த நாட்டின் உச்சத் தலைவர் அலி கமேனி உள்பட உயர்மட்டத் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டனர். இதையடுத்து, பதிலடி கொடுக்கத் தொடங்கிய ஈரான், இஸ்ரேலுக்கு எதிராகவும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்தும் தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்துக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இதனால், போரில் ஈடுபடாத பல்வேறு நாடுகளும் எரிபொருள் தட்டுப்பாடு, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளை சந்தித்து வருகின்றன. இந்நிலையில், போரை முடிவுக்குக் கொண்டு வர உரையாடலை தேர்ந்தெடுக்குமாறு அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் தலைவர்களுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "எனது செய்தி தெளிவானது. மனிதர்களுக்கு அளவற்ற துன்பத்தை விளைவித்து, பொருளாதார பேரழிவுக்கான விளைவுகளைத் தூண்டும் இந்த போரை அமெரிக்காவும் இஸ்ரேலும் நிறுத்த வேண்டும். போரை நிறுத்த இதுவே சரியான தருணம். அதேபோல், ஈரான் தனது அண்டை நாடுகளை தாக்குவதை நிறுத்த வேண்டும்.

தலைவர்கள் அழிவை விடுத்து, உரையாடலைத் தேர்ந்தெடுக்கும்போது மோதல்கள் முடிவுக்கு வரும். அதை தேர்வு செய்வதற்கான தருணம் இன்னமும் இருக்கிறது. அதை இப்போதே செய்ய வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள வீடியோவில், "மத்திய கிழக்கில் போர் தொடரும் ஒவ்வொரு நாளும் மனிதத் துன்பமும் பேரழிவும் பெருகுகின்றன, கண்மூடித்தனமான தாக்குதல்கள் பெருகுகின்றன, நமது உலகுக்கான ஆபத்துக்களும் பெருகுகின்றன. இந்த மோதலின் தாக்கம் எல்லா இடங்களிலும் உணரப்படுகிறது. நாம் அமைதிக்கான வழியைக் கண்டறிய வேண்டும். மரணம் மற்றும் அழிவின் இந்த சூழல் இப்போதே நிறுத்தப்பட வேண்டும். ராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, சர்ச்சைகள் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும். அனைத்து உறுப்பு நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு மதிக்கப்பட வேண்டும். உலகம் ஒரு பரந்த போரின் விளிம்பில் உள்ளது. அது மேற்காசியா முழுவதையும் சூழ்ந்து கொண்டு உலகெங்கிலும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது" என தெரிவித்துள்ளார்.

# சூடானில் மருத்துவமனை மீது துணை ராணுவப் படை தாக்குதல்! 10 பேர் பலி!

**சூடான், ஏப்.4:**

சூடானில் மருத்துவமனை மீதான துணை ராணுவப் படையின் ட்ரோன் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

சூடானின் ஒயிட் நைல் மாகாணத்தில் உள்ள அல்-ஜபாலைன் மருத்துவமனையின் மீது வியாழக்கிழமை (ஏப். 2) அன்று ஆர்.எஸ்.எஃப். எனும் துணை ராணுவப் படையினர் நடத்திய ட்ரோன் தாக்குதலில் அங்குள்ள அறுவைச் சிகிச்சை மையம் மற்றும் மகப்பேறு பிரிவு பலத்த சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தத் தாக்குதலில், 7 மருத்துவப் பணியாளர்கள் உள்பட 10 பேர் கொல்லப்பட்டதாகவும், சுமார் 19 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து, படுகாயமடைந்தவர்கள் அனைவரும் 80 கி.மீ. தொலைவில் உள்ள மற்றொரு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முன்னதாக, சூடானின் ராணுவத்துக்கும் துணை ராணுவப் படைக்கும் இடையே கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இதையடுத்து, சமீபகாலமாக சூடானில் உள்ள மருத்துவக் கட்டமைப்புகளைக் குறிவைத்து ஆர்.எஸ்.எஃப். படையினர் தாக்குதல் நடத்தி வருவதாகக் குற்றம்சாட்டப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் மட்டும் சூடானில் உள்ள மருத்துவ மையங்களைக் குறிவைத்து 200-க்கும் அதிகமான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக, உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், சுமார் 3 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்தப் போரில் இதுவரை 40,000-க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த பிரான்ஸின் சரக்கு கப்பல்! போர்க் காலத்தில் முதல்முறை!

**வாஷிங்டன், ஏப்.4:**

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பல் ஒன்று ஹோர்முஸ் நீரிணையை வெற்றிகரமாகக் கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக, வளைகுடா நாடுகளின் முக்கிய கட்டமைப்புகள் மீது ஈரானின் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

மேலும், சர்வதேச எண்ணெய் விநியோகத்தின் முக்கிய வழிப்பாதையான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் முடக்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அவர்களின் கூட்டாளிகளுக்குச் சொந்தமான கப்பல்களுக்கு ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல அனுமதியில்லை எனவும், அனுமதியின்றி செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் எனவும் ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில், மால்டா நாட்டின் கொடியுடன் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சி.எம்.ஏ. சி.ஜி.எம். எனும் நிறுவனத்துக்குச் சொந்தமான சரக்கு கப்பல் ஒன்று வெள்ளிக்கிழமை (ஏப். 3) அன்று ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து ஓமன் நாட்டுக்கு வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், போர் தொடங்கியது முதல் ஹோர்முஸ் நீரிணையை பிரான்ஸ் நாட்டுடன் தொடர்புடைய சரக்கு கப்பல் ஒன்று முதல்முறையாகக் கடந்துள்ளது.

இருப்பினும், இதுகுறித்து அந்த நிறுவனத்தின் தரப்பிலிருந்து எந்தவொரு கருத்தும் வெளியாகவில்லை எனக் கூறப்படுகிறது. மேலும், ஹோர்முஸ் நீரிணை முடக்கப்பட்டது முதல் அவ்வழியாகச் செல்லும் கப்பல்களின் போக்குவரத்து 90 சதவிகிதம் குறைந்துள்ளது.

முன்னதாக, ஈரான் மீதான தாக்குதலுக்கு அமெரிக்க போர் விமானங்கள் பிரான்ஸின் வான்வழிப் பாதையைப் பயன்படுத்த அந்நாட்டு அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. இதனால், பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமான கப்பலை ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல ஈரான் அனுமதித்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது.

## ஈரானில் இரு நகரங்களை இணைக்கும் புகழ்பெற்ற பி1 பாலத்தை தகர்த்த அமெரிக்கா

**தெஹ்ரான், ஏப்.4:**

ஈரான் கராஜ் நகரை தெஹ்ரானுடன் இணைக்கும் மிகப்பெரிய பி1 பாலத்தை தாக்கி அழித்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையேயான போர் ஒரு மாதத்தை கடந்து தொடர்ந்து வருகின்றது. போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா விடுத்த அழைப்பை ஏற்க மறுத்த ஈரான், போர் பாதிப்புக்கு இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளது.

இந்த நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் மிக உயரமானப் பாலமாகவும் ஈரானின் பொறியியல் அடையாளச் சின்னமாகவும் விளங்கும் கராஜை தலைநகர் தெஹ்ரானுடன் இணைக்கும் பி1 பாலத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக டிரம்ப் அறிவித்துள்ளார்.



இதுதொடர்பாக காணொலியை வெளியிட்டு டிரம்ப் தெரிவித்ததாவது, "ஈரானின் மிகப்பெரிய பாலம் இடிந்து விழுகிறது, இனி அது ஒருபோதும் பயன்பாட்டுக்கு வராது. இதுபோன்ற பல நிகழ்வுகள் தொடரவுள்ளன. ஒருவேளை எதிர்காலத்தில் மாபெரும் நாடாக உருவெடுக்கக்கூடிய ஈரானில் எஞ்சியிருக்கும் அனைத்தும் அழிந்துபோவதற்கு முன்பாக, தாமதப்படுத்தாமல் ஒரு ஒப்பந்தத்தை செய்துகொள்வதற்கான நேரம் இது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தாக்குதலில் 8 பேர் பலியானதாகவும், 95 பேர் காயமடைந்ததாகவும் அல் ஜசீரா ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், இஸ்ரேல் தலைநகர் டெல் அலிவ் மீது ஏவுகணைத் தாக்குதலை ஈரான் பாதுகாப்புத் துறை தொடங்கியுள்ளது.

## பாகிஸ்தானில் பெட்ரோல், டீசல் விலை 50% உயர்வு: உடனடியாக அமல்

**இஸ்லாமாபாத், ஏப்.4:**

பாகிஸ்தானில் பெட்ரோல் மற்றும் டீசல் உள்ளிட்ட எரிபொருளின் விலை சுமார் 50 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலையேற்றம் இன்று முதல் அமலுக்கு வருவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சர்வதேச நாடுகளில் கச்சா எண்ணெய்க்கு தட்டுப்பாடு நிலவுகிறது. மேற்காசியாவில் நிலவும் போரை விரைந்து முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென உலக நாடுகள் விரும்புகின்றன. இருப்பினும் அங்கு மோதல் தொடர்ந்து வண்ணம் உள்ளது. இந்த நிலையில்தான் பாகிஸ்தானில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வியாழக்கிழமை அன்று வெளியான அறிவிப்பில் பாகிஸ்தான் பெட்ரோலிய துறை அமைச்சர் அலி பெர்வைஸ் மாலிக், "அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரான் போர் காரணமாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது.

அதன் காரணமாக நம் தேசத்தில் எரிபொருளின் விலையை உயர்த்த வேண்டி உள்ளது. நமக்கான எரிபொருள் ஆதாரம் மிகவும் குறைந்த அளவில்தான் கிடைக்கிறது. அதனால் இதை தவிர்க்க முடியவில்லை," என அரசு செய்து தொலைக்காட்சியில் அவர் தெரிவித்தார். அப்போது அவருடன் பாகிஸ்தான் நிதி அமைச்சர் முகமது அவுரங்கசீப் இருந்தார்.

பாகிஸ்தானில் பெட்ரோல், டீசல் விலை எவ்வளவு? - பாகிஸ்தான் ரூபாயில் டீசல் விலை சுமார் 54.9 சதவீதம் உயர்த்தப்பட்டு தற்போது ஒரு லிட்டர் 520.35-க்கு விற்பனை ஆகிறது. பெட்ரோல் விலை சுமார் 137.24 ரூபாய் உயர்த்தப்பட்டு ஒரு லிட்டர் பெட்ரோல் 458.41 பாகிஸ்தான் ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. அங்கு பெட்ரோல் விலை 42.7 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு (வெள்ளிக்கிழமை) முதல் அமலுக்கு வந்துள்ளது.

## இந்திய நண்பர்கள் பத்திரமாக உள்ளனர்: ஈரான் உறுதி

**தெஹ்ரான், ஏப்.4:**

இஸ்ரேல், அமெரிக்காவின் தாக்குதலைத் தொடர்ந்து, சர்வதேச கடல்வழிப் போக்குவரத்துப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடி உள்ளது. இதனால் இந்தியா உட்பட பல நாடுகளுக்கு எரிசக்தி விநியோகத்தில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்தியாவில் உள்ள ஈரான் தூதரகம் எக்ஸ் தளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், "எங்களது இந்திய நண்பர்கள் பாதுகாப்பான கரங்களில் உள்ளனர், கவலை வேண்டாம்" என குறிப்பிட்டுள்ளது.

உலகின் 20% எரிசக்தி விநியோகம் நடைபெறும் முக்கிய வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தி ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த மாதம் போர் தொடங்கியதிலிருந்து, மிகக் குறைந்த அளவிலான கப்பல்களே இந்தப் பாதையைக் கடக்க ஈரான் அனுமதி அளித்துள்ளது.

குறிப்பாக இந்தியா, சீனா, ரஷ்யா, ஈராக் மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நட்பு நாடுகளுக்கு மட்டும் ஹார்முஸ் வழியாகச் செல்ல அனுமதி வழங்கியுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் பொதுப் போக்குவரத்து இலவசம்

**இஸ்லாமாபாத், ஏப்.4:**

பாகிஸ்தானில் அடுத்த 30 நாட்களுக்கு பொதுபோக்குவரத்துகள் இலவசமாக இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சர்வதேச நாடுகளில் கச்சா எண்ணெய்க்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலையில் பாகிஸ்தானில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் மற்றும் பஞ்சாப் மாகாணத்தில் அடுத்த 30 நாட்களுக்கு பொதுப் போக்குவரத்துகள் இலவசமாக இயக்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

மத்திய கிழக்குப் போரால் அந்நாட்டில் கடுமையான எரிசக்தி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# அமெரிக்காவின் இரண்டாவது F-35 போர் விமானத்தை சுட்டு வீழ்த்திவிட்டோம்: ஈரான்

**தெஹ்ரான், ஏப்.4:**

அமெரிக்காவின் மிகவும் மதிப்புமிக்க போர் விமானங்களில் ஒன்றான F-35 விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக தெரிவித்துள்ள ஈரான், அந்த விமானத்தில் இருந்த பைலட் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்றும் கூறியுள்ளது.

இது தொடர்பாக ஈரானின் மெஹர் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், மத்திய ஈரானில் பறந்த அமெரிக்காவின் ஐந்தாம் தலைமுறை F-35 ரக போர் விமானம், ஈரான் விமானப் படையின் புதிய வான் பாதுகாப்பு அமைப்பு மூலம் தாக்கப்பட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த தாக்குதலுக்குப் பிறகு விமானம் பலத்த சத்தத்துடன் கீழே விழுந்தது. அப்போது ஏற்பட்ட பெரு வெடிப்பைக் கருத்தில் கொண்டால், விமானி உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மும்பையில் உள்ள ஈரான் தூதரகமும் உறுதிப்படுத்தி இருக்கிறது. அது குறித்த எக்ஸ் பதிவில், 'எதிரியின் மற்றொரு F-35 விமானம் நமது உள்நாட்டு பாதுகாப்பு அமைப்புகளால் தாக்கப்பட்டு வீழ்த்தப்பட்டது. ஈரான் ஒரு வலிமையான சக்தி' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த மார்ச் 19-ம் தேதி அமெரிக்காவின் F-35 விமானத்தை ஈரான் சுட்டு வீழ்த்தியது. இத்தகைய போர் விமானத்தை சுட்டு வீழ்த்திய உலகின் முதல் நாடு தாங்கள்தான் என அப்போது ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், அமெரிக்காவின் இரண்டாவது F-35 போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

இதனிடையே, குவைத்தில் உள்ள மினா அல் அஹ்மதி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை ஈரானின் ஆளில்லா விமானங்கள் தாக்கின. இதனை உறுதி செய்த குவைத் அரசுக்குச் சொந்தமான குவைத் பெட்ரோலியம் கார்பரேஷன், இந்த தாக்குதலால் அங்கு பலத்த தீ விபத்து ஏற்பட்டதாகவும், தீயைக் கட்டுக்குள் கொண்டுவர தீயணைப்புக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.



மேலும், இந்த விபத்தால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் அந்நிறுவனம் கூறியுள்ளது. இந்த சுத்திகரிப்பு நிலையம் ஏற்கனவே பலமுறை தாக்கப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் தாக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மேற்கசிய மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குத்தரேஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "எனது செய்தி தெளிவானது. மனிதர்களுக்கு அளவற்ற துன்பத்தை விளைவித்து, பொருளாதார பேரழிவுக்கான விளைவுகளைத் தூண்டும் இந்த போரை அமெரிக்காவும் இஸ்ரேலும் நிறுத்த வேண்டும். போரை நிறுத்த இதுவே சரியான தருணம். அதேபோல், ஈரான் தனது அண்டை நாடுகளை தாக்குவதை நிறுத்த வேண்டும்.

தலைவர்கள் அழிவை விடுத்து, உரையாடலைத் தேர்ந்தெடுக்கும்போது மோதல்கள் முடிவுக்கு வரும். அதை தேர்வு செய்வதற்கான தருணம் இன்னமும் இருக்கிறது. அதை இப்போதே செய்ய வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

## பாஜக காங்கிரஸ்

# வேட்பாளர் பட்டியல் வெளியீடு





# புதுச்சேரியில் ‘ரோடு ஷோ’ நடத்திய பிரதமர் மோடி





# ஒய்வின்றி உழைக்கும் கழகத்தின் செயல்வீரர்களுக்குப் பாராட்டுகள்!

# 5 ஆண்டுகளில் தினமும் 20 இந்தியர்கள் வெளிநாடுகளில் உயிரிழப்பு

## கடந்த மார்ச்சில் யுபிஐ பரிவர்த்தனை 24 சதவீத வளர்ச்சி: புதிய உச்சம்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

04.04.2026 சனிக்கிழமை

இலவச இ-பேப்பர்